# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (04.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 282




07

வெட்டுக்குழி நீர்த்தேக்கத்துக்கு அணைக்கட்டு



09

எழுதாத பேனாக்கள்



23

என்றும் மகிழ்ச்சி நிலைக்கும்



25

தொடரும் தோல்விகள்



## இராணுவத்தினரை உடனடியாக முகாம்களுக்குள் முடக்குங்கள்

### சரவணபவன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, செப். 04

மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியிலிருந்து இராணுவத்தினரை அகற்றி அவர்களை பிரதான முகாம்களுக்குள் மட்டும் முடக்குவதே, யாழ்ப்பாணத்திலும் வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் இன்று காணப்படும் குழப்ப நிலைகளைத் தீர்க்க இருக்கும் ஒரே வழி. அதனைச் செய்யவில்லையேல், மக்கள் கிளர்ந்து இந்தப் பகுதிகளில் மீண்டும் ஒரு வன்முறை ஏற்படவே அது வழிவகுக்கும். ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலரும் இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு இராணுவத்தினரை பிரதான முகாம்களுக்குள் முடக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார். மானிப்பாய் பகுதி

பக் 31

## சீனி, உப்பு சாப்பிடுவதை குறைக்க அறிவுறுத்து

கொழும்பு, செப்.04

உணவில் சீனி மற்றும் உப்பின் அளவைக் குறைத்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களுக்கு அறிவுறுத்தி உள்ளது.

புதிய உணவுச் சட்டத்தின் கீழ் நாட்டில் இனிப்பு மற்றும் உப்பின் பாவனையைக் குறைப்பதற்கான விதிமுறைகளை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இனிப்பு மற்றும் உப்

பக் 03

## எஸ்எம்எஸ்இல் பொலிஸ் 'கிளியரன்ஸ்'

கொழும்பு, செப்.04

வெளிநாடு செல்வதற்கான பொலிஸ் 'கிளியரன்ஸ்' பெற விண்ணப்பித்தவர்கள் அதன் முடிவு குறித்து இனி குறுந்தகவல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பொலிஸ் 'கிளியரன்ஸ்' பெற விண்ணப்பித்தவர்கள் வரும் காலங்களில் தமது விண்ணப்பங்கள் எந்த நிலையில் பரிசீலிக்கப்படுகின்றன என்பன பற்றி எஸ்.எம்.எஸ். மூலம் அறிந்து கொள்ள முடியும் என்று பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

பி.எல்.சி.டி.ஆர்.பி. (PLCDRP) என்று ரைப் செய்து அதனருகில் விண்ணப்ப இலக்கத்தைக் குறிப்பிட்டு 1919 என்ற எண்ணுக்கு அனுப்பி வைத்தால் சிறிது நேரத்தில் பதில் அனுப்பப்படும் என்றும் பொலிஸ் அதிகாரி கூறினார். (உ)

# பாயத் தயார்: பயங்கரவாத தடைச் சட்டம்

### நாவாந்துறை மக்களே முதல் இலக்கு

கொழும்பு, செப்டெம்பர் 04

**நாவாந்துறையில் சந்தேகநபர் ஒருவரைத் துரத்திச் சென்ற மக்களுக்கும் படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலை அடுத்துக் கைது செய்யப்பட்ட 100 பேர் மீதும், இராணுவ முகாமைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்புஆராய்ச்சி தெரிவிக்கிறார்.**

பி.பி.ஸி. சிங்கள சேவையான சந்தேசியவுக்கு வழங்கிய பேட்டியிலேயே இராணுவப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

அவரது செவ்வியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

கே: குடாநாட்டில் 'கிறீஸ் பூத' அச்சம் ஏற்பட்டுள்ளதே?

ப: வடக்கிலோ தெற்கிலோ கிறீஸ்

பக் 03

தொடரும் தாக்குதல்கள்



உடுவில் ஆலடிப் பகுதியில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட பொதுமக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று நேரில் சென்று சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார்.

## உடுவிலில் இராணுவம் தாக்கி பொதுமக்கள் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.04

உடுவில் ஆலடிப் பகுதியில் வீதிக்கு வந்த பொதுமக்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிப் பிடி மற்றும் கொட்டன்களால் தாக்கப்பட்டதில் மோசமான காயங்களுக்கு உள்ளான மூவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்றுமாலை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சந்தேகப்படும்படியாக நடமாடிய நபர்களைத் துரத்திச் சென்றபோதே இராணுவத்தினர் திடீரென வந்து தங்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர் என்று அந்தப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் தெரிவித்தனர்.

நேற்றுப் பகல் நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் சென்று அந்த மக்களைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார். இராணுவத்தினர் கை, கால்களில் மட்டுமன்றி தமது பிறப்பு உறுப்புக்களை இலக்கு வைத்தும் தாக்கினர் என்று மக்கள் முறையிட்டனர்.

தாக்குதலின் பின்னர் தாம் பிடித்த மூவரை இராணுவத்தினர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். ந.குபேரன் (வயது 38), ச.உதயகுமார் (வயது 42), ச.விஜயகுமார் (வயது 40) ஆகியோரே நீதிமன்றின் முன் கொண்டு வரப்பட்டனர்.

அவர்கள் மூவரையும் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். எதிர்வரும் செவ்வாய்க் கிழமை

பக் 31

## ஜெனீவாவில் போர்க்குற்றச் சவாலைச் சமாளிக்க யாழ். அரச அதிபரையும் சாட்சியாக்குகிறது அரசு

யாழ்ப்பாணம், செப்.04

இந்த மாத நடுப்பகுதியில் ஜெனீவாவில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் மாநாட்டில், இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படும் என்று தீவிரமாக எதிர்பார்க்கப்படும் நிலையில், நிலைமையைச் சமாளிக்க யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை நேரடி சாட்சியாகக் களம் இறக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக தற்போது இந்தோனேஷியத் தலைநகர் மணிலாவில் தற்போது நடைபெற்றுவரும் உலக உணவுத்திட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டுள்ள இமெல்டா, அங்கிருந்து நேரடியாக ஜெனீவா செல்வார் என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வன்னியில் போர் தீவிரமாக நடைபெற்ற காலப் பகுதியில் முல்லைத்தீவில் இறுதிவரை கடமையாற்றியவர் அப்போது அங்கு அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார். எறிகணைத் தாக்குதலில் காயமடைந்தும் இருந்தார்.

எனவேதான் அவரை இறுதிப் போர் குறித்த அரச தரப்பு சாட்சியாக ஜெனீவாவில் முன்நிறுத்த அரச தரப்புத் தீர்மானித்துள்ளது. போரின் நேரடிச் சாட்சி என்ற வகையில் அரசு மீதான குற்றச்சாட்டுக்களைத் தமிழர் ஒருவரை வைத்தே முறியடிக்க அரசு இராஜதந்திர ரீதியில் திட்டமிட்

பக் 31


குறைந்த கட்டணத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள...

Call 0777380557 0773629519

AiR MARK Travels & Tours

IATA

தனித்துவமான வடிவங்களைக் கொண்ட டைல் வகைகளுக்கு.



Open Every Day

நவீன் செரமிக் Naveen Ceramic

#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் #5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்


021 222 0033 / 021 222 0044 021 222 4777 / 021 222 4888

Metro Engineering (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com



அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேக மூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்

# சாவகச்சேரி நகரை சுத்தமாகப் பேண புதிய நடைமுறைகள் நாளை முதல்

## நகரசபை நடவடிக்கை

தென்மராட்சி, செப்.04

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை குப்பைகளற்ற சுத்தமான, பசுமையான பகுதியாக மாற்றும் திட்டத்தின் முன்னோடியாக வீடுகளிலும் நிறுவனங்களிலும் சேரும் திண்மக் கழிவுகளை சுற்றாடலுக்குப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அகற்றுவதற்கு நகரசபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடைமுறை நாளை திங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வருவதால் பிரதேச மக்கள் பின் வரும் வகைகளில் கழிவுகளை நகரசபை வாகனம் வரும் இடங்களில் வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்கக்கூடிய இலை, குழை, சருகுகளை தனியாகவோ அல்லது ஆட்டெரு, மாட்டெருவுடன் சேர்ந்த கூட்டெரு முறையில் பசளையாக்கி தமது காணிகளில் புதைக்க முடியாதவர்கள் அவற்றினை உரப்பைகளிலிட்டும் கண்ணாடி மாபிள் கழிவுகளை தனியாகவும் சேகரித்து நகரசபை கழிவகற்றும் வாகனங்களில் எடுக்கக்கூடிய இடங்களில் வைக்குமாறும் பின்வரும் தினங்களில் நகரசபை கழிவகற்றும் வாகனங்கள் வருகை தருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு முன்னர் உரிய இடங்களில் கழிவுப்பொருள்களை வைக்குமாறும் அத்துடன் நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன்களையும் கழிவகற்றும் வாகனங்களில் கையளிக்குமாறும் கேட்டுள்ளார்.

பிரதி திங்கட்கிழமைகளில் முதலாம், மூன்றாம் வட்டாரங்களிலும் செவ்வாய்க்கிழமைகளில் இரண்டாம், பதினொராம் வட்டாரங்களிலும் புதன்கிழமைகளில் நான்காம் ஐந் தாம் வட்டாரங்களிலும் வியாழக்கிழமைகளில் ஒன்பதாம், ஏழாம் வட்டாரங்களிலும் வெள்ளிக்கிழமைகளில் எட்டாம், பத்தாம் வட்டாரங்களிலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஒன்பதாம் வட்டாரத்திலும் வாகனங்களில் கழிவு அகற்றப்படும் எனவும் பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற உக்காத கழிவுகளை புதைப்பதையோ எரிப்பதையோ அல்லது கண்ட இடங்களில் வீசுவதையோ தவிர்த்துக் கொள்ளுமாறும் பிரதேச மக்களை நகரசபைத் தலைவர் கோரியுள்ளார். (த-207)

# மின்தடை

யாழ்ப்பாணம், செப்.04

வீதி அகலிப்பு மற்றும் உயர் மின்விநியோகப் பணிகள் இடம் பெறுவதால் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை இணுவில், உடுவில், மருதனார் மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பகுதி, யாழ்.பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை உரும்பிராய் பிரதேசம், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (த-313)

# இரத்த தானம்

கொழும்புத்துறை, செப்.4

சர்வதேச இளையோர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி புனித லிகோறியார் பங்கு இளைஞர்கள் இரத்ததான நிகழ்வை மேற்கொண்டனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் 40 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் குருதிக்கொடையில் ஈடுபட்டனர். சாவகச்சேரி பங்குத் தந்தை இரத்ததான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தார். (த-135)

# நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை சீராக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப். 4

நெடுந்தீவு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழ் சாராப்பிட்டியில் இருந்து பிரதேச சபையின் குடிதண்ணீர்த் தொட்டிக்கு நீரை வழங்கும் பிரதான விநியோகக் குழாய்கள் புதிதாகப் பொருத்தப்படவுள்ளன.

ஏற்கனவே சாராப்பிட்டியில் இருந்துவரும் நீர் விநியோகக் குழாய்கள் சேதமடைந்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய குழாய்களை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாராப்பிட்டியில் இருந்து மூன்று மைல்கள் தூரம் வரையான வெட்டுக்களி பகுதி வரை விநியோகக் குழாய்களைப் பொருத்துவதற்கான வாய்க் கால்கள் தற்சமயம் இயந்திரங்களின் உதவியுடன் வெட்டப்பட்டு வருகின்றன.

நீர் விநியோகக் குழாய்களை விரைவில் பொருத்தி நெடுந்தீவுக்கான குழாய் நீர் விநியோகச் சேவையை சீராக்க பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (த-7)

# சங்கானையில் பட்டப்பகலில் 30 ஆயிரம் ரூபா கொள்ளை

சங்கானை,செப்.4

சங்கானை மக்கள் வங்கியில் 30 ஆயிரம் ரூபாவுக்குத் தங்க நகைகளை அடைவு வைத்துகொண்டு வீட்டுக்கு செல்லும் வழியில் பெண் ஒருவர் அதனைப் பறிகொடுத்த சம்பவம் ஒன்று நேற்று சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் சங்கானையில் இடம்பெற்றுள்ளது.

பாரதி வீதி, சங்கானையைச் சேர்ந்த ஜெயசிங்கராசா பத்மராணி என்பவர் நகைகளை அடைவு வைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்ற வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரது வீட்டுக்கு அண்மையில் வைத்து இவரைத் தள்ளி வீழ்த்திவிட்டு பணத்துடன் அடைவு துண்டு உள்ள பையை அபகரித்துச் சென்றுள்ளனர்.

தான் கடன் வாங்கிய ஒருவருக்கு கொடுப்பதற்காக இந்தப் பணத்தை தனது நகைகளை அடைவு வைத்துப்பெற்றதாக அவர் மிகவும் கவலையுடன் தெரிவித்தார். (த)

# ஆங்கில கற்கை நெறி

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்ப்பாணம் ஸ்ரெப் கல்வி நிறுவனத்தால் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறிகள் ஒக்ரோபர் மாதம் நடத்தப்படவுள்ளன.

ஆர்வமுடைய மாணவர்கள் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (த-313)

# மர்ம மனிதரைக் கலைத்துச் சென்ற வீட்டுக்காரருக்கு விழுந்தது தர்ம அடி

வலி வடக்கு, செப்.4

சந்தேகத்துக்கிடமான ஒருவர் வீட்டு வளவில் நடமாடியதை அவதானித்த வீட்டுக்காரர் அவரை வீட்டின் பின் புறமாகக் கலைத்துச் சென்ற போது அந்தப் பகுதிக்குக் கூக்குரல் கேட்டு ஓடிவந்த இளைஞர் குழுவிடம் அடி வாங்கினார்.

இந்தச் சுவாரஷ்ஸியமான சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இணுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த வியாழக்கிழமை இரவு இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான ஒருவரின் நடமாட்டத்தை அவதானித்த பெண்கள் கூக் குரலிட்டுள்ளனர்.

இதனையடுத்து வீட் டில் இருந்த குடும்பத் தலைவர் அந்த நபரைத்தேடி வீட்டின் பின்புறமாக இருட்டுக்குள் ஓடினார். இந்த நேரத்தில் கூக்குரல் கேட்டு ஊர் இளைஞர்களும் அந்த இடத்துக்கு ஓடிவந்தனர். அவர்களுக்கு இருட்டில் வீட்டுக்காரர் நின்றது தெரியவில்லை. ஓடிவந்த இளைஞர்கள் வீட்டுக்காரரை மர்மநபர் என நினைத்துத் தாக்கத் தொடங்கினார்கள். 'நான்தான் வீட்டுக்காரன்' என கூறியதை அடுத்தே இளைஞர்களின் அடி, உதை நின்றது பின்னர் இரு பகுதியினரும் அந்த இடத்தில் இருந்து கலைந்து சென்றனர். (த-86)

# ஏழாலை மகாவித்தியாலயத்துக்கு 75 ஆயிரம் ரூபா நிதி உதவி

வலி.வடக்கு, செப்.4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் கீழ் ஏழாலை மகாவித்தியாலயத்தின் திருத்தப் பணிகளுக்கு 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழாலை மகாவித்தியாலயம் கடந்த பல ஆண்டுகளாக பழைய கட்டடங்களில் இயங்கிவரும் நிலையில் அவற்றைத் திருத்தும் பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பாடசாலைக் கட்டடத்தின் நிலைமையை நேரில் பார்வையிட்ட பின்னர் இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் மேலும் பல தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய நிலை உள்ளதாகப் பாடசாலைச் சமூகம் தெரிவித்தது. (த-86)

# நிகழ்வுகள்

## பொதுக்கூட்டம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கல்லூரியின் அழகரத்தினம் மண்டபத்தில் தலைவர் ம.யேசுரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## நிறைவு தின விழா

யாழ்ப்பாணம் வாழுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு தினவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை 47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு வீதியில் அமைந்துள்ள சங்க விடுதிக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 6.30 மணிக்கு துவிச்சக்கர வண்டி, முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகளுடன், விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து காலை 8.30 மணி முதல் அரங்க நிகழ்வுகளாக கலைநிகழ்வுகளும், முற்பகல் 10.30 மணிக்கு வினோத உடைப் போட்டியும் இடம்பெறும்.

அத்துடன் மாற்று வலுவுடையோர்களினால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்காக புதிதாக அமைக்கப்பட்ட விற்பனை நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிறுவனம் சமூக சேவையாளர்கள் பலரினது உதவியுடனும் நிரந்தர சொந்தக் காணியையும் கட்டடத்தையும் பெற்று 21 ஆவது தினவிழாவைக் கொண்டாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ- 313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயத் தயார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூதம் என்று ஒன்றுமில்லை. இதுவரை எவரும் அப்படிக் கைது செய்யப்பட வில்லை.

கே: கோண்டாவிலில் ஒருவர் மக்களால் கைது செய்யப்பட்டிருக்கிறாரே?

ப: மக்கள் எவரையும் கைது செய்ய முடியாது. பொலிஸார்தான் கைது செய்ய வேண்டும். கோண்டாவிலில் பொலிஸார் யாரையாவது கைது செய்திருந்தால் அவர்களிடம் கேளுங்கள்.

கே: கைது செய்யப்பட்ட 120 பேர் நாவாந்துறையில் இராணுவத்தால் தாக்கப்பட்டதாக தகவல்கள் வந்துள்ளனவே?

ப: இராணுவமோ பொலிஸாரோ அவர்களைத் தாக்கவில்லை. கைது செய்யப்படுவதற்கு முன்னமோ பின்னரோ கூட அவர்கள் தாக்கப்படவில்லை.

அவர்கள்தான் இராணுவ முகாமைத் தாக்கினார்கள். பொலிஸாரையும் இராணுவத்தினரையும் தாக்கினார்கள். அவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

படையினரின் முகாம்களைத் தாக்குவது பயங்கரவாத நடவடிக்கை என்று மக்களுக்குத் தெளிவுபடுத்தி உள்ளோம்.

முகாம்களைத் தாக்கிய அவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கே: யாழ்ப்பாணத்தில் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர் என்று தகவல் வருகிறதே?

ப: எந்தப் பயமும் அங்கு இல்லை. நேரில் சென்று நிலைமையை அவதானித்துள்ளேன். எந்த அச்சமும் இல்லை. அப்படியே அச்சநிலை ஏற்பட்ட இடங்களுக்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் சென்று அமைதியை ஏற்படுத்தி உள்ளனர். கடந்த 48 மணி நேரத்தில் எந்தவொரு சம்பவம் பற்றியும் முறையிடப்படவில்லை. (உ-ஐ)

## சீனி, உப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் காரணமாக தொற்று அல்லாத நோய்கள் அதிகம் ஏற்படுகின்றன என்று எச்சரித்துள்ள அமைச்சு, சிறந்த உணவுப் பழக்கத்தின் மூலம் இத்தகைய நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சீனி மற்றும் உப்பை அதிகம் பயன்படுத்துவதற்குப் பதிலாக பழங்களையும் மரக்கறி வகைகளையும் அதிகம் உண்ணுமாறு அமைச்சு மக்களை அறிவுறுத்தி உள்ளது. (உ)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் **வல்லிபுரம் நித்தியானந்தன் (நித்தி)**



மலர்வு 04-05-1946 உதிர்வு 06-08-2011

06.08.2011 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் தெரிவித்தும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டும் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (05.09.2011) திங்கட்கிழமை காலை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

இல.19, விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
சிவசக்தி மருந்தகம் பின்புறம், கேணியடி,நெல்லியடி,
தொ.பே.:0212262020, 0773655339

குடும்பத்தினர்.



YOUR ROYAL AUTO MOBILES

3M



★ Car கழுவுதல் ★ Vacuum மூலம் மண் தூசு அகற்றுதல்
★ Carpet கழுவுதல் ★ பாதுகாப்பான சுத்தப்படுத்தல்
★ உட்சுத்தப்படுத்தும் இருக்கைகள் சுத்தப்படுத்தலும்
★ இயந்திரம் மூலம் வெளிப்புறம் Polish செய்தல்




வாகன உரிமையாளர்களின் நீண்டகால தேவை பூர்த்தியாக்கப்படுகின்றது

★ கொழும்பைச் சேர்ந்த அனுபவம் மிக்க பணியாளர்களின் சேவை
★ நீங்கள் வேலை முடிந்து வீடு செல்லும்போது வசதியாக இரவு 7.30 மணிவரை சேவை.
★ஞாயிறு, போயா விடுமுறைகளிலும் திறந்திருக்கின்றோம்



158 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 4894 (யாழ்.சத்திரச் சந்திக்கும் கொட்டடிச் சந்திக்கும் இடையே)




# சந்தியடிச் சோமு

## பெண்களைத் தொடரும் பிரம்மராட்சதரும்

''பில்லிசூனியம் பெரும் பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழுக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
**பெண்களைத் தொடரும் பிரம்மராட்சதரும்**
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட....''

இப்பிடித்தான் கொட்டில்ல ஒருத்தர் குளறிக் கத்தினார். அந்தாளின்ர முகத்தில ஒரே பயமும் குழப்பமும். இதப் பாத்துப்போட்டு நான் சந்தியில வந்து சொன்னன். அதைக்கேட்ட கனகண்ணை, ''எல்லாப் பேயளையும் அவிட்டு விட்டிட்டு துவக்கப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறாங்கள் அறுவார்'' என்றார்.

''சண்டாளக் கூட்டம் பேயாட்டம் ஆடுதுகள் பாருங்கோ. சின்னன் பெரிசு எல்லாம் பேதலிச்சுப் போய் நிக்குதுகள். எங்களைச் சீரழிக்கிறதுக்கு எண்டே பிறப்பெடுத்திருக்கிறாங்கள்'' இது கதிரண்ணையின்ர கொதிப்பு.

''குடாநாட்டில் ஐம்பதினாயிரம் பேர் ஏ.கே–47 இல்லாட்டி ரி–51 பிடிச்சுக்கொண்டு றோட்டு றோட்டா நிக்கினம். சனத்தொகையோட ஒப்பிடேக்க ஒன்பது பத்துப்பேருக்கு ஒருத்தன் துவக்கோட நிக்கிறான். இருந்தாலும் உந்தப் பூதத்த பிடிக்கேலாமல் நிக்கினமாம்'' என்றார் கம்பஸ் வாத்தியார். ''பூதங்களோட பூதங்களுக்கு கொண்டாட்டம். பிறகு எது எதைப் பிடிக்கிறது?'' இது நடேசரின்ர எகத்தாளம்.

''உந்தப் பேய் விளையாட்டு இன்டைக்கு நேற்றைய விசமில்லைப் பாருங்கோ. ஜே.ஆர். அண்டைக்கே சொன்னவன் தமிழனை அழிக்க எந்தப் பேயோடையும் கூட்டு சேரத் தான் தயாரென்று. அவன் சொல்லிப் போட்டுப் போட்டான் இவங்கள் செய்து காட்டுறாங்கள். அண்டையில இருந்து இண்டைவரைக்கும் பேயளோட கூட்டுச் சேர்ந்தே எங்கட பிள்ளையளைத் தின்னுறாங்கள். பொம்பிளைப் பிள்ளையளைச் சீரழிச்சாங்கள், ஏவல் பேய்களை உலாவ விட்டு இல்லாதது பொல்லாதது எல்லாத்தையும் செய்தாங்கள். கடைசியா முள்ளி வாய்க்காலில பக்கத்து வீட்டு கிழட்டு பேயோட சேர்ந்து ஆடின பேயாட்டத்தோட எல்லாம் முடிஞ்சுதெண்டு பாத்த, இப்ப திருப்ப தொடங்கீட்டாங்கள்'' எண்டு தன்ர பரந்த வாசிப்பு அறிவை எடுத்து விட்டார் கதிரண்ணை.

''வழமையா எல்லாத்துக்கும் திறப்பு விழா மாலை தம்பட்டங்கள் எண்டு முன்னுக்கு நிக்கிற வெள்ளை வேட்டி அமைச்சர் பரிவாரங்கள் இப்ப என்ன செய்யினமாம்? அவையிருக்கிற பக்கம் உந்தப் பூதக் கதையளைக் காணேல்லை...'' எண்டு நான் இழுக்க, உடன கந்தையர் சொன்னார், ''எல்லாம் செற்றப் கேம் பாருங்கோ. வெருட்டி வைச்சாத்தானே வேட்டியோட சீவியம் நடத்தலாம். அல்லாட்டி சனம் கேள்வி கேட்டு நியாயம் பிளக்க ஆரம்பிச்சிடுமெல்லே..?'' எண்டார்.

''வழமையா என்ன நடந்தாலும் வேட்டிய மடிச்சுக்கட்டுற அமைச்சர். இப்ப தியட்டருக்குள்ளேயே பதுங்கி கிடக்கிறாரென்றா என்ன அர்த்தம்? சொல்லுங்கோ பாப்பம். தான் சீவிக்க அவரும் எத்தப் பூதத்தோடயும் கூட்டுச்சேர தயாராகிட்டார் என்றதுதானே அர்த்தம்'' இது கொதியில நின்ற கனகண்ணையின்ர கருத்து.

நான் எனக்குள்ள நினைச்சுக் கொண்டன், இவர் கெதியில இருட்டில பிரடரியில் இரும்புக் கம்பியால வாங்கப் போறார் எண்டு. ஆனால் வெளியில சொல்லயில்லை. சொன்னா ஒரு அரை மணித்தியாலத்துக்கு அந்தாள் அ.... இருந்து எல்லாரையும் கெட்டவார்த்தையால பேசும்.

இந்தக் கதையளக் கேட்டுக் கொண்டிருந்த கடைக்காரத் தம்பி சொன்னான், ''சந்தியில சந்திச்சு பேசிற எல்லாருமே பூதம் பூதம் மென்று பேதலிக்குதுகள். மரத்திலயிருந்து பாயுதாம், காலில ஸ்பிறிங் கட்டிக் கொண்டு வீட்டுக்கு வீடு பாயுதாம். துரத்த உடனேயே பாய்ந்து மரத்தில ஏறுதாம். வீட்டுக்க கறுப்பு உடுப்போட எட்டியெட்டி பார்க்குதாம். இப்படி பலவிதமான உண்மைக் கதைகள், கட்டுக்கதைகள் எல்லாம் உலாவுது. பொம்பிளையளோட சேட்டையும் விடுகுதுகளாம்'' எண்டான் தம்பி.

''அதைவிட முக்கியமானது என்ன தெரியுமே விழிப்புக் குழு அமையுங்கோ எண்டு வீடு வீடாப் போய் சொல்லி கூட்டிக் கொண்டுவந்து விழிப்புக் குழு அமைச்சவையாம். குழு அமைச்ச அண்டைக்கு இரவு கிறீஸ் பூதம் வருமாம். சனங்கள் விட்டுத் துரத்துவினமாம் இந்த நேரம் பார்த்து தயாரா இருக்கிற ட்ரக்குகள் இரண்டில ஏ.கே.–47களோட வந்து, கூடிநிக்கிற எல்லாருக்கு அடி விழுமாம். இந்தச் சூத்திரத்தை வைச்சுத்தான் எல்லாம் நடக்குதாம்'' எண்டு நானும் எனக்குத் தெரிஞ்சதுகளை எடுத்து விட்டன்.

''வல்ல பூதங்களை துவம்சம் செய்ய ஒரு முருகன் வராமலே போகப் போறார்'' எண்டார் கனகண்ணை.

''தந்தை செல்வா சொன்னது போல தமிழனைக் கடவுள்தான் காப்பாத்த வேணும்'' எண்டபடி நானும் பூதப் பயத்தில நேரத்தோட சந்தியவிட்டுக் கிளம்ப வந்திட்டன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நகர சபை சாவகச்சேரி

### டெங்கு ஒழிப்பு அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தீவிரமாக பரவி வருவதால் அதனைத்தடுக்கும் பொருட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுளம்பு பெருகக் கூடிய அனைத்து பற்றைக் காணிகளும் பராமரிப்பற்ற ஆதனங்களும் இந்த அறிவித்தல் வெளியான திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் துப்புரவு செய்யப்பட வேண்டுமென ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் துப்புரவு செய்யப்படாத ஆதனங்கள் நகர சபையின் டெங்கு ஒழிப்பு பிரிவினரால் துப்புரவு செய்யப்படுவதோடு, அதற்கான செலவினத்துடன் தண்டப் பணத்தையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்காத ஆதன உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர் மீது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படுமென்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

''டெங்கு அபாயமற்ற சுற்றாடலை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்''

இ.தேவசகாயம்பிள்ளை,
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி.

04.09.2011 (சி/2821)

## ஐந்தாம் ஆண்டுகள் நினைவில்



அமரர் தம்பிராசா அந்தோனிப்பிள்ளை

மண்ணில் 27.05.1931 விண்ணில் 04.09.2006

நீங்கள் வாழ்ந்த காலமும் நீ
ங்காத உங்கள் நினைவுகளும்
காதுகளில் ஒலிக்கும் உங்கள் குரலும்
தளராத மனமும்
நிமிர்ந்த நடையும் எம் நி
னைவை விட்டு நீங்க
வில்லை என்றும் எம் வாழ்வி
ல் நிலைத்து நிற்கும் உங்கள் நினைவு

ஆண்டுகள் ஐந்து ஆகியும் - பப்பா
உங்கள் நினைவு ஆறவில்லை
எம் தெய்வமே - எம்
ஊரின் பெரும் பணியாளனே
எமை நீங்கள் பிரிந்தாலும் - எம்
உயிர் உள்ள காலம் வரை - உம்
நினைவுகள் எம்முடன் வாழும் - எம்
ஊர் உள்ளவரை ஊரார் உள்ளத்தில் - உம்
பணி என்றும் போற்றப்படும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(7566) மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

## விற்பனைக்கு

இரண்டு கம்பிக் கோழிக்கூடுகள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :- 0750411027

## Home for Rent

Excellent Home for Rent at Navaly, Manipay. Possible can use as OFFICE and RESIDENT too.
Minimum 2 yrs.
Maximum 5 yrs. Contract.
12 minutes to Jaffna city.
Tel: 0778350478

## தேவை

### விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள்

Richlife Dairies Limited ஆகிய நாம் இலங்கையில் பால்பொருள் உற்பத்தியிலும் மற்றும் பழங்கள் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ள முன்னோடி நிறுவனமாகும். SLS மற்றும் ISO தகுதி சான்றிதழ் பெற்றவர்கள்.

மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, கல்முனை மற்றும் பொலன்னறுவ ஆகிய பகுதிகளில் FMCG அனுபவமுள்ள விநியோகஸ்தர்களையும் விற்பனைப் பிரதிநிதிகளையும் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

**விநியோகஸ்தருக்கான தகைமைகள்**
மீள் விநியோகத்துக்குத் தேவையான குளிர் சாதனமுள்ளவர்களாகவும், குளிரூட்டப்பட்ட களஞ்சிய மற்றும் மீள் குளிரூட்டலுக்கான வசதிகள், விற்பனைக்கு ஏற்ற வகையான வங்கி உத்தரவாதம்.

முழு விபரங்களடங்கிய விண்ணப்பத்தினை தொடர்பு இலக்கங்களையும் குறிப்பிட்டு 7 நாள்களுக்குள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்குக.

*Sales Administration Manager,*
*Richlife Dairies Limited*
Pirivena Road, Molligoda, Wadduwa.
Tel: 038 4 284 544, Fax: 038 4 284 370
E-mail: info@richlife.lk
Web: www.richlife.lk

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சின்னையா- தங்கம்மா
(மூத்த பிரஜை நீர்வேலி)

அவர்கள் இறைபதம் அடைந்ததற்கு குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய செல்லக்கதிர்காம முருகனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

நீர்வேலி வடக்கு.

திருப்பணிச்சபை,
செல்லக்கதிர்காம, தேவஸ்தானம்.

## காணி ஒன்றை கொள்வனவு செய்தல்

### யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு

DFCCவங்கியின் கிளைகளை ஆரம்பிக்க பின்வரும் வசதிகளைக் கொண்ட காணிகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் தேவைப்படுகின்றன.

- குறைந்த பட்சம் 30 பேர்ச்சஸ் விஸ்தீரணம்
- காணியின் முன்புறம் 60-70 அடி தூரத்தில் பிரதான பாதை அமைந்திருத்தல்

ஏழு நாட்களுக்குள் சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

பதில் தலைவர் (சேவைப்பிரிவு),
DFCC வங்கி,
இலக்கம் 75/5, காலி வீதி,
கொழும்பு 03.

தொலைபேசி இலக்கங்கள் :- 0777-489503அல்லது 011-2442442

மின்னஞ்சல் :- info@dfccbank.com

(தயவு செய்து பதில் அனுப்பும் கடிதவுறையின் இடது மூலையில் "காணி விற்பனை, யாழ்ப்பாணம் / திருகோணமலை / மட்டக்களப்பு" எனக் குறிப்பிடவும்)

**தவறிவிட்டது** சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியுடைய சண்முகரத்தினம் ஸ்ரீதுஷந்தினி என்பவரின் தேசிய அ.அ. [876813599V] சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும் தனியார் பேருந்தில் பயணிக்கும் போது தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:0775440694 யுவராஜா

## கார் விற்பனைக்கு

Brand new, Doctors Used, 1st Ownner Maruti Suzuki - 800 கார் உடன் விற்பனைக்கு. Very good Condition.
தொடர்பு: 0715151959

## வீடு வாடகைக்கு உண்டு

கோயில் வீதியில் (Temple Road) சகல வசதிகளுடன் கூடிய மூன்று அறைகள் உள்ள வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. நல்லூர் கோயிலுக்கு மிகவும் அருகில்.
தொடர்பு: 0775178294, 0714221423 (7552)

## தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் பின்பக்க இலக்கத்தகடு (NPTH 0844) கல்வியங்காட்டுக்கும் கோப்பாய் சந்திக்குமிடையில் தவறிவிட்டது.
தொடர்பு - V. பிரேமராஜா, சின்னாலடி, அல்வாய் தெற்கு, அல்வாய்.
T.P:0777409588, 0776165450 (7553)



உ
காரைநகர்; வலந்தலை

## மடத்துக்கரை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில் திருப்பணி விஞ்ஞாபனம் - 2011

ஈழவள நாட்டின் வடமேல் பாகத்தின் காரை நகரின் நுழைவாயிலில் அமர்ந்து வழித்துணையாக இருந்து தன்னை நாடி வரும் அடியவர்களின் பிணிகளைப் போக்கி வேண்டும் வரம் எல்லாம் அருளும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் ஆலயம் கடந்த ஜூலை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றது. ஆலயத் தில் மேற்கொள்ளப்படவுள்ள திருப்பணி வேலைகள்,

1. மூலஸ்தானம் பழைய விமானத்தை (ஸ்தூபி) அகற்றி 9 அடி உயரத்தில் புதிதாக விமானம் அமைத்தல்.
2. 8'9'' x 8'9'' அளவுள்ள அர்த்தமண்டபம் அமைத்தல் (கருங்கல் அல்லது செங்கல்லால்)
3. மகா மண்டபம் 21'' x 36' நீள அகலமுள்ளது புதிதாக அமைத்தல்.
4. நிர்த்த மண்டபம் அமைத்தல்.
5. ஸ்தம்பம், சிம்மம், பலிபீடம் அத்துடன் ஸ்தம்பமண்டபம் அமைத்தல்.
6. வசந்த மண்டபம், விநாயகர், முருகன், நவக்கிரகம், வைரவர் ஆலயங்கள் உட்பிரகாரத்தில் அமைத்தல்.
7. மணிக்கோபுரம் அமைத்தல், யாகசாலை பாகசாலை, களஞ்சியம், அலுவலகம், வாகனசாலை, தீர்த்தக் கிணறு போன்றவை அமைத்தல்.

மேற்படி திருப்பணி வேலைகளை மேற்கொள்வதற்கு காரைநகர் புலம்பெயர் மக்களிடமும், காரைநகர் வாழ் அடியவர்களிடமும் இருந்து பொருளுதவியையும், நிதியுதவியையும் அம்பாள் சார்பாக வேண்டிநிற்கின்றோம். இவ்வுதவிகள் விரும்பினால் குறிப்பிட்ட திருப்பணி வேலைகளை உபயமாகவும் செய்யலாம். அதற்கு எம்முடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்தலாம். மேற்படி வேலைகளை விரைவாக மேற்கொள்வதற்கு வசதியாக எமது காரைநகர் இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் இலக்கம் : 72027466 மேற்படி கணக்கு இலக்கத்துக்குரிய நிதியை வைப்பில் இட்டு வங்கி உறுதிச்சீட்டை எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். எமது ஊரின் நுழைவாயிலில் அமைந்துள்ள அம்பிகையின் ஆலயத்தை அடக்கமாகவும் அழகாக அமைப்பதற்கு அனைத்து அடியவர்களினதும் ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம். நேரடியாகவும் ஆலயத்தில் எம்மிடம் பணத்தை ஒப்படைத்து பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ளலாம்.

மடத்துக்கரை, வலந்தலை,
காரைநகர்

சுபம்

பிரம்மஸ்ரீ கு.சரவணவானந்தசர்மா,
(ஆதீன ...)
திரு.த.கு...

## நீர்வேலி செல்லக்கதிர்காம ஸ்வாமி திருக்கோயில் திருப்பணி விஞ்ஞாபனம்

எமது ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றைச் சிறப்பாகப் பூர்த்திசெய்யப் பல லட்சம் ரூபா தேவையாக உள்ளது. இந்தத் திருப்பணி வேலைகளைச் சீர்செய்வதற்கு அனைத்து அடியவர்களினதும் நிதிப் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம்.

### வங்கிக் கணக்கு விவரம்

வங்கியின் பெயர் : மக்கள் வங்கி, அச்சுவேலி
கணக்கு இலக்கம் : 107-2-001-4-0025436
கணக்கின் பெயர் : செல்லக் கதிர்காம தேவஸ்தானம், நீர்வேலி
swift code : PSBKLKLX023
(வெளிநாட்டு அன்பர்களுக்கு மட்டும்)

நீர்வேலி வடக்கு.
02.09.2011

திருப்பணிச் சபை,
செல்லக் கதிர்காம தேவஸ்தானம்.

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

A/L 2012 DAY CLASS

2011 - AUG. A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது
**" கணித, உயிரியல் பிரிவு "**
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

COM.MATHS: 7.00 - 8.30 திரு.S.செந்தில்ராஜ்
7.00 - 8.30 திரு. P.செந்தில்நாதன்
BIOLOGY: 7.00 - 8.30 வழமையான ஆசிரியர்
7.00 - 8.30 திரு.T.கெங்காதரன்
PHYSICS: 8.30 - 10.00 திரு .R. குகன்
CHEMISTRY: 10.00 - 11.30 திரு.K.சிவத்திரன்

ஆரம்பம்:- 09.09.2011 வெள்ளி காலை 7.30 AM

(சி/3549)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டெங்கு ஆபத்திலிருந்து காப்பாற்ற...

குடாநாட்டில் பருவப் பெயர்ச்சி தொடங்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பல பிரதேசங்களில் சின்னச் சின்ன அளவில் மழை பெய்யத் தொடங்கியும் ஆயிற்று. பருவ மழை தப்பாது பெய்யவேண்டும். அப்போது தான் வானம் பார்த்த பூமியாகிய யாழ்ப்பாணத்தில் விவசாயம் சிறக்கும், அதனூடு எமது மண்ணில் வளம் பெருகும்.

மழை இயற்கை தரும் கொடை. அதேவேளை, மழை வந்தால், அது நோய்களையும் தொற்று நோய்களையும் - சேர்த்துக் கொண்டே வரும்! அத்தகைய தொற்றுநோய்களில், அண்மைக் காலங்களில் மக்கள் உயிர்க் கொல்லி நோயாக வந்திருப்பது டெங்கு.

முன்னர் ஒரு காலத்தில், மலேரியா உயிர்க்கொல்லியாக வந்து பெரும் எண்ணிக்கையான மக்களின் உயிர்களை வருடாந்தம் குடித்து வந்தது; காவு கொண்டது. மருத்துவத் துறையின் வளர்ச்சியாலும் சிகிச்சை முறைகளின் முன்னேற்றத்தாலும் அரசாங்கங்களின் பலன்தந்த தீவிர தடுப்புத் திட்டங்களாலும் மலேரியா பரம்பல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இப்போது அதன் இடத்தைப் பிடித்திருக்கிறது டெங்கு.

நாடளாவிய ரீதியாக நோக்கும் போது, தொண்ணூறுகளில் (1991-1999) டெங்கு நோயாளரின் எண்ணிக்கை வெறும் ஆயிரத்துக்கும் குறைவாகவே இருந்தது. ஆனால் 2000 தொடக்கம் 2008 ஆண்டு வரையான காலத்தில் - ஒன்பது வருடங்களில் பத்தாயிரமாக உயர்ந்தது.

ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் (2009, 2010களில்) டெங்கு நோயாளரின் எண்ணிக்கை 35,000 ஆக உயர்ந்திருக்கிறது - சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்களின் பிரகாரம்.

கடந்த வருடம் இந்நோயின் தாக்கத்தால் குடாநாட்டில் இருபத்தி மூன்று பேர் (23) மரணமானார்கள். அதே போன்ற நிலை இப்போது உருவாகும் ஆபத்து உண்டாகியுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் 140 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும், கடந்த மாதத்தில் (ஒகஸ்டில்) மட்டும், யாழ். போதனா வைத்தியசாலையில் 19 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்; அவர்களில் ஒருவர் மரணமானார் என்பது புள்ளி விவரம்.

டெங்கு நோய் பரவுவதற்கான ஏதுக்களாக பருவப் பெயர்ச்சி மழையின் ஆரம்பம், அந்த நோயைப் பரப்பும் நுளம்புகளின் சூழலுக்கான இசைவாக்கம், அந்த வகையான சூழலை இல்லாதொழிப்பதில் மக்களிடையே காணப்படும் விழிப்புணர்வு குறைந்து போனமை, நகரப் புறங்களில் கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் கழிவுநீர் அகற்றல் முகாமைத்துவம் சீராக நடைபெறாமல் இருப்பது ஆகியன முக்கிய காரணங்களாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

பாடசாலை விடுமுறைக் காலம் மற்றும் பிரதேச ஆலயங்களின் திருவிழாக் காலங்களை ஒட்டித் தென்பகுதியிலிருந்து அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாலும் நோய் பரப்பக்கூடிய டெங்கு நுளம்புகளின் பரம்பல் அதிகரித்துள்ளதாகவும் சுகாதார சேவைப் பகுதியினர் காரணம் கூறுகின்றனர்.

குடாநாடு அளாவிய மட்டத்தில் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு, மக்களிடம் மங்கிப்போனதும் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவுகளும் இப்போது நோய் அதிக அளவில் பரவுவதற்கு மற்றொரு காரணம் என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

நோய் பரவும் ஆபத்து வந்ததும் விழுந்தடித்துக் கொண்டு தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், பின்னர் ஓய்ந்து போவதும் நோய்த் தாக்கத்தின் விளைவுகளை மறந்து, அயர்ந்து அது மீண்டும் வந்து வருத்தும்வரை அக்கறை காட்டாது இருப்பதும் எமது பிரதேசத்தவரின் ஒவ்வாத இயல்பாகிவிட்டது.

நோய் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இடை நிறுத்தாது செயற்படுவது என்பதனை, தமது சுயநலன் நாடியும் அடுத்தவர்களின் பொது நலன் நாடியும் ஒதுக்கமுடியாத ஒரு முக்கிய கட்டாய கடமையாக்கிக் கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும்; அது பிரதானமானதாகும்.

குடாநாட்டின் ஒவ்வொரு பிரசையும் அந்த உணர்வுடனும் பொறுப்புடனும் செயற்பட்டால் மட்டுமே, டெங்கு நோயினால் பரந்த அளவில் உண்டாகும் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்தமுடியும்.

தனிமனிதனுக்கு மட்டும் அன்றி நோய்த் தடுப்பில் உள்ளூராட்சி சபைகளுக்கும் பெரும் பங்குண்டு. கடந்த பல ஆண்டுகளாக குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றியே இயங்கின. இப்போது அந்தக் குறைபாடு நீங்கியுள்ளது. மக்களின் உயிர்காக்கும் சுகாதாரத் துறைக்கு புதிய பிரதிநிதிகள் முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டிய வேளை இது.

அவர்கள் தயாரிக்கும் மக்கள் நலத்திட்டங்களில் நோய்த்தடுப்புக்கு முதலிடம் வழங்குவது மிகப் பிரதானம். உள்ளூராட்சி சபையின் எந்த வகை சார்ந்த திட்டத்தையும் மக்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தால் மட்டுமே செயற்படுத்த முடியும் என்பதனை உணர்வது அவசியம்.

நுளம்புகள் பெருகாமலும் பரவாமலும் தடுப்பதற்கு உகந்த வழிமுறைகள் அந்தந்தக் காலத்தின் பாதிப்புக்கும், அதன் தன்மைக்கும் ஏற்பத் தேவை கருதி மாற்றப்பட வேண்டும். அது போன்றே பிரதேசத்தின் சூழலுக்கும் மக்கள் தேவைக்கும் ஈடுகொடுக்கும் விதத்தில் செயற்பாடுகளை மாற்ற வேண்டும், புதுப்பிக்க வேண்டும்.

மக்களை டெங்குவில் இருந்து மட்டுமன்றி பலரை ஒரே நேரத்தில் தாக்கும் ஆபத்தான நோய்களில் (Epidemic) இருந்தும் காப்பாற்றுவதற்கும் உள்ளூராட்சி சபைகள் முன்னுரிமை வழங்க வேண்டிய வேளை இது.

அதற்கான நிதி வளத்தை வழங்குவதற்கு அரசு தாராள மனதுடன் செயற்படுமா என்ற வினா ஒன்று தொக்கி நிற்கவே செய்கிறது. மக்களின் உயிர் காக்கும் பணியாக, சேவையாக விளங்குவதால், அரசு தனது தாராண்மையை இது விடயத்தில் வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

# இந்துக் குருவையும் மனைவியையும் உடனடியாக விடுதலை செய்க

## ஐ.தே.க.எம்.பி. விஜயகலா கோரிக்கை

கொழும்பு, செப். 4

கடந்த 11 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்து மதகுருவான பிரம்மஸ்ரீ ரகுபதி சர்மாவையும் அவரது மனைவி திருமதி வசந்தி ரகுபதி சர்மாவையும் அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைக்கருதி விடுதலை செய்யவேண்டும்.

ஐக்கியதேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் ரகுபதி சர்மாவும், வெலிக்கடைப் பெண்கள் சிறைச்சாலையில் திருமதி வசந்தி ரகுபதி சர்மாவும் கடந்த 11 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது பிள்ளைகளான 17 வயதுடைய சரண்யா, 18வயதான ஜெயசந்திர சர்மா ஆகியோர் பெற்றோர் இல்லாத நிலையில் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள இராமகிருஷ்ண மிஷனில் தங்கி உள்ளனர். உயர்தரத்தில் கல்வி பயிலும் இவர்கள் 11 வருடங்களாகப் பெற்றோரை பிரிந்திருப்பதால் மனரீதியில் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு இவர்கள் இருவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறைச்சாலையில் பிராமணர்களான இவர்களுக்கு உரியவகையில் உணவுகள் வழங்கப்படுவதில்லை. ரகுபதி சர்மா பல தடவை சிறைச்சாலையில் பெரும் இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதனால் இவர்கள் இருவரும் மன நிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர். எனவே இவர்களை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்-என்றுள்ளது. (ம)

# விதானையார் வீதியில் கற்குவியல் திருத்தப்பணிகள் இதுவரை இல்லை

கொழும்புத்துறை, செப்.4

சுண்டுக்குளி விதானையார் ஒழுங்கையின் புனரமைப்புப் பணிகளுக்காக அந்த வீதியில் நீண்டகாலமாக கற்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளமையால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி 30 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது காணப்பட்டதையடுத்து புனரமைப்பு வேலைகளுக்காக கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்கள் சென்ற நிலையிலும் இதுவரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

வீதியின் இருமருங்கிலும் கற்குவியல்கள் உள்ளமையால் வாகனங்கள் செல்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. மழை காலங்களில் இந்த வீதியில் நீர் தேங்கி நின்று பாதிப்பை ஏற்படுத்துவது வழமையாகும்.

எனவே அடுத்துவரும் மழைக் காலத்துக்கு முன் விரைவுபடுத்தி இந்த வீதிப் புனரமைப்பை மேற்கொண்டு மக்களின் சிரமங்களை நீக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (த-135)

# கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளராக புஸ்பலிங்கம்

யாழ்ப்பாணம், செப்.4

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக எஸ்.புஸ்பலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய குருகுலராசா ஓய்வு பெற்றதை அடுத்து எஸ்.புஸ்பலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக வி.செல்வராஜா நியமிக்கப்பட்டுள்ளார். வடமராட்சிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அதிபர் ஜே.தெய்வேந்திரராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-15)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அரசு உடனடியாக நீக்கவேண்டும்

## பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கி நாட்டில் ஜனநாயக சூழல் மேலும் விரிவடையவும், சாதாரண சட்டங்கள் மூலம் நீதியான சூழல் மேம்படுத்தப்படவும் ஜனாதிபதி வழி செய்ய வேண்டும் என பத்மநாபா ஈ.பி.ஆர். எல்.எவ் அணியின் தலைவர் அ.வரதராஜப் பெருமாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தின் கோரப்பிடியிலும், பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களின் பிடியிலும் சிக்கி பல ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் இன்னல்களுக்கும் துயரத்துக்கும் உள்ளாகியது வரலாறாகும்.

மிக நீண்ட காலம் இவ்வாறு உடல், உளரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருந்த தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதுவும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள அரசின் கடமையாகும். அந்த வகையில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக ஜனாதிபதி விடுத்திருந்த அறிவிப்பு, தமிழ், முஸ்லிம், மலையக மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் செய்தியாக அமைந்தது. பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதனை வரவேற்றிருந்தனர். இதே போன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்குவதற்கு ஜனாதிபதி ஆவன செய்யவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அதுவே அனைத்து இலங்கை மக்களினதும் எதிர்பார்க்கையாகும்.

கடுமையான சட்டங்கள் மூலம் மக்களின் நியாயமான உணர்வுகளை, ஜனநாயக ரீதியான எழுச்சியை அடக்கிவிட முடியாது என்பது எமது நம்பிக்கை. இதுவே நம் எல்லோரதும் அனுபவமாகும்.

அத்துடன் தமிழ்மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய அரசியற் தீர்வினை விரைவில் அடைவதற்கு உரிய உருப்படியான நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்படுமாயின் புதிய முறையிலோ புதிய வடிவத்திலோ மீண்டும், மீண்டும் அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கி அமுல் படுத்தவேண்டிய தேவை எதிர்காலத்தில் அரசுக்கு ஏற்படமாட்டாது என்பதையும் இந்தத் தருணத்தில் கூறி வைக்க விரும்புகிறோம்- என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமெந்து முறுக்குக் கம்பிகள், அஸ்பெஸ்டரஸ் சீட்ஸ் ஓடுகள், நெளிவு தகரங்கள், கல்வனைஸ் பைப்புக்கள், இரும்பு சீட்ஸ், முள்ளக்கம்பிகள் ஏனைய ஹாட்வெயர் பொருள்களை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**City சிற்றி ஸ்ரீல்**
A135, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 7304

---

## ஸ்ருடியோ வேலைக்கு ஆள்கள் தேவை

மன்னாரில் பிரசித்தி பெற்ற டிஜிற்றல் ஸ்ருடியோவுக்கு இரண்டு வருடத்துக்கு மேல் முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

* டிஜிற்றல் வீடியோ அன்ட் போட்டோ கிறாப்பர் - 2 நபர் (இரண்டிலும் முன் அனுபவம் உள்ளவர்கள்)
* வீடியோ எடிற்றிங் - 1 நபர்
* போட்டோ டிசைனர் (போட்டோ ஷொப்) - 3 நபர்
* கமெராமென் அன்ட் போட்டோ டிசைனர் (இரண்டிலும் முன் அனுபவம் உள்ளவர்கள்) - 2 நபர்

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
**சம்பளம் 20,000 /= தொடக்கம் 35,000/= வரை வழங்கப்படும்**
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0776907330
(சி/3552) EMAIL - 5 Starlap@ gmail .Com

---

## VACANCY

**CIVIL ENGINEER** - B.Sc (ENG) - 2 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**TECHNICAL OFFICER - NCT (CIVIL)** 3 வருட அனுபவம்

**FOUNDRY WORK** - வார்ப்பு, கடைச்சல் வேலைக்கு பயிலுனர்கள் தேவை. ஊதியம் வழங்கப்படும்.

கட்டட உப ஒப்பந்தகாரர்கள், தச்சுவேலையாள்கள், மேசன், மேசன் கூலியாள்கள், இயந்திர கடைச்சல்காரர் (Lathemen) தேவை.

**தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்**
VISVAKARMA (PVT) LTD
28, MAARI AMMAN LANE,
THIRUNELVELY SOUTH,
JAFFNA
TEL: 0212226781 (7556)

---

## கார் விலைக்குத் தேவை

நிசான் சனி, ரொயாட்டா கொறிலா ரக வெள்ளை சில்வர், பட்டகலர் கார் தேவை. ஒரு கைப்பாவனை விரும்பத்தக்கது.
தொடர்பு:0212227535, 0777158476

---

## அறைகள் வாடகைக்குண்டு

கல்வி பயில்வோர், தாதியர்கள், ஆசிரியர்கள் விரும்பத்தக்கது. தனியான குளியல் அறை வசதியுடன் உண்டு. சிறு குடும்பத்துக்கு பகுதி வீடாகவும் வழங்கப்படும்.
தொடர்பு: 25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P :0212227535, 0777158476

---

## பணி நிலை வெற்றிடம்

விற்பனையாளர் தேவை - ஆண், பெண் இருபாலாரும்.
தொடர்பு கொள்ளவும் - 0212222996
சிவன் மாளிகை லிமிட்டெட்
166, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 0212222996 (7555)

---

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோயிலுக்கு அருகில் 2½ பரப்புடன் கூடிய மேல் மாடி வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்.
தொடர்பு: இல. 5, பண்டாரக்குளம் லேன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
T.P-0776401699

---

## காணி வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு கௌரவமான சூழலில் ஐந்து (5) அறைகளையும் இரண்டு சாலைகளையும் கொண்ட நல்ல நிலையில் உள்ள கல் வீடும் ஆறு (6) பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 077 4843062, 077 6701303

---

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை கல்லூரி வீதியில் பழைய நகர சபை, பழைய நீதிமன்றம், ஹாட்லிக் கல்லூரி என்பவற்றுக்கு அண்மையில் நான்கு பரப்புக் காணியில் அமைந்துள்ள விசாலமான வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு-0713000075, 0212263420

---

## வேலையாள்கள் தேவை

வெள்ளவத்தையில் இயங்கும் காஸ் கடைக்கு விநியோகப் பையன்கள் (Delivery boys) தேவை. துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் ஓடக்கூடியவர்கள் நன்று. தங்குமிட வசதிகள், கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு-
0773683070, 0779963150

---

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவமான குடும்பம் 1973, புனர்பூசம் - 2, 5'7" 23 ¾ கி.பா. B.A (HONS) HOSPITALITY AND TOURISM MANAGEMENT (UNIVERSITY OF TOULOUSE FRANCE, ENGLISH MEDIUM. STUDIED IN MALAYSIA) தற்பொழுது U.A.E இல் வேலை செய்யும் ஒரே மகனுக்கு பொருத்தமான படித்த, நற்குணமுள்ள அழகான மணமகளை வெளிநாட்டில் குடியுரிமையுடன் அல்லது உள்நாட்டில், குறைந்தது 04 வயது வித்தியாசத்தில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0213218299

---

## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான SCCஇன் விசேட கணினிப் பயிற்சி நெறிகள்

Special Offer 4000/=

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 4000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இக்கல்வி ஆண்டில் மிக நவீன கணினித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சிநெறிகள்

- DIPLOMA IN MICROSOFT OFFICE
- DIPLOMA IN HARDWARE ENGINEERING
- DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
- DIPLOMA IN COMPUTER SCIENCE
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN INTERNET E-MAIL
- DIPLOMA IN VISUAL BASIC
- DIPLOMA IN WEB DESINING

New Batches Start On
Batch I :- 05, 07.09.2011,
Batch II :-10, 12.09.2011

குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்

**Softview Computer College**
43, Arasady Rd, Thaddatheru Junction,
Jaffna. T.P: 021 2225170

---

## STUDY IN UK
### இன்றே விரையுங்கள்

நீங்கள் O/L,A/L சித்தியடைந்துள்ளீரா? வேலைவாய்ப்புக்காக உயர்கல்விக்காக காத்திருக்கின்றீர்களா?
"இன்றே விரையுங்கள்"

★ G.C.E. O/L,A/L தகைமையுடன் UK யில் உயர்கல்வியைச் சிறப்பான முறையில் தொடரலாம்.
★ IELTS கற்கைநெறி வகுப்புகளுக்கும் ஆலோசனைகளுக்கும் நாடுங்கள்.
★ குடும்பத்துடன் பயணிக்கக் கூடிய ஏற்பாடு.
★ visaவிற்கு பின் கட்டணம் செலுத்தும் வசதி.
★ விரும்பிய College இல் விரும்பிய பாடத்தைத் தொடரும் வாய்ப்பு
★ மிகக் குறுகிய காலத்தில் sponsor, visa பெற்றுத்தரப்படும்.
★ Course fees/ Sponsor தரமான முறையில் மேற்கொள்ளப்படும்.

**அழையுங்கள்**
PS Consulting (PVT)LTD
Station Road, Kondavil West, Kondavil,Jaffna.
T.P:0778328290, 0755766786
(7547)

---



HERO CYCLES
KENTON

## ஹீரோ, கென்டன் காட்சியறை

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும்
சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்

மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்
சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (RECHARCHABLE & REMOTE) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பலவர்ணங்களில் புதிய லேடீஸ் சைக்கிள்



ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி.
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.


தொ.பே.: 021 4921672



(49)

---

Special Offer



யப்பானிய தொழில் நுட்பத்துடனான Sanyo (Slim Beauty) குளிர்சாதனப் பெட்டிகள் Refrigerator (Abans நிறுவன உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையுடனும்)



Normal Selling Price: 34,990/-

Special Selling Price 28,990/-

OFFER STARTING FROM 05.09.2011 UNTIL 30.09.2011

## Jaffna Electrical
*(Abans Show Room)*

141,Power House Road, Jaffna.
T.P: 021 222 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008



2010 Award 2011 Award



No 1 LG Dealer in SriLanka
Authorized Dealer for Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலிக் கால்நடைகளிடமிருந்து நெற்பயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை

## காரைநகர் பிரதேச சபைக்கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.4

காரைநகர் பிரதேசத்தில் 1400 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் அவை கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருவதால் கால் நடைகளைக் கட்டுப்படுத்து வதன் மூலம் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் காரைநகர் பிரதேச சபையின் முதலாவது அமர்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்தக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் பிரதேசசபையில் பிரதேச சபைத்தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

✱ கால்நடைகளைக் கட்டுப்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல். இதுதொடர்பாக விவசாய சம்மேளனங்களை எதிர்வரும் 8 ஆம் திகதி சந்திப்பதுடன் கட்டாக்காலிக் கால்நடைகளை பிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் -

✱ காரைநகர் கசூரினா உல்லாசக் கடற்கரையில் உல்லாசப் பயணிகளுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்துதல் -

✱ காரைநகர் பிரதேசத்தில் டெங்குநோய் பரவும் அபாயத்தை நீக்குவதற்கு டெங்கு நோய் பரவும் நிலையில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்களைக் கொண்டு துப்புரவு செய்தல். தவறும் பட்சத்தில் கிராம சேவகர்கள் ஊடாக அவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுத்தல்-

✱ பிரதேச சபையின் தேவைக்கு முச்சக்கரவண்டி ஒன்றைக் கொள்வனவு செய்தல்-

✱ பிரதேச சபையின் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமித்தல்-

✱ காரைநகர் கசூரினாக் கடற்கரையில் அனுமதியற்ற படகுச் சவாரி இடம்பெறுவது குறித்து சபையில் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது இவர்களுக்கான அனுமதியை வழங்குவதுடன் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின் காரைநகர் பிரதேச குடிதண்ணீர் விநியோகம், வீதி புனரமைப்பு, வீதி துப்புரவு போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதுடன் சபையின் நிதிக்குழு, சமூக அபிவிருத்திக்குழு, கேள்விச் சபை என்பனவும் தெரிவு செய்யப்பட்டன. (த-319-250)

### நினைவாக...




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் உறுப்பினருமான அமரர் வி.தர்மலிங்கத்தின் 26 ஆவது ஆண்டு நினைவுக்கூட்டம் நேற்று முன்தினம் சுன்னாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் , வலி.தெற்குப் பிரதேச சபைத்தலைவர் தி.பிரகாஷ் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (த-86)

# குடிசைக் கைத்தொழில் கண்காட்சி யாழ்.இந்துவில்

## 5 அமைப்புகளும், திணைக்களங்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வாழ்வு எழுச்சி-மனைப் பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழில் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி, சனிக்கிழமையும், 11 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சு கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன் விருத்தி அமைச்சு, அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அமைச்சு ஆகியன இணைந்து நடத்தவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 6000 பேர் பயன் பெறக்கூடிய வகையில் இந்தக் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் மேற்படி 5 அமைச்சர்களுடன் அவற்றோடு இணைந்த திணைக்களங்களினாலும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பொருத்தமான புதிய தொழில் நுட்ப முறைகள், நவீன இயந்திரங்கள், உற்பத்திச் செயற்பாடு கள் மற்றும் தரமான உற்பத்திகள் ஆகியவற்றை வெளிக்காட்டக் கூடிய வகையிலும் குறைந்த முதலீட்டுடன் தொழிலைத் தொடங்கக் கூடிய வகையிலும் தேவையான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் இந்தக் கண்காட்சியில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன் வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளன.

ஆர்வமுடைய குடிசைக் கைத்தொழிலாளர்கள் கண்காட்சியில் பங்குபற்றி குறைந்த செலவில் பார்வைக்கு வைக்கப்படும் நவீன தொழில் நுட்பங்கள், இயந்திரங்கள், உற்பத்தி செயற்பாடுகள் போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியும். அத்துடன் தொழில் முயற்சிக்குத் தேவையான நிதியை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (த-313)

### நெடுந்தீவில் உள்ள

# வெட்டுக்கழி நீர்த்தேக்கத்துக்கு அணைக்கட்டு அமைக்கும் பணி



யாழ்ப்பாணம், செப்.4

நெடுந்தீவின் பிரதான நீர்த்தேக்கமான வெட்டுக்கழியைச் சுற்றிப் பெரிய அணைக்கட்டு வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

சுமார் இரண்டு மைல் சுற்றளவைக் கொண்ட இந்த நீர்த்தேக்கத்தை நன்நீர்த் திட்டத்தின் கீழ் ஆழப்படுத்த, முன்னர் நடவடிக்கை எடுத்தபோதும் அந்த வேலைகள் இடம்பெறவில்லை. நீர் கடலுக்கு செல்வதைத் தடுப்பதற்காக சிறிய அணை ஒன்று கட்டப்பட்டிருந்தது. தற்சமயம் சுற்றாடலில் உள்ள வயல் நிலங்களை எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடியதாக நன்நீர்த்திட்டம் உருவாக்கப்பட்டு வாகனங்கள் செல்லக்கூடியதாக அணைக்கட்டு வேலைகள் இடம்பெறுகின்றன. படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (த-7)

# அடிக்கடி ஏற்படும் மின்தடையால் தென்மராட்சி வலயத்துக்கு பாதிப்பு

தென்மராட்சி, செப்.4

தென்மராட்சி கல்வி வலயத்தில் பணியாற்றும் 50 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் தமது பணிகளை கைவிட்டு விறாந்தையில் குழுமியிருந்த சம்பவம் அண்மையில் வீதியில் சென்றோரை வியப்புக்குள்ளாக்கியது.

தகவல் கிடைத்து அங்கு சென்று விசாரித்தபோது, தொடர்ச்சியான மின் தடையினாலும் , கட்டடத்தினுள் இருக்க முடியாத அளவுக்கு வெப்பமாகக் காணப்படுவதாலும் தாம் வெளியில் வந்து நிற்பதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இரு மாடிக் கட்டடத் தொகுதியைக் கொண்ட இந்தக் கட்டடத்தின் தரை மாடி வேலைகள் பூர்த்தியடைந்ததையடுத்து அலுவலகம் கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் இந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கட்டடத்தில் காற்றோட்ட வசதி குறைவாக உள்ளதால் மின்விசிறிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நண்பகல் வேளையில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் அறைக்குள் இருக்க முடியாத அளவுக்கு வெப்ப நிலை காணப்படுகிறது. அத்துடன் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் மின் விசிறிகளும் செயற்படுவதில்லை. இதனால் புழுக்கத்தை தவிர்ப்பதற்காக தாம் வெளியில் வந்து நிற்பதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

மின் பிறப்பாக்கி இல்லையா என அங்கிருந்தவர்களிடம் கேட்டபோது கடந்த மூன்று வருடங்களாக உரிய அதிகாரிகளிடம் கோரிவருவதாகவும் இதுவரை மின் பிறப்பாக்கி கிடைக்காததால் அலுவலக செயற்பாடுகள் மின்தடை ஏற்படும் வேளைகளில் ஸ்தம்பிதமடைவதாகவும் அலுவலக உயர் அதிகாரி தெரிவித்தார்.(த-207)

# நெடுந்தீவில் கடும் வரட்சியால் கால்நடைகளுக்கு உணவில்லை

நெடுந்தீவு, செப்.4

நெடுந்தீவில் கால்நடைகளுக்கான உணவு கள் அருகிவருவதால் தரவை நிலங்களில் புல்லு வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரியுள்ளனர்.

நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களாகக் காணப்படும் குதிரைகள் உட்பட ஆடு, மாடுகள் உணவுகளின்றி இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடும் வரட்சி காரணமாக தரவைப்பகுதிகளில் புல்லுகளற்ற நிலைமையால் பாதிக்கப்படும் கால்நடைகளைக் காப்பாற்றக் கூடிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் கோரியுள்ளனர்.

தரவைப்பகுதிகளில் கால்நடை உணவுக்கான புல்லுவகைகளை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவும் பொது மக்கள் கூறுகின்றனர். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLIIT

**Information Technology**
**Business Management**
**Engineering**

Member of The Association of Commonwealth Universities



# புதிய மாணவர்களுக்கான அனுமதி 2010 / 2011

## IT பட்டப்படிப்பு

- **BSc (கௌரவ) பட்டப்படிப்பு SLIIT**
  - தகவல் தொழில்நுட்பம் - 4 வருடங்கள்
  - தகவல் முறைகள் - 4 வருடங்கள்
  - கனனி முறைகளும் வலையமைப்பும் - 4 வருடங்கள்
  - மென்பொருள் பொறியியல் - 4 வருடங்கள்


  இந்தப் பட்டப்படிப்புக்கள் பல்கலைக் கழக சட்டத்தின் கீழ் பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரத்தோடு SLIIT ஆல் வழங்கப்படுகின்றது
- **BSc கேர்டின் பல்கலைக் கழகம் அவுஸ்திரேலியா**
  - தகவல் தொழில்நுட்பம் - 3 வருடங்கள்
  - கனனி முறைகளும் வலையமைப்பும் - 3 வருடங்கள்
  - மென்பொருள் பொறியியல் - 4 வருடங்கள்

  இத்தகைய பட்டப்படிப்புக்கள் அவுஸ்திரேலியா, கேர்டின் பலகலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்றது. SLIIT கற்கை நெறியை நடாத்துகின்றது.
- **BSc (கௌரவ) ஷெபீல்ட் ஹல்லாம் பல்கலைக் கழகம் ஐக்கிய இராச்சியம**
  - தகவல் தொழில்நுட்பம் - 3 வருடங்கள்
  - கனனி முறைகளும் வலையமைப்பும் - 3 வருடங்கள்
  - மென்பொருள் பெறியியல் - 3 வருடங்கள்

  இரண்டரை ஆண்டுகளுக்கான கற்கை SLIIT ல் தொடரலாம். இறுதி கற்கையை ஐக்கிய இராச்சியம் ஷெபீல்ட் ஹல்லாம் பல்கலைக் கழகத்தில
- **BSc (IT) ஸவுத்ஈஸ்ட் மிஸோரி ஸ்டேட் பல்கலைக்கழகம், சின்சினாட்டி பல்கலைக்கழகம், ஸ்ட்ராட்போட் பல்கலைப்பழகம், ஐக்கிய அமெரிக்கா.**
  - இப்பிரிவில் 2 வருட கல்வியும், அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் செய்யப்படுவார்கள
- **BSc (IT) மோனாஸ் பல்கலைக் கழகம**
  - இரண்டு ஆண்டுகளுக்கான கற்கை SLIIT யிலும் ஒரு வருட கற்கை மோனாஸ் பல்கலைக் கழகத்திலும் நடாத்தப்படுகின்றது.
- **BSc (IT) கேர்டின் பல்கலைக் கழகம், RMIT பல்கலைக் கழகம் வொல்லொங்கொங் பல்கலைக் கழகம், சுவின்பேர்ன் பல்கலைக்கழகம், தெற்கு அவுஸ்திரேலியா பல்கலைக்கழகம், டிக்கின் பல்கலைக்கழகம், தஸ்மானியா பல்கலைக்கழகம், குயின்ஸ்லாந்து பொறியியல் பல்கலைக் கழகம்.**
  - இரண்டு ஆண்டுகளுக்கான கற்கை SLIIT யிலும் ஒரு வருட கற்கை அவுஸ்திரேலியா பங்காளிப் பல்கலைக்கழகத்திலும்.
- **BSc (IT): பேர்மிங்ஹாம் பல்கலைக் கழகம், ஐக்கிய இராச்சியம**
  - இரண்டு ஆண்டுகளுக்கான கற்கை SLIIT ல் தொடரலாம். ஒரு வருட கற்கையை ஐக்கிய இராச்சியம் பேர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில
- **BSc (IT): குவன்ட்லன்ட் பல்கலைக் கழகம். கனடா**
  - இரண்டு ஆண்டுகளுக்கான கற்கை SLIIT ல் தொடரலாம். இறுதி இரண்டு வருட கற்கையை கனடா குவன்ட்லன்ட் பல்கலைக் கழகத்தில

**ஏனைய தகைமைகள் பட்டதாரி கற்கைத் திட்டத்தின்போது பெற்றுக் கொள்ளலாம்**

- **தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா**
  - SLIIT ல் இரண்டாண்டு கற்கை




பட்டப்படிப்பு வழிகாட்டி

வளம்மிகு தசாப்தத்தினூடாக தேசத்திற்கு 15000 க்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப தொழில்சார் நிபுணர்கள்!!

## வர்த்தக முகாமைத்துவ பட்டப்படிப்பு

- **ஷெபீல்ட் ஹலாம் பலகலைக்கழகம் ஐக்கிய இராச்சியம்**
  - BBA (கௌரவ) வியாபார முகாமைத்துவத்தில் - 3 வருடங்கள்*

  இத்தகைய பட்டப்படிப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் SLIIT நடாத்தப்பட்டு ஐக்கிய இராச்சியம், ஷெபீல்ட் ஹலாம் பலகலைக்கழகத்தினால் பட்டமளிக்கப்படுகின்றது.
- **ஸ்ட்ரட்போட் பல்கலைக் கழகம், அமெரிக்க ஐக்கிய இராச்சியம்**
  - B.Sc வர்த்தக முகாமைத்துவம் - 4 வருடங்கள்*

  அமெரிக்க ஐக்கிய இராச்சிய ஸ்ட்ரட்போட் பல்கலைக் கழகத்தில் 2 வருட SLIIT பட்டப்படிப்பு மற்றும் 2 வருட படிப்பு

***இது தொடர்பான தனியான விளம்பரம் பத்திரிகைகளில் மிக விரைவில் பிரசுரிக்கப்படும் - மேலதிக தகவல்களுக்கு, முகாமையாளர் - கல்விசார் அலுவல்கள், அவர்களை தொடர்பு கொள்ளவும்.**

## பொறியியல் பட்டப்படிப்பு

- **ஷெபீல்ட் ஹலாம் பலகலைக்கழகம் ஐக்கிய இராச்சியம்**
  - BEng (கௌரவ) இலத்திரனியல் பொறியியல் - 3 வருடங்கள*

  இத்தகைய பட்டப்படிப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் SLIIT நடாத்தப்பட்டு ஐக்கிய இராச்சியம், ஷெபீல்ட் ஹலாம் பலகலைக்கழகத்தினால் பட்டமளிக்கப்படுகின்றது.
- **கேர்டின் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா**
  - BEng (Hons) in Computer Systems and Engineering*

  இத்தகைய பட்டப்படிப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் SLIIT நடாத்தப்பட்டு பட்டமளிக்கப்படுகின்றது.
- **ஸவுத்ஈஸ்ட் பிராந்திய மிஸூரி பல்கலைக்கழகம், அமெரிக்கா ஐக்கிய இராச்சியம**
  - BSc Technology Management in Electrical and Control System*

  இத்தகைய பட்டப்படிப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் SLIIT 2 வருடங்கள் நடாத்தப்பட்டு அமெரிக்கா ஐக்கிய இராச்சியம், மிஸூரி பிராந்திய பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்படுகின்றது

***இது தொடர்பான தனியான விளம்பரம் பத்திரிகைகளில் மிக விரைவில் பிரசுரிக்கப்படும் - மேலதிக தகவல்களுக்கு, முகாமையாளர் - கல்விசார் அலுவல்கள், அவர்களை தொடர்பு கொள்ளவும்.**

## தகுதிகாண் பரீட்சை :

| | | |
|---|---|---|
| திகதியும் நேரமும் | : | 30 ஒக்டோபர் 2011 மு:ப 10.00 முதல் மு:ப 11.00 வரை |
| இடங்கள் | : | கொழும்பு, மாலபே, கண்டி, குருனாகல், காலி, மாத்தறை |
| மொழி மூலம் | : | ஆங்கிலம், சிங்களம், தமிழ் |

## புலமைப்பரிசில்

- ☐ Industrial Financial Systems (IFS) Graduate Scholarship Programme + Internship at IFS
- ☐ SLIIT Performance Based Scholarships
- ☐ Exetel Scholarships
- ☐ Virtusa Scholarships

**குறிப்பு : க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**ஆரம்ப கட்ட விண்ணப்பத்துக்கான முடிவு திகதி 23 செப்டெம்பர் 2011.**

## தகைமைகள் :

- க.பொ.த (உயர்தர) (இலங்கை அல்லது இலண்டன்) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்கள் சித்தி
  மேலும்
- SLIIT நிறுவனத்தினால் நடாத்தப்படும் புலமைப் பரீட்சையில் சித்தி.

**கணனி முறைமை மற்றும் வலைப்பின்னல் பட்டப் படிப்புத் திட்டத்துக்கான அனுமதி.**

- மேற்குறிப்பிட்ட அதே தகுதி விண்ணப்பதாரி கணித / பௌதிக விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

## விண்ணப்பிப்பது எவ்வாறு

- ஆர்வமுள்ள மாணவர்கள் இங்கு தரப்பட்டுள்ளவாறு விண்ணப்பப் படிவத்தை தயாரித்துக் கொள்ள வேண்டும். SLIIT இன் இணையத்தளமான (www.sliit.lk) இன் மூலமும் விண்ணப்பப் படிவத்தைப் பொற்றுக் கொள்ளலாம்.
- தகுதிகாண் பரீட்சை மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளுக்கு விண்ணப்பதாரி ரூபா 600/- செலுத்த வேண்டும்.
- இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் பெயரில் அல்லது இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி கிளையில் நடைமுறைக் கணக்கு 1630552 என்ற இலக்கத்திலும் இப்பணத்தைச் செலுத்தலாம். அல்லது சம்பத் வங்கியின் ஏதாவதொரு கிளையிலும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிலையம் நடைமுறைக் கணக்கு 0039 9000 0033 என்ற இலக்கத்திலும் இப்பணத்தைச் செலுத்தலாம்.

  **பெரும்பாலான வங்கிக் கிளைகளில் இந்தக் கொடுப்பனவுக்காக விஷேட கொடுப்பனவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**
- முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிமும் வங்கியில் பணம் செலுத்திய பற்றுச் சீட்டும் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**முகாமையாளர் / கல்வி விவகாரம்**
**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம், BOC மேசன்ட் டவர், 15 ஆவது மாடி, 28 சென்ட் மைக்கல் வீதி, கொழும்பு 03**

## PRELIMINARY APPLICATION FORM

For the B.Sc. (Hons) Degree Programmes - 2011/2012

1. Name with Initials (as is usually written) : ........................................
2. Date of Birth :Day .............. Month .............. Year ..............
3. Present Mailing Address :........................................
4. Contact telephone No. (if any):........................................
5. The centre at which you wish to sit the Aptitude Test[1]:

   Colombo ☐ Malabe ☐ Kandy ☐ Kurunegala ☐ Galle ☐ Matara ☐ Jaffna ☐
6. The medium in which you wish to sit the Aptitude Test[1]:

   Sinhala ☐ English ☐ Tamil ☐

Bank receipt for Rs.600/- paid[2] at the Bank of Ceylon* / Sampath Bank* at .............................. branch is attached to this application. (*Strike off whichever is inapplicable)

I certify that the information given above are true and accurate.

Date : ....................  ..............................
Signature

Notes : (1) Aptitude Test will be held in Colombo, Malabe, Kandy, Kurunegala, Galle, Matara and Jaffna. The candidates are therefore requested to indicate their preferred location and medium. Please (✓) tick the appropriate cage.

(2) This fee should be paid at any branch of the **Bank of Ceylon** in favour of Sri Lanka Institute of Information Technology to the current account **No.1630552** at Bank of Ceylon, Kollupitiya or at any branch of **Sampath Bank** in favour of Sri Lanka Institute of Information Technology to the current account **No. 0039 9000 0033** at Sampath Bank. SLIIT pay-in slips are available for this purpose in most Bank branches.



Metro Campus | Malabe Campus | Matara Centre | Kandy Centre | Jaffna Centre

**University Partners**

**Industry Partners**

# இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம்.

BoC මර්චන්ට් ටවර්, 28, ශාන්ත මයිකල් පාර, කොළඹ 03.
දුරකථන: 230 1904 ෆැක්ස්: 230 1906

URL : www.sliit.lk Email : info@sliit.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கே எழுதாத பேனாக்கள்




'தன் இனத்துயர் அறிதலே எழுத்து' என்ற நிலையை எழுத்துலகில் இருக்கும் யாவரும் அறிவர். அதனாலேயே திரும்பத் திரும்ப துயர் பற்றிய எழுத்து வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. கடந்து வந்த துயரைப் பிரதியாக்குதலில் கண்ட வெற்றி தோல்விகளே எழுத்தின் வரலாற்றைத் தீர்மானிக்கின்றது. இதனால் எழுத்தை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் அற்ற காலம் வரலாற்றில் இருந்ததில்லை. வரலாறு முழுவதும் அவர்களின் பல்லவியால் நனைக்கப்பட்டவை. அந்த நனைதலின் சுவாரஸ்யத்தினால், யுகங்களால் சிறைபிடிக்கப்பட்டுவிட்டனர். எனவேதான் யுகங்களின் வரலாறும் இவர்களுக்குப் பின்னால் அலைகின்றது. அந்த யுகங்கள் ஒவ்வொன்றும் யுத்தங்களின் செல்லப்பிள்ளைகள். அவை போர்க்களம், கொலை, நிணக்கூழ், பிணப் படைப்பு, இரத்த ஆறு, நாடு பிடிப்பு, உடன்கட்டையேறல், வீரத் தாய்களின் புலம்பல் இப்படியான மனித கோரத்தின் ஏதாவதொன்றை முகவரியாகக் கொண்டவை. இவ்வாறு காலநிலை,வானிலை பேதமற்று இயங்கும் யுத்தங்களின் காட்சிப்பதிவாளர் பணியை தம்மையறியாமலேயே ஏற்றுக்கொள்பவர்களே இந்த எழுத்துக் கனவான்கள். இப்பணியை கி.மு மூன்றாம் நூற்றாண்டில் எதென்ஸில் வாழ்ந்த ஹெ. டோடஸ் தொடக்கி வைத்தார்.அக்காலத்திலிருந்து யுத்தங்களி வரலாறு இவர்களிடம் சிக்கிக் கொண்டது. தம் மனநிலை எதுவோ அதற்கேற்ற பகைப்பலத்தில் காட்சிப் பதிவுகளை மேற்கொண்டனர். அரியணைக்குப் புகழ் பாடியோர் மக்களை மறந்தனர். மன்னர்களின் ஆடம்பர வாழ்வும், புகழுக்கான கொடைகளும் அக்காலப் பதிவில் பொற்காலம் எனப் பதிவாகியது. அடிநிலை மக்களின் குரலாகப் தொனித்தவர்கள் எழுத்தைத் தொலைத்து அலைந்தனர். பிச்சைப் பாத்திரங்களும், கவனிப்பாரற்ற பொது இடங்களும் இவர்களின் வாழவி யலைத் தீர்மானித்த களங்களாயின. பலவேளைகளில் சனங்களுக்குப் பின்னால் அலைந்த எழுத்து அநாதையாகி அடங்கிப்போனது. சிலவேளைகளில் மட்டும் அதன் மூச்சு மட்டும் காலம் கடத்தப்பட்டது. அவலங்களின் அடையாள இனமாகிவிட்ட தமிழர்களின் எழுத்தாளர்கள் இந்த விடயத்தில் எப்படி? யுகங்கள் இவர்களுக்களித்த பணியை மனச்சாட்சி பூர்வமாக வெளிப்படுத்தினரா?

■ ஜெரா


2009க்கு முன்னரான எழுத்தின் நிலைமைவேறு. அதற்கு ஒரே வெளிச்சம் தான் இருந்தது. தமிழ்த்தேசியம் என்ற கண்ணுக்குப் புலப்படா ஒரு சொற்றொடரைப் பற்றிய உச்சாடனங்கள் அப்போது அதிகம் முனகப்பட்டவை. படைக்கப்பட்ட அந்த நூறு வீதத்தில், முக்கால்வாசிக்கு மேல் கவிதைகளால் நிறையப்பெற்ற பாலை வெளிகள். தூய தமிழ் அதிகாரத்தால் பேசப்பட்டதால், அது குரல் வீச்சோ அல்லது வீரியமோ பெறத் தவறிவிட்டது. எல்லாக் கதவுகளையும் சாத்திவிட்டு மூடிய அறைகளுக்குள் யுத்தம் செய்யப்பட்டபோது பதிவாகிய அவலக்காட்சிப் பதிவுகள் உலகத்தவர்க்கு மொழி பெயர்க்கப்படவில்லை. மொழி மாற்றம் செய்யப்பட்டவையும் மற்றையோருக்குப் புரியவில்லை. இந்தப் போக்கை நிராகரித்து எதிர்த் திசையில் பயணித்தவர்களும் பகையாளிகளைப் பழிவாங்குவதற்காக எழுத்தை அதிகமாகப் பயன்படுத்தினரே தவிர, சனங்களுக்காகப் பயன்படுத்திய வீதம் மிகக்குறைவு. இதனால் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவு, எதிர்ப்பு என்ற இரு மனநிலைகளுக்குள் படைப்பாளர்கள் தள்ளப்பட்டனர். அதற்கு ஆதரவானவர்களின் எழுத்து உள்ளக ரீதியாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் உலகளவில் செல்லுபடியாகும்தன்மை குறைந்த ஒன்றாகவே இருந்தது. வறட்டு மேதாவித்தனம் இதனை விமர்சனத்தோடு ஏற்றுக்கொள்ளும் மனநிலையைத் தள்ளி வைத்து விட்டது. பாவப்பட்ட படைப்பாளிகள் துப்பாக்கிகளுக்கு பயந்தும், அதிகார விருப்பினாலும், மரபார்ந்த கொள்கைளின் பிடிவாதத்தினாலும் மெய்யுணர்வோடு காலத்தைப் பார்க்க, படைக்கத் தவறினர். இதனால் தம்மையறியாமலேயே அதிகாரத்துக்குப் புகழ்பாடும் மனோநிலையை வளர்த்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட பொதுப்புத்தியொன்றினால் துரோகிகள் என அடையாளப்படுத்தப்பட்டவர்களின் பிரதிகளைப் படிப்பதே குற்றத்துக்குரிய ஒன்றாக நோக்கப்பட்டது. ஆனால் வெளியுலகில் அவர்கள் அடையாளப்படுத்திய துரோகிகள் படைத்ததே வரலாறாகிப் போனது. உதாரணமாக எல்லோரும் அறிந்த முறிந்த பனை, புதியதோர் உலகம், ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம், கொரில்லா, என அந்தப் பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த எழுத்துக்கள் வலுப்பெற்றளவுக்கு சுதந்திர வேட்கை, பூவரசம் வேலியும் புலினிக்குஞ்சுகளும் தாக்கம் பெற்றனவா என்பது கேள்விக்குறியே? தமிழரின் உண்மையான விடுதலைப் போராட்ட வரலாற்றையும் உணர்வையும் வெளிப்படுத்துபவையாக அறிவிக்கப்பட்ட இவ்வெழுத்துக்கள் இப்போது பெரும்பாலான நூலகங்களிலும் வீடுகளிலும் காணக்கிடைப்பதில்லை. அவை எரிக்கப்பட்டோ ஒழிக்கப்பட்டோவிட்டன. ஈழ மக்களின் வரலாற்றைப் புலப்படுத்தும் எழுத்துக்கு நேர்ந்த அவலம் இது தான். இந்நிலைமை தமிழரின் ஆயுத ரீதியிலான விடுதலைப் போராட்டம் மௌன நிலையடையும் வரை நீடித்தது. அதற்குப் பின்னர் என்ன நேர்ந்தது?. அந்த யுக படைப்பாளர்கள் என்ன செய்தனர்?.

முள்ளிவாய்க்கால் பேரவலம் பலவற்றை அழித்துப்போனது. அங்காங்கே தெளிக்கப்பட்டிருந்த சுமந்து வந்த அவலக்கதைகள், விடுதலைப்போராளிகளின் வலிகள் போன்றன எழுத்து வடிவம் பெற்றிருந்தன. யுத்தம் அவற்றையும் மனிதர்களோடு சேர்த்துப் புதைத்து விட்டது. தான் வரும்போது [illegible]ங்கிலாற்றில் இரண்டு உரப் பைகளில் அவ்வாறான புத்தகங்களை புதைத்து [illegible] வந்ததாக ஒருவர் குறிப்பிட்டார். இவ்வாறு ஏராளமான குருதிதோய்ந்த தமிழ[illegible] படைப்புக்களை, முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட போர் கறையான்களுக்கு உணவாக்கி விட்டது. அதற்குப் பின்னர் தடுப்புக்களுக்கு போனவர்களையும், பயந்தொழிந்து திரிந்தவர்களையும் காப்பாற்ற யாரும் இருக்கவில்லை. ஒரு சிலரைக் கட்சி சார்ந்த வால் பிடி அரசியல் காப்பாற்றிக் கரைசேர்த்தது. எஞ்சியோர் அந்தரத்தில் தொங்கி வறுமையில் காய்கின்றனர். தப்பிவந்த படைப்பாளர்கள் இப்போது மூன்று அணிகளாகப் பிரிந்து தமிழ் கடனை நிறைவேற்றத் தொடங்கியுள்ளனர். அதில் முதலிடத்தில் இருப்பவர்கள், தமிழ்தேசியம் பேசுவதிலும் வலு கெட்டிக்காரர்களாய் ஜொலித்தவர்கள். அதனால் அங்கும் பல உயர் பதவிகள் காத்திருந்தன. அவர்களுக்கு அதே சலுகை தான் இப்போதும். அரசியல் சாய்வுகளுக்குப் பின்னால் அருமையான சாய்வு நாற்காலிகள் கிடைத்திருக்கின்றன. எழுதிக் குவிக்கின்றனர். தமது வருமான மூலங்களுக்கான அவல எழுத்தைக் கண்டுபிடித்து விட்டனர்.இவர்களின் காட்டில் இப்போது நல்ல அடைமழை.

அடுத்த வகையினர் மெல்லவும் முடியாமல் விழுங் கவும் முடியாமல் நிற்பவர்கள். சனங்களுக்காக எழுதத் தொடங்கி, இப்போதும் அதனை விட்டுக் கொடுக்க முடியாமல் முழுசிக்கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களும் மிகக் குறைவு. ஆங்காங்கே சில பத்திரிகை கள், சஞ்சிகைகள் மிச்சம் பிடித்து வெளியிடுகின்றன. இவர்களாலும் உடனடியாக மெய்யுணர்வு நிலைக்குத் திரும்ப முடியவில்லை. கடந்த காலம் வைரமான கனவை ஆழப்பதித்து விட்டது. மாற்றங்கள் உடனடியாகச் சமிபாடடைய மறுக்கின்றன. மூன்றாவது வகையினர் இந்த எழுத்துலகத்தில் இருந்து ஆயுத மௌனிப்போடு எழுத்தையும் மௌனமாக்கி விட்டனர். 2009க்கு முன்னர் கல[illegible]ன பங்கினை இத்துறைக்கு வழங்கிய இவர்கள[illegible]ல் இப்போது எதுவும் செய்யமுடியாமல் இருக்கின்றது. ஆனால் போரின் இறுதிக் கணங்களைப் பற்றிய அதிக ஆதாரங்கள், உண்மைத் தரவுகள் இவர்களிடம் இருக்கின்றன. ஆனாலும் அதனை வெளிப்படுத்த முடியாமல் அமைதியாகிவிட்டனர் தோற்றுப் போன வெட்கமும், பயமும் இந்த நிலையை ஏற்படுத்தியிருக்கலாம். பாதுகாப்பாக புலம்பெயர் தேசங்களில் மௌனமாக அலைபவர்களும் இப்படியே பொழுதைப் போக்குகின்றனர். இதற்கு மீள முடியாத தோல்வியின் பேரதிர்ச்சியும் ஒரு காரணமாக இருக்கலாம். இத்தரப்பினர் தொடர்ந்தும் இப்படியே இருந்தால் சனங்களின் உண்மையான துன்பங்களை வெளியிட முடியாமலே போய்விடும். முதல் வகையினர் சொல்லுவது தான் வரலாறாகப் போகின்றது. இப்போது [illegible]க எழுதாத இந்தப் பே[illegible]க்களால் தமிழர்களுக்கு என்ன பயன்? நம் இனத் துயர் எப்போதும் பேச்சற்றவைகளாக மாறப் போகின்றது. வரலாறு மௌன வெளிகளால் நிறைக்கப்படும் அவலம் நம் கண்முன்னே நிகழ்ந்தேறுகின்றது. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# யாழ்ப்பாணம் - ஆவரங்கால்
# சிவசக்தி
## மணிமண்டபம்
## எட்டாவது அகவை நிறைவு
## அறக்கொடை விழாச் சிறப்புமலர்

**V & T Trust**
ஆவரங்கால்

### இன்று இடம்பெறும் அறக்கொடை விழா நிகழ்வுகள்

இடம் : சிவசக்தி மணிமண்டபம்
காலம் : இன்று 24.09.2011 பிற்பகல் 3 மணி

**தலைவர்**
திரு.வே. கந்தசாமி (Retired Deputy Auditor General)
(செயலாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, சிவசக்தி மணிமண்டபம், ஆவரங்கால்)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
(தமிழ்த்துறைப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

**நிகழ்ச்சி நிரல்**

★ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானத்தில் வழிபாடு
★ மங்கல விளக்கேற்றல்
★ இறைவணக்கம் : ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்
★ தமிழ் வணக்கம் : ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்
★ வரவேற்புரை : திரு. அ. தில்லைநாதன் (உபசெயலாளர், ஆலோசனைச் சபை)
★ ஆசியுரை : பிரம்மஸ்ரீ வே.நடராசாக் குருக்கள் (பிரதம குரு, நடராஜ இராமலிங்கசுவாமி தேவஸ்தானம்)
★ தலைமையுரை
★ பிரதம விருந்தினர் உரை
★ சிறப்பு விருந்தினர் உரை
★ கௌரவிப்பு
- சமய சமூகப் பணிகளால் ஏற்றம் பெற்ற திரு. ச.லலீசன் அவர்களுக்கான கௌரவம்
- தரம் ஐந்து புலமைப்பரிசில் தேர்வில் வெற்றி யீட்டிய மாணவரைக் கௌரவித்தல்
- க.பொ.த. (சா.த.) தரப் பரீட்சையில் திறமைச் சித்தி யெய்திய மாணவரைக் கௌரவித்தல்

★ பரிசளிப்பு : மண்டபத்தினரால் நடத்தப்பட்ட சைவ நெறியியற் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு
★ கலைநிகழ்வு : அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கும்மி நடனம்
★ சிறப்புக் கலை நிகழ்வு
திரு. ச.லலீசன், திரு.கு.பாலசண்முகன், திரு.இ.சர்வேஸ்வரா, திரு.சி.சஜீபன் வாதிகள் சார்பிலும் பிரதிவாதிகள் சார்பிலும் வாதாடும் அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் வழங்கும் வழக்காடு மன்றம்

**குற்றவாளிக் கூண்டில் யாழ்ப்பாணப் பெற்றோர்**
நீதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி
(பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

★ நன்றியுரை : திரு.நீ.மயில்வாகனம் (செயலாளர், ஆலோசனைச் சபை)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினரும்**
**ஆலோசனைச் சபையினரும் ஊழியரும்**

*சிவசக்தி மணிமண்டபம்*
V & T Trust ஆவரங்கால்

### ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



ஆவரங்கால் கிராமத்தில் உதித்து தனக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று விளங்குகிறது அவரங்கால் சிவசக்தி மணிமண்டபம். இதன் நிறுவுநர் ஸ்ரீமான் வேலுப்பிள்ளை சிவசுந்தரம் தனது தந்தைக்கும் தாய்க்கும் அர்ப்பணமாக அவர்களது பெயரில் நம்பிக்கை நிதியத்தை நிறுவி சிவசக்தி பெயரால் மண்டபத்தை அமைத்திருக்கிறார். மண்டபத்தின் வருவாய் முழுவதையும் பிரதேசத்தினுடைய அறப்பணிகளுக்காக அவர் வழங்குகின்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

ஸ்ரீமான். வே.சிவசுந்தரம் ஆவரங்கால் கிராமத்துடன் மாத்திரம் தனது பணிகளை எல்லைப்படுத்தாது அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கான ஆராய்ச்சி நூலகம் அமைத்தல் பணியை முழுமையாக ஏற்றுச் செயற்பட்டவர். அத்துடன் எமது ஆதீனப் புனரமைப்புக் குழுவில் அங்கம் வகித்து ஆதீன வளர்ச்சிக்காக அரும்பணியாற்றுகிறார். இவரது சகோதரரும் சிவசக்தி மணிமண்டப நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் செயலாளருமான வே.கந்தசாமி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொருளாளராக இருந்து அரும்பணியாற்றுகிறார். ஆவரங்காலில் இருந்தவாறு மண்டபப் பணிகளை வழிநடத்தும் ஆலோசனைச் சபைத் தலைவர் இளைப்பாறிய அதிபர் வ.ஆறுமுகம் சமூகப் பணிகளாலும் கல்விப் பணிகளாலும் இப்பிரதேசத்தவர்களால் நன்கு அறியப்பட்டவர். இவ்வாறு சமூகப் பணிகளில் முதன்மைபெறும் உள்ளங்கள் இணைந்து செயற்படுத்தும் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தின் அறக்கொடை விழா சிறப்புற்று அமைய வாழ்த்துகின்றோம்.

மணிமண்டபப் பணிகள் சிறப்புற்று ஓங்க உழைக்கும் உள்ளங்கள யாவற்றுக்கும் நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.*

### ஆலோசனைத் தலைவரின் செய்தி



ஆவரங்கால் என்றதும் அனைவரது நினைவிலும் வருவது சிவசக்தி மணிமண்டபம்தான். இந்த மண்டபத்தின் எழுச்சி ஆவரங்கால் கிராமத்தின் உயர்ச்சியாக நோக்கத்தக்கது. பிரதான நெடுஞ்சாலையில் நெடிதுயர்ந்து காண்போரைக் கவரும் வனப்புடன் திகழ்கிறது மண்டபம். வாழைத் தோட்டமாக இருந்த நிலம் இன்று பலரை வாழ வைக்கும் நிலையமாகச் செயற்படுகின்றது.

லண்டனில் வாழும் தொழிலதிபர் வேலுப்பிள்ளை சிவசுந்தரத்தின் எண்ணத்தில் செயல்வடிவம் பெற்ற இம்மண்டபத்தை 12.07.2003 அன்று அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திறந்து வைத்தார். ஆவரங்காலையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களதும் பொருளாதாரக் கட்டுமான உயர்வுக்கு இம்மண்டபம் ஒரு மூலதனமாக அமைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இதன் வருவாய் முழுவதும் அறப்பணிகளுக்காகவே நல்கப்படுகிறது.

வறுமை ஒழிப்புக்கு இயன்ற உதவிகளை மண்டபத்தார் மேற்கொள்கின்றனர். இப்பிரதேசத்திலுள்ள 40 குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களில் ஓர் அங்கத்தவர் மாத்திரம் உள்ள குடும்பம் எனின் மாதமொன்றுக்கு 500 ரூபாவும் இரு அங்கத்தவர்களெனின் 750 ரூபாவும் அதற்கும் மேல் எனின் ஆயிரம் ரூபாவும் நிதியுதவியாக வழங்குகின்றனர்.

இதைவிட உயர் கல்விக்குத் தகுதி பெறும் பொருளாதார வளம் குன்றிய மாணவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கி ஊக்குவிக்கின்றனர். ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளில் திறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசுகளை வழங்குகின்றனர். பிரதேச மாணவரின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஆன்மீக வினாவிடைப் போட்டியையும் கோலம் போடுதல் பூமாலை கட்டுதல் முதலான போட்டிகளையும் நடத்துகின்றனர். சிவன் தேவஸ்தானத்தினரால் நடத்துப்படும் அறநெறிப் பாடசாலைக்கான நிதியை வழங்குகின்றனர். நூல் நிலையங்களின் மேம்பாட்டிற்கென நூல்களைக் கொள்வனவு செய்து வழங்குகின்றனர். இதைவிட கிராம மேம்பாட்டிற்காக நடத்தப்படும் நிகழ்வுகளுக்காக இலவசமாக மண்டபத்தையும் வழங்கி வருகின்றனர்.

இன்றைய அறக்கொடை விழா சிறப்படைய எம்மூரில் கோயில் கொண்டருளும் நடராஜ இராமலிங்க சுவாமியின் திருவருளுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வ.ஆறுமுகம், ஆலோசனைச்சபைத் தலைவர்

### பிரதம குருவின் ஆசிச்செய்தி



சைவமும் தமிழும் செழித்தோங்கும் எங்கள் புண்ணியப் பதியாம் ஆவரங்காற் பதியில் சிவன் கோவில் சூழலில் அமைந்துள்ள சிவசக்தி மணி மண்டபம் இறையருளால் இன்று எட்டாவது வயதை நிறைவு செய்துள்ளது. அறப்பணிகள் ஆற்று வதை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்ட இம்மண்டபம் இன்று அறக்கொடை விழாவை நடத்துவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மண்டபங்களுள் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்துக்கு ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது. இறையருளொளி வீசும் தெய்வீகம் இங்கு நிறைந்திருப்பதால் குடாநாட்டின் வெவ்வேறு பாகங்களில் இருந்தெல்லாம் தமது வாழ்க்கையைத் தொடக்க விழைகின்ற மணமக்களுக்கான மணவிழாத்தானமாக எங்கள் மணிமண்டபம் திகழ்கின்றது. மணிமண்டபம் மூலம் ஈட்டப்படும் வருமானம் முழுவதும் பிரதேச வளர்ச்சிக்காகவே அர்ப்பணிக்கப்படுகின்றது. இது மிகவும் போற்றுதற்குரிய செயற்பாடாகும்.

இன்று இடம்பெறும் அறக்கொடை விழாச் சிறக்கவும் மணிமண்டபச் செயற்பாடுகள் இந்த வையகம் உள்ளவரை வளம் பெறவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

*பிரதிஷ்டா வித்தகர் சிவஸ்ரீ. வே.நடராஜக் குருக்கள்*
*ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானப் பிரதமகுரு*

### ஸ்தாபகரின் செய்தி



இலங்கை வாழ் மக்களுக்கும், குறிப்பாக யாழ் மாவட்டத்திலுள்ள ஆவரங்கால் கிராமத்து மக்களுக்கும், அதன் அயல் கிராமங்களில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வோருக்கும், ஊனமுற்றவர்களுக்கும், சேவை செய்ய எண்ணி வேலுப்பிள்ளை சிவசுந்தரம் ஆகிய நானும், எனது சகோதரர்களான வேலுப்பிள்ளை கந்தசாமி மற்றும் வேலுப்பிள்ளை இளையதம்பி ஆகிய மூவரும் ஆவரங்கால் V&T அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தை ஆரம்பித்தோம்.

அதனை ஒரு சட்டரீதியான அறக்கட்டளையாகக் கொண்டுவர சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் அவர்களின் உதவியுடன் உயிலைத் தயாரித்துக் கையெழுத்திட்டோம். இந்த அறக்கட்டளை நிதியத்தை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை தெரிவித்து, ஆவரங்கால் மணிமண்டபத்தைக் கட்டி முடிக்கும் வரை பல வழிகளிலும் உதவிசெய்து வழிகாட்டியாக இருக்கும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இளைஞர்களுக்கு கல்வி கற்பதற்கு மாத்திரமல்ல மேலும் பலவித உதவிகளையும், முக்கியமாக இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படும்போதும் தேவையான உதவிகளையும் "V&T அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்" செய்து வருகின்றது. இது தவிர வசதி குறைந்த மாணவர்கள், இளைஞர்கள் 50 பேருக்கு மாதாந்தம் பண உதவியும் நல்குகிறது.

மனிதநேய மற்றும் சமூக நலன் பணிகளுக்கு V&T அறக்கட்டளை நிதியம் உதவி வருவதால் யாழ்குடா மக்கள் அதிகமாகத தமது திருமண வைபவங்களையும், ஏனைய விழாக்களையும் முன்கூட்டியே ஆவரங்கால் மணிமண்டபத்தில் ஒழுங்கு செய்து எமது பணிகளுக்கு உதவி வருகின்றனர். அவர்களின் விருப்பை நிறைவேற்றவும், அவர்களின் மனச் சந்தோசத்துக்காகவும் இந் நிதியம் சேவையாற்றி வருகிறது. ஆவரங்கால் மணிமண்ட பத்தை செவ்வனே நடத்துவதற்கு உதவிவருகின்ற அறங்காவலர் களான நாம், ஆலோசனைச் சபைத் தலைவர், உறுப்பினர்கள், முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இவ்வேளை யில் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்தப் பணி மேலும் தொடரவும் வசதி குறைந்த ஆதரவற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் V&T அறக் கட்டளை தொடர்ந்து தனது பணியை செவ்வனே கொண்டு செல்ல எல்லாம் வல்ல ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமியின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

*வேலுப்பள்ளை சிவசுந்தரம், ஸ்தாபகர்.*

### பலர் வாழ்வுக்கு உதவும் சிவசக்தி மணிமண்டபம்




ஆவரங்காலில் பிறந்து லண்டனில் வாழும் உயர்திரு வே.சிவசுந்தரம் அவர்கள் தான் பிறந்த ஊருக்கு அளித்த உலகறிந்த உன்னத சொத்தே சிவசக்தி மணிமண்டபம். அறநெறி காக்கும் V&T அறக்கட்டளையின் நிர்வகிப்பில் இயங்கும் இம்மண்டபத்தின் வருவாய் முழுவதும் தர்ம காரியங்களுக்குப் பயன்படுவது மெச்சத்தக்க விடயமாகும். ஏழை மாணவர்கள், கணவனை இழந்த கைம்பெண்கள் எனப் பலர் வாழ்வுக்கு உதவும் சிவசக்தி மணிமண்டபம் என்று வாழ்த்துதலுக்கும் போற்றுதலுக்குமுரியது. நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற ஆராய்ச்சி நூல் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு முழுநிதியையும் வழங்கியவர் உயர்திரு லே.சிவசுந்தரம் அவர்கள். லண்டன் மாநகரில் நடைபெறும் சைவத் தமிழ் விழாக்கள் அறப்பணிகளில் இவரது பேருதவியை வாழ்த்தாதவர்களில்லை. நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனப் புனரமைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் இப்பண்பாளர் அதன் வளர்ச்சிக்கு பல்வேறு செயற்றிட்டங்களை உருவாக்கி வருவது சைவ உலகுக்கு ஆறுதல் தரும்செய்தியாகும். சிவபூமி அறக்கட்டளை ஆரம்பித்த நாள் முதல் அதன் வளர்ச்சிக்கு அயராது உதவும் சிவப்பணியாளர் திரு.வே.சிவசுந்தரம் அவர்களையும் அவரது V&T அறக்கட்டளையினரையும் என்றும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். சிவசக்தி மணிமண்டபம் சூரியன், சந்திரன் நிலைபெற்று ஒளிதருவதுபோல் என்றும் சிறக்க வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

*'யாவருக்குமாம் என்றும் இன்னுரை தானே'*

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்

*சமய சமூகப் பணிகளால்*
*உயர்ந்து எமது பிரதேசத்திற்கு*
*ஏற்றம் தரும்*
*மண்மைந்தனுக்குக் கௌரவம்*



கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் அவர்களுக்கு இன்றைய அறக்கொடை விழாவில் *'செந்தமிழ்ச் சொல்லருவி'* என்ற கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

### மனநிறைவைத் தருகிறது



எங்கள் சிவசக்தி மணிமண்டபத்தின் எட்டாவது ஆண்டு நிறைவையொட்டி அறக்கொடை விழா இடம் பெறுவது மனநிறைவைத் தருகின்றது. எம்மை ஈன்றெடுத்து உயர்த்திய எமது தாய்தந்தையரின் நினைவாக வி அன்ட் ரி (அமரர் வ.வேலுப்பிள்ளை, அமரர் வே.தெய்வானை) ரஸ்ட் இனால் இம்மண்டபம் பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

மனித நேயம் மற்றும் சமூக நலப் பணிகளுக்கு முதன்மை வழங்கி எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். இவற்றிற்கெல்லாம் தோன்றாத் துணையாய் விளங்கும் இறையருளையும் வழிகாட்டும் பெரியோர்களையும் இந்நன்னாளில் பணிந்து வணங்குகின்றோம்.

எதிர்வரும் காலங்களிலும் நாம் முன்னெடுக்கும் அறப்பணிகளுக்குத் தங்கள் யாவரதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் அன்போடு நாடுகின்றோம்.

"அறத்தால் வருவதே இன்பம்"

*வே. கந்தசாமி, செயலாளர்.*
*சிவசக்தி மணிமண்டப நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.*

மணிமண்டபத் தொடர்புகளுக்கு: Tel: 021 2264131. e-mail: info@sivasakthimm.com Web: www.sivasakthimm.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வன்னியில் பல வீதிகள் புனரமைப்பு

முல்லைத்தீவு, செப்.4

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வன்னிப்பகுதியின் பல்வேறு வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் எந்திரி மோசஸ் மரியதாசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அந்த செய்திக் குறிப்பில், வட மாகாணத்தில் உள்ள ஏ-9 யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் 136 கிலோ மீற்றர் நீளமும் (B-296) முல்லைத்தீவு புளியங்குளம் வீதியின் 41.83 கிலோ மீற்றர் நீளமும் (AB-35) பரந்தன் முல்லை வீதியின் 52.15 கிலோ மீற்றர் நீளமும் A.34 மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் 49.29 கிலோமீற்றர் நீளமும் (B-297) முல்லைத்தீவு புல்மோட்டை வீதியில் 42 கிலோ மீற்றர் நீளமுமென ஐந்து வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நியமிக்கப்பட்டுள்ள திட்டப்பணிப்பாளர்களின் கீழ் புனரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளன. இந்தப் பணிகள் யாவும் எதிர்வரும் முப்பது மாதகாலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இதே வேளை பரந்தன்-பூநகரி வீதி, மாங்குளம்-வெள்ளாங்குளம் வீதி, நாவற்குழி-கேரதீவு வீதி ஆகியவையும் புனரமைக்கப்படவுள்ளன.

இதை விட முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள 50 கிலோ மீற்றர் நீளமுள்ள 16 கிராமிய வீதிகள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டங்களை அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கடந்த 26 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதேவேளை ஏனைய வீதிகளும் கட்டம் கட்டமாக புனரமைக்கப்படும் எனவும் வடக்கு மாகாணப் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-6)

# தரமான கோழிக்குஞ்சுகள் மானிய விலையில் விநியோகம்

முல்லைத்தீவு, செப்.4

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மானிய விலையில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பகுதியில் கோழிப்பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்ட ஒரு மாதமுடைய கொல்லைப் புறக் கோழிக்குஞ்சுகள் 50 வீத மானிய அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளன. இதனடிப் படையில் எதிர்வரும் 5ஆம் திகதி இந்தக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

நடமாடும் வியாபாரிகள் மூலம் விற்பனை செய்யப்படும் தரமற்ற கோழிக்குஞ்சுகளை வாங்கி ஏமாற்றமடையாமல் உள்ளூர் அமைப்புக்களாகிய கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தரமான கோழிக்குஞ்சுகளை மானிய விலையில் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துணுக்காய் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், மாந்தை கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றின் மூலம் கடந்த ஒரு வருடத்திற்குள் அறுபதாயிரம் வரையான கொல்லைப்புறக் கோழிக் குஞ்சுகள் 50 வீத மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# மர்ம நபரால் குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

மன்னார், செப்.4


மன்னார் நாகதாழ்வு கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மர்ம நபரின் தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்துள்ளார்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகதாழ்வு கிராமத்தில் கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் வீடு ஒன்றுக்குள் சென்ற மர்ம நபர் ஒருவர் அங்கிருந்தவர்களைக் கூப்பிட்டார். அப்போது அந்தக் குடும்பத்தின் தலைவர் வெளியில் வந்தார். உடனே அந்த மர்ம நபர் பாய்ந்து, பாய்ந்து அவரைத் தாக்கினார்.

இதனால் நிலை தடுமாறிய குடும்பத் தலைவர் அலறத் தொடங்கினார். ஆனால் அந்த மர்மநபர் தொடர்ந்து தாக்கிவிட்டு மறைந்தோடி விட்டார்.

இந்தச் சம்பவம் அந்தக் கிராமத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-601)

செழிப்புக்கு அறிகுறி...



நீர் வளம் பெருகும் கிளிநொச்சிக் குளத்தின் குளக்கட்டு வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. (405)

# கற்சிலைமடு கிராம அபிவிருத்திக்கு புதிய நிர்வாகம்

முல்லைத்தீவு, செப்.4

முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் அண்மையில் கற்சிலைமடுவில் நடைபெற்றது. முன்னாள் தலைவர் நா.வன்னிய சிங்கம் தலைமையில் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தெரிவின்போது சங்கத்தின் புதிய தலைவராக இ.தனபாலசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

உப- தலைவராக சி.நவரத்தினம் தெரிவானார். செயலாளராக சி.வேதவனமும், உப-செயலாளராக வே.மோகனதாசும் தெரிவானார்கள். பொருளாளராக சு.நாகராசா தெரிவுசெய்யப்பட்டார். (த-50)

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரம் பேருக்கு காணியில்லை

கிளிநொச்சி, செப்.4

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் சுமார் 12 ஆயிரம் பேர் வரையில் காணிகள் இன்றி இருப்பதாகப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்கள் உள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது சுமார் 12 ஆயிரம் பேர் சொந்தக் காணிகள் இன்றிக் காணிகளுக்கு விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார்34 ஆயிரம் பேர் சொந்தக் காணிகளில் உள்ளனர். மலையகத் தோட்டப் பகுதிகளில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக மீளக்குடியமர்ந்தவர்களும் சொந்தக் காணிகள் இன்றிக் கடந்த பல ஆண்டுகளாக ஏனைய விவசாயிகளின் காணிகளிலும், அரச காணிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு சொந்தக் காணிகள் இல்லாத நிலையில் இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் கிடைப்பதிலும் பின்னடைவுகள் காணப்படுவதாகக் காணிகள் இல்லாத மக்கள் தெரிவித்துள்ளனர். (க-06)

# முல்லை. மாட்டு வண்டிச் சவாரியில் யாழ்.போட்டியாளர்களுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு, செப்.4

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் கலந்துகொள்வதற்கு யாழ். மாவட்டப் போட்டியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லையென போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாந்தை கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் வவுனிக்குளம் வீரசிங்கம் சவாரித்திடலில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியில் நாதன் திட்டம், புன்னை நீராவி, விசுவமடு, பூநகரி, மன்னார், மல்லாவி, பாண்டியன் குளம் ஆகிய பகுதிகளில் இருந்து 31 சோடி சவாரி மாடுகள் பங்கு பற்றியிருந்தன.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர்களின் மாடுகளைப் போட்டியிடத்துக்கு கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லையென முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-06)

# ஏ-9 வீதியில் வாகன சாரதிகளைக் கவரும் மதுபான சாலைகள்

வாகனம் செலுத்துபவர்களும் வாகனத்தில் செல்பவர்களும் மது அருந்துவதற்காகவே ஏ-9 வீதியில் மதுபானச்சாலைகள் உருவெடுத்திருப்பதைக் காணமுடிகிறது.

இங்கு வாகனங்களை நிறுத்தி விட்டுச் சாரதிகள் மது அருந்துவதை வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது. இதைப்பற்றி எவருமே கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.

ஏ-9 வீதியில் இருக்கின்ற சில இளைப்பாறும் இடங்கள் என்ற பெயரைத் தாங்கியுள்ள இடங்களுக்கு முன்னால் பெருமளவான வாகனங்கள் மதுவுக்காகக் காத்திருப்பதைக் காணமுடியும்.

பெருமளவான பயணிகளும், வாகனங்களும் போக்குவரத்துச் செய்யும் வீதியான ஏ-9 வீதி காணப்படுகின்றது.

இப்போது இந்த வீதி திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. வீதியில் குறிப்பிட்ட ஒரு பக்கத்தால் மிகவும் அவதானமாகவே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்த ஏ-9 வீதியில் அண்மையில் கூட கிளிநொச்சியில் ஒரு டிப்பர் வாகனம் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவி ஒருத்தியை மோதி விட்டு நிற்காமல் வேகமாக ஓடிச் சென்று ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் மீண்டும் ஒரு மாணவியை மோதி விட்டு நிற்காமல் வேகமாகச் சென்று ஆனையிறவுக்கு அருகில் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.வாகனம் செலுத்துபவர்களில் சிலர் மதுபானச் சாலைகளில் மது அருந்தி விட்டு அவதானமற்ற நிலையில் நடந்து கொள்வதால் அநியாயமான இழப்புக்கள் ஏற்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

ஏ-9 வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்து நிற்கும் வாகனங்களை விட மது விற்பனை நிலையங்களிலேயே பெருமளவான வாகனங்கள் கூடி நிற்பதனை அவதானிக்க முடிகிறது. (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் றோட்டில் பதின்நான்கு பரப்பு நல்ல நிலையில் தோட்டம் செய்யக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டியது:
T.P 0777852864

(7512)


## றெக்டர் விற்பனைக்கு

Massey Ferguson 25 SRI XXXX
றெக்டர் விற்பனைக்கு உண்டு.
New Model MF 135 DL இன்யின்.
பெரிய கிரங். புதிய வெற்றி.
விலை 375,000.00.

தொடர்பு: 0771670079

(7513)

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கதிர்காமு
கிருஷ்ணபிள்ளை

தோற்றம்
11.09.1928

மறைவு
27.07.2011

கடந்த 27.07.2011 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.09.2011) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்விலும் தொடர்ந்து மு.ப.9 மணியளவில் இடம்பெறவுள்ள "வெகுஜனப் போராளி கிருஷ்ணபிள்ளை" எனும் நூல் வெளியீட்டு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தொண்டமானாறு. (7522)

குடும்பத்தினர்.

## CIC CropGuard
Perfect Crop Protection

## தொழில் வாய்ப்புகள்

CIC GropGuard (Pvt)Ltd விவசாயத் துறையில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகும். மற்றும் நாட்டில் பெயர் பெற்ற விவசாயத்துறையில் பெரிய நிறுவன்மான CIC Holdings PLC இன் துணை நிறுவனமுமாகும்.

உத்வேகம், உற்சாகம் மற்றும் தொடர்பாடல் திறமையும் கொண்ட இளைஞர்களை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து பின்வரும் பதவிக்கு எமது நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

### பதவி : விற்பனை முன்னேற்ற அலுவலர்கள்

தெரிவாகும் விண்ணப்பதாரி பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும்.

★ விவசாயத்தில் டிப்ளோமா அல்லது அதற்கு இணையான தகுதி
★ வயது 30 இற்கும் கீழ்
★ இம் மாதிரியான ஒரு பதவியில் முன் அனுபவம் மேலதிக தகுதியாகும்.
★ செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்
★ தெரிவாகும் விண்ணப்பதாரிக்கு கம்பனிக் கட்டமைப்பு பயிற்சி உட்பட தொழில் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் உண்டு.

மேற்படி தகுதிகள் உடையவர்கள் உறவினர்கள் அல்லாத இருவரின் தொடர்பு விவரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு இவ்விளம்பர தினத்தில் இருந்து ஏழு (07) நாள்களுக்குள் விண்ணப்பிக்குக. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

Senior Manager - Human Resource Management
*CIC Holdings PLC,* CIC House
199, Kew Road, Colombo - 02
Fax: 0112331771, Email: hrd@cic.lk

## தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை . சாப்பாட்டுடன் தங்குமிட வசதியுண்டு. ஆண்,பெண் தேவை.

**இராசம் அரிசி ஆலை**
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
0779590974

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாயுடைய தனியார் துறையில் வேலை செய்யும் மணமகனுக்கு, பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறார்கள். சாதகக் குறிப்புடனும் படத்துடனும் அனுப்பவும்.

மே/பா உதயன்,
விளம்பர இல: 4153
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## மணமகள் தேவை

யாழ். திருநெல்வேலி R.C 1976 ஆம் ஆண்டு FRANCE CITIZEN மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : E - mail : yogaregi 2011 @ gmail.com
Tel: 0773359766

## Diesel Car விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Morris oxford Diesel Car விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 0750441948
No 22/2, Kondalady Lane, Nallur, Jaffna.
பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 4.00

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
*பிரபல மனோதத்துவ நிபுணர்*

**Dr. P. ஆறுமுகம்**

T.P-0719315664,0777569205

யாழில் 05.09.2011-10.09.2011 வரை

பதிவுக் கட்டணம் ரூபா: 300/=

ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
[illegible], 392, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.

## After O/L or A/L

பிரித்தானியாவில் இருந்து நேரடிச் சான்றிதழ்
யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக

**International Diploma in Computing**

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையில் பட்டப்படிப்பிற்கான அடிப்படைக் கற்கைநெறி

**International Higher Diploma in Computing**

**International Diploma in Business Management**

வணிக முகாமைத்துவத் துறையில் பட்டப்படிப்பிற்கான அடிப்படைக் கற்கைநெறி

**International Higher Diploma in Business Management**

புதிய பிரிவுகள் 05.09.2011 மற்றும் 10.09.2011 மு.ப. 9.00

### Why Choose IDM — IDM Nations Campus

✓ மூன்று தசாப்தகால உயர்கல்விச்சேவை
✓ சர்வதேச் அங்கீகாரம் பெற்ற Edexcel UK மற்றும் EDhat UK நிறுவனத்தின் சான்றிதழ்
✓ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
✓ உங்கள் அயலிலேயே சர்வதேச கல்வித்தகைமை
✓ இலகு தவணைக் கட்டண வசதி
✓ அனுபவம் மிக்க நிபுணத்துவ விரிவுரையாளர்கள்
✓ அனுசரணையான நேரசூசி

#30, Main Street, Chankanai. Tel: 021 7 429 060. E-mail: chankanai@idmcc3.lk

## Bonam Venkata Chalamayya Engineering College

Approved by A.I.C.T.E, New Delhi
Affiliated to Jawaharal Nehru Technological University (JNTU - K)
Accredited by National Board of Accreditation (NBA)
Odalarevu, Amalapuram, East Godavari District,
Andhra Pradesh, India-533210

www.bvcec.org

A/L முடிவடைந்து விட்டதா? பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையென்று கவலையா? BVC ஐ சற்று சிந்தியுங்கள்-உங்கள் பொறியியல் கனவு நனவாகும்.

Scholorship's available



**COURSES OFFERED**
* B.Tech Civil Engineering
* B.Tech Mechanical Engineering
* B.Tech Electrical Engineering
* B.Tech Electronics & Communications
* B.Tech Computer Science & Engineering
* B.Tech Information Technology

**M.S.Educational Consultancy**
# 108, Kalaimagalveethy, Kalvinkaddu, Nallur, Jaffna, Srilanka.
Admission Contact: 0779213789, 0778767971

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை

### யோக சுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆன்மீக வாழ்வு

Spiritual Life Reflected in Natchinthanai of Yoga Swamigal

பேருரை வழங்குனர்: பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி : நாளை (05.09.2011) திங்கட்கிழமை

நேரம் : பிற்பகல் 3.00 மணி

*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பதிவாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தாமணியும் திருக்குறளும்

இலக்கியக் காட்சி - 101

(சென்றவாரத் தொடர்ச்சி)

சீவகனின் தந்தையான சச்சந்த மன்னன், தனது இன்ப உலகு வாழ்வுக்காக, உயிர் நண்பனாகக் காட்டி வாழந்த கட்டியங்காரன் என்பவனிடம் இராச்சிய அலுவலை ஒப்படைத்து விட்டான். தனக்கு விசுவாசமான நிமித்திகனை (வெளிறு இலாக் கேள்வியானை) வேறாக எண்ணிவிட்டான். இதனைப் பின்னர் உணரும் போது:

*"களிறனான் அமைச்சர் தம்முன்*
*கட்டியங் காரன் என்பான்*
*ஒளிறுவாள் தடக்கை யானுக்கு*
*உயிரென ஒழுகு நாளில்*
*பிளிறு வார் முரசின் சாற்றிப்*
*பெருஞ் சிறப் பியற்றி வேந்தன்*
*வெளிறு இலாக் கேள்வி யானை*
*வேறுகொண்டிருந்து சொன்னான்."*

எனச் சச்சந்தன் சொன்னதாக திருத்தக்க தேவர் பாடியுள்ளார். இதற்கு வள்ளுவர் காட்டிய,

*" அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்*
*இன்மை அரிதே வெளிறு"* (குறள் 503)

குறட்பாவில் வரும் "வெளிறு" என்னும் சொல்லை எடுத்தாண்டு இருத்தல் காணலாம். வெளிறு= அறியாமை. அரிய நூல்களைக் கற்று, காமம், வெகுளி, லோபம்,மானம், உவகை, மதம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்களிடமும் அறியாமை இல்லாமை அரிதுஎனச் சச்சந்தன் வருத்தப்படுவதைக் காட்ட இக்குறள் எடுத்தாளப்படுதல் காணலாம்.

மேலும்,சச்சந்தனின் மகனான சீவகன்(வணிகச் செல்வனால் வளர்க்கப்பட்டு) பலகலை அறிவுடையவனாய் வளர்ந்து பல இடங்களுக்கும் சென்று வருகையில் தக்க நாட்டுப் பெண்ணான பதுமை என்பவளை மணஞ்செய்து இரண்டு மாதத்தில் அவளைப்பிரிந்து சென்று சித்திர கூடத் தவப்பள்ளியை அடைந்து முனிவர்களைச் சந்தித்தான். முனிவர்கள் சீவகனுடைய அறிவாற்றலை வியந்து அவனுடன் உரையாடினர். அப்போது சீவகன், பிறப்பை நீக்குவதற்கு உடம்போடு கூடிய வாழ்க்கை இருக்கக் கூடாது என்றும், வீடுபேறு விரும்புபவர், சடைவளர்த்தல்,துவர் ஆடை உடுத்தல்,கபாலம் ஏந்துதல், ஏகாந்தமாதல் செய்வது மேலும் பிறவிக்கே வித்தாகும் என்றும் முனிவர்களிடம் கூறினார் என்று விளக்க வந்த திருத்தக்கதேவர்,

*"ஐயர் கூறலும் அண்ணலுங் கூறுவான்;*
*சையம் பூண்டு சமுத்திரம் நீந்துவான்*
*உய்யுமேல் தொடர்ப்பாட்டின் இங்கு யாவையும்*
*எய்தினார்களும் உய்ப என் றோதினான்"*

என்றும்

*"வீடு வேண்டி விழுச்சடை நீட்டல், மெய்ம்*
*மூடு கூறையின் மூடுதல், வெண்டலை*
*ஓடு கோடல் உடுத்தல் என்று இன்னவை*
*பீடு இலாப்பிறவிக்கு வித்து என்பவே"*

என்றும் சிந்தாமணியில் பாடியுள்ளார்.

முதற்பாட்டில் தொடர்ப்பாடு என்ற சொல்லை,

*" மற்றுந் தொடர்ப்பாடு எவன் கொல்? பிறப்பறுக்கல்*
*உற்றார்க்கு உடம்பு மிகை"* (குறள் 345)

என்ற வள்ளுவர் குறளில் இருந்து எடுத்தும்,

*"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்"* (குறள் 280)

என்ற வள்ளுவர் குறளை எடுத்தாண்டும் முத்தி நிலைக்கு சடைவளர்த்தலும் மொட்டையடித்தலும் ஓடு கொண்டு பிச்சை எடுத்தலும் வேண்டத்தக்கதல்ல எனக்காட்டி இலக்கியம் செய்துள்ளமை நயக்கத்தக்கது.

ஒருமுறை குணமாலை என்பவள் சீவகன் மீது கோபங்கொண்டு பிரிந்து போகையில் எதிரே வந்த யானை ஒன்று குணமாலையைக் கொல்ல வந்தது. உடனே சீவகன் யானையோடு போராடி அவளைக் காப்பாற்றினான். பின்பு குணமாலை அவனிடம் காதல் கொண்டு அவனை மணஞ்செய்தாள். அப்போது அவன் குணமாலையிடம்,

*"பூவார் புனலாட்டினுள் பூ நறுஞ்*
*சுண்ணம்*
*பா்வாய்! பணைத் தோள் சுரமஞ்சரி*
*தோற்றாள்;*
*காவாது அவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்*
*ஏவோ அமிர்தோ எனக்கு இன்று இது சொல்லாய்;*

என்று சொல்லி அவளைப் பராட்டினான். இந்தப் பாடலில், புறங்கூறாமை என்ற அதிகாரத்திலுள்ள,

*"கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க*
*முன்னின்று பின்நோக்காச் சொல்"* (குறள் 184)

என்ற திருக்குறளைத் திருத்தக்கதேவர் எடுத்து இலக்கியஞ் செய்திருப்பது படித்து இன்புறத்தக்கது.

மேலும்,

*"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்*
*கள்ளுக் கில் காமத்திற்குண்டு"* (குறள் 1281)

என்ற குறளைச் சுருக்கி,

*"களிகொள் காமத்திற் கையறவெய்தித் தன் கிளி யைத் தூது விட்டாள்"* எனத்திருத்தக்கதேவர் சிந்தா மணியில் இலக்கியஞ் செய்தமை படிக்கும் தோறும் இன்பம் பயப்பதாகும்.

இன்னும், சீவகநம்பி,தன்னைச் சுடுகாட்டிலிருந்து எடுத்து வளர்த்த கந்துக்கடனுக்கு அரசுரிமையையும் தாய் சுநந்தைக்குச் சித்திரத்தேவி பட்டத்தையும் வழங்கினான் எனச் சிந்தாமணி ஆசிரியர் கூறுவது

*"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை*
*என்நோற்றான் கொல்"* என்னும் சொல் (குறள்70)

என்ற குறளின்வழி நின்றார் எனக்கொள்ளலாம் அன்றோ!

*"எத்துணைத் தவஞ் செய்தான் கொல்!*
*என்றெழுந் துலகம் ஏத்த*
*வித்திய புகழி னாற்கு*
*விருந்தர சியற்றி நாடும்*
*ஒத்தனன் நல்கித் தன்னை*
*உழந்தனள் வளர்த்த தாய்க்குச்*
*சித்திரத்தேவிப் பட்டம்*
*திருமகன் நல்கினானே"* (சிந்தாமணி)

என்ற பாடல் படித்துப்படித்து மகிழத்தக்கது! மேலும்,

*"இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் "[குறள் 621]*

என்ற வள்ளுவர் வாய் மொழியை,

*இடுக்கண்வந் துற்றகாலை*
*எரிகின்ற விளக்குப் போல*
*நடுக்கம் ஒன் றானும் இன்றி*
*நகுக; தாம் நக்க போழ்து அவ்*
*இடுக்கண் அரியும் எஃகாம்*
*இருந்து அழுது யாவர் உய்ந்தார்?*
*வடுப்படுத்து என்னை ஆண்மை?*
*வருவந் துறுங்கள் அன்றே?"*

என நல்லுரைக் கூறும் வகையில் சிந்தாமணி ஆசிரியர் இலக்கியத்தில் வைத்து தமது நூலை வளம் படுத்தியமையும், சீவகநம்பியைப் பாதுகாக்கும் பொறுப்புப்பற்றிக் கூறுகையில்,

*தொழுத கையுள்ளும் படையொடுங்கும்;ஒன்னார்*
*அழுத கண்ணீரும் அனைத்து[குறள் 828]*

நா. நல்லதம்பி, மட்டுவில்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# அவனும் ஒருவன்




மாலைக் காற்றின் இதமான குளிரில் மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தான் செந்தில். அவனது மனம் சுபாவை வட்டமிட்டது.

சுபா எவ்வளவு நல்ல பிள்ளை. தந்தை ஒரு விபத்தில் இறந்து போனார். தாய் எமது நாட்டின் இனப் பிரச்சினையில் மகனை இழந்து மனநோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார். கடைசியில் மிஞ்சியது சுபா மட்டும்தான். பாட்டி, தாத்தா இருக்கும் வரை சுபாவுக்கு எதற்கும் பஞ்சமில்லை. அப்படி அன்பான குடும்பம். அவளுக்கென்று எஞ்சி இருந்தவர்களில் தாத்தாவோ பேத்தியின் திருமணத்தை எதிர்பார்த்து இடையில் மாரடைப்பால் இறந்து போனார்.

இறுதியில் பாட்டியின் உதவியுடன் திருமணம் முடித்தாள். "பாவம் சுபா எத்தனை வேதனைகள் எல்லாவற்றையும் சகித்து அவள் இப்படி இருப்பதே பெரிய அதிசயம்"

"ஹாய் செந்தில் எப்படி இங்கே?" இது சுபா "சும்மா வந்தன் சுபா நல்ல இதமான சூழல்; அதனால் குளிர்மையாக இருந்தது இருந்திட்டன்".

சுபா அதன் பின் மௌனமானாள்.

"என்ன சுபா மௌனமாக இருக்கிறீர்"

"ஒன்றுமில்லை" சுபா, இப்படி சொல்வதால் தான் திரும்பவும் கேட்க வேண்டி இருக்கிறது. சொல்லும்"

"அது...." என்று எதையோ சொல்ல நினைத்தவள் வார்த்தைகளை அடக்கிக்கொண்டாள். சுபா நான் இருக்கும் வரை உமக்கு எதுவும் வராது. நீர் அனாதை என்றோ, யாருமில்லை என்றோ கவலைப்பட வேண்டாம்"

"செந்தில் எத்தனை நாள்கள்தான் இருவரும் இப்படி இருப்போம். இதை நினைக்கும் ஒவ்வொரு நிமிடமும் எனக்குப் பயம்! உயிர் துடிக்கும். உங்களைக் காணும் ஒவ்வொரு நிமிடச் சந்தோசமும் நீங்கள் சென்ற பின் என்னை சிந்திக்க வைக்கிறது" எனக் கூறியவளின் கண்கள் கலங்கின.

"இவ்வளவு அனுபவித்த எனக்கு நிச்சயமாய் உங்களைப் பிரிய முடியவில்லை. இருப்பினும் என்னால் உங்கள் வாழ்க்கை பாதிக்கப்படுமோ என நினைக்கும் போது மெல்ல மெல்ல உங்களை விட்டு விலகுவதே மேல் எனப்படுகிறது. ஆனால் முடியவில்லை எனத் தொடர்ந்தாள் அவள். சுபா கூறியதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் செந்தில்.

வெளிநாட்டில் இருந்து அயல்நாடு வந்து சுற்றம் சூழ சுபாவைக் கைப்பிடித்தான் கரன். அன்றுடன் பதினைந்து நாள்கள் முடிந்த நிலையில் மறுநாள் வெளிநாடு திரும்ப வேண்டும் என்ற கட்டாயத்தில் வெளிநாடு சென்றவன் விரைவில் தன்னைத் தனது இடத்துக்கு அழைப்பான் என்ற நம்பிக்கையில் சுபா, மாமா, மாமியுடன் தங்க நேரிட்டது.

ஆனால் விதியை யாரால் வெல்ல முடியும். நாள்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களானது. கடிதத் தொடர்பு, தொலைபேசித் தொடர்பு எல்லாம் அருகியது. சுபா வாழ்வே அர்த்தமற்றதாகிவிட்ட உணர்வுடன் நடைபிணமாகிவிட்டாள்.

"சுபா.... [illegible] சுற்றிப்பார்க்கக் கரன் கூப்பிட்டிருக்கிறான். உனக்கு விசா கிடைக்கும் வரை மாமா வீட்டில் போய் இருக்கட்டாம்" என்று கரனது பெற்றோர் கூறிய போது.

"ஏன் அத்தை என்னை மட்டும் அவர் கூப்பிடவில்லை. உங்களை, மாமாவை, கீதாவை எல்லோரையும் கூட்பிட்டவருக்கு என்னைக் கூப்பிட என்ன பிரச்சினையாம்?". என்று விசாரித்தாள்.

"உனது பாஸ் போட்டில் ஏதோ பிரச்சினையாம். அதைச் சரிப்பண்ணி விட்டுக் கூப்பிடுகிறானாம். அதுவரை உன்னை உனது மாமா வீட்டில் இருக்கும்படி கூறினான்"

" இப்பவெல்லாம் அவர் என்னோட கதைப்பதில்லை அத்தை ஏனென்று தெரியவில்லை" எனச் சிறு பிள்ளைத் தனமாக சுபா கூறினாள். அதற்கு அத்தை பார்த்த பார்வையில் ஏதோ அர்த்தம் இருப்பதாகப்பட்டது.

வேறு வழியின்றி சுபா தன் தாய்மாமா வீட்டுக்குச் சென்றாள். அங்குதான் முதன் முதலாகத்தான் ஓர் அனாதை என்ற உணர்வு அவளுக்குத் தோன்றியது.

அவள் அனுபவிக்காத துன்பங்களா? அளவிட இயலவில்லை. இவ்வளவு தான் என்றால் எதனையும் எண்ணாமல் இருந்திருப்பாள். ஆனால் "விசரி" என்ற பட்டம் கட்டி அவளது உடமைகள் களவாடப்பட்டு காதில் தோடு கூட அற்ற நிலையில் தனியிடத்தில் தனிமைப்படுத்தப்பட்ட போதுதான் அவளால் எல்லாவற்றையும் உணர முடிந்தது. "மாமி எனக்கு எதுவும் வேண்டாம். என்னை உங்கள் வீட்டில் மட்டும் இருக்க விடுங்கள் இப்படி தனியே இருக்க பயமாய் இருக்கிறது. அல்லது நான் அம்மம்மாவுடனாவது ஊருக்குப் போக வசதி செய்து தாருங்கள்" எனக் கெஞ்சினாள்.

பேரம்பலம் சித்ரா,
கோண்டாவில் .

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 04.09.2011 முதல் 10.09.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து அதனால், அவதிகளுக்கு ஆளாகலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தொழில், உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். போட்டிகள், எதிர்ப்புகள் இல்லாமல், எந்த வேலையையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள், பங்காளிகளுடன் ஏற்பட்ட பகை விலகி பாசம் அதிகரிக்கும். கலைத்துறையினர் முன்னேற்றம் காண்பர். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். பழைய வாகனங்களை மாற்றி விட்டு புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

### இடபம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். மதிப்பு, கௌரவம் மேம்படும். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். குடும்ப விவகாரங்களில் விட்டுக் கொடுத்து செல்வது நன்மை தரும். கொடுக்கல் வாங்கல்களில் கடும் வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். சகோதரர்கள் நலனுக்காக எடுத்த முயற்சிகளில் பின்னடைவைச் சந்திக்கலாம். மனதில் நிம்மதியற்ற சூழ்நிலை காணப்படும். உறவினர்கள், நண்பர்களிடம் கொடுத்த பணம் வராமல் இழுத்தடிக்கலாம். பயணங்களால் சந்தோஷம் உண்டு. சுபச் செலவுகள் தொடர்ந்து கொண்டிருக்கும். பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான அனுபவம் உண்டு.

### மிதுனம்

கலகலப்பான அனுபவங்களுக்கும், காரிய வெற்றிக்கும் உகந்த வாரமாகும். இழு பறியாக இருந்த பணவரவுகள் வரலாம். பெரிய மனிதர்களின் சந்திப் பால் பெருமை அடைவீர்கள். செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். எந்த வேலையிலும், சிரமங்கள் இடர்பாடுகள் அதிகம். பொருளாதார நிலவரம் சொல்லிக் கொள்ளும் வகையில் இருக்காது. ந்தை, மனைவி வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். கடும் முயற்சிக்குப் பின்னரே காரியங்கள் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். எந்த விடயத்திலும் பதற்றம் படபடப்புடன் செயற்படுவீர்கள். உடல் ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவது நல்லது. கோபம், வேகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம். பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். குழப்பங்கள், தடுமாற்றம், சோர்வு, சோம்பல் ஆட்கொள்ளும்.

### கடகம்

திட்டமிட்டதை விட, சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். வாக்குவாதங்களால் விவகாரங்கள் உருவாகலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பணவரவு உண்டு. சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். தொழில், உத்தியோக ரீதியான விடயங்களில் நல்ல மாற்றங்களைக் காணலாம். பல நாள்களாக மேற்கொண்ட முயற்சிகளுக்கு பலன் கிடைக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் அதிகரிக்கும். மனைவி வழியில் உருவான பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி பெறுவீர்கள். சேமிப்புகள் அதிகரிக்கும். தொழில் ரீதியாகவும், பிள்ளைகள் வழியிலும் செல்வுகள் உண்டாகலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உறவினர்கள் வழியில் செலவுகள் நேரலாம்.

### சிங்கம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அதேநேரத்தில் கணவன் மனைவி இடையே பிரச்சினை உருவாகலாம். எதிர்பாராத பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. அவர்கள் மூலம் சில காரியங்களைச் சாதிக்க வாய்ப்பு உண்டு. மற்றவர்களின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். புதியவர்கள் சந்திப்பு நிகழும். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கவும் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்படும். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்த விடயங்களில், சிறிய அளவில் பலன் கிடைக்கலாம். வீண் பேச்சுகள், விமர்சனப் பேச்சுகள் என்பனவற்றைத் தவிர்ப்பது நன்மை தரும். தொழில் ரீதியான போட்டிகள், எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான விஷயங்களுக்காக செலவு செய்யலாம். உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

### கன்னி

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உண்டு. சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்திகளைக் கேட்கலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். பொறுப்புகளில் போராட்டமும், கடின வேலையும் தொடரும். தொழில், உத்தி யோகம் தொடர்பான விடயங்களில் எதையும் நினைத்தபடி முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் ஆதாயம், அனு கூலம் பெறலாம். தேக ஆரோக்கியக் குறைவுகளாலும் அவ்வப்போது, அவதிகளுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களிலும் எச்சரிக்கை அவசியம். பெரிய மனிதர்களின் உதவி கிடைப்பது கடினம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

### துலாம்

நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சிறிய வேலைகளுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். விருந்து, உபசரிப்புகள், பொழுது போக்கு விடயங்களால் பணம் கரையலாம். மனதில் ஊக்கம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். உறவினர்கள் சிலர் நீங்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்ய முன் வருவர். அவர்கள் மூலம் பணவரவுகளையும் பெறலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரி வடையும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். செலவுகள் பெருகிக் கொண்டே இருக்கும். உறவுகள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். பதற்றம், படபடப்புடன் செயல்படலாம்.

### விருச்சிகம்

நன்மை அடையும் நாள்கள். எந்த விடயத்திலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். முக்கிய காரியங்களைத் தொடங்குவீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். சொத்து விவகாரங்களிலோ, மற்ற விவகாரங்களிலோ புதுவிதமான பிரச்சினைகள் உருவாகலாம். சில விடயங்களில் நீங்களாகப் போய் வம்பில் மாட்டிக் கொண்டு அவதிப்படலாம். புதிய சொத்துக்கள் வழங்கத் திட்டம் போடுவீர்கள்.வங்கிகளில் கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். கடன் பிரச்சினைகளால் சிலர் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. வாகனங்கள் வழியில் பழுதுச் செலவுகளைச் சந்திக்கலாம்.

### தனுசு

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் தலையீட்டால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். பல நாள்களாக மனதில் நினைத்திருந்த காரியங்களை செயற்படுத்துவீர்கள். வாய்ப்புகள் தேடி வரலாம். பணி புரிவோருக்கு வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். அதேநேரத்தில், அந்த வேலைக்கு ஏற்ற, பாராட்டுக் கிடைக்காது. உத்தியோகத்தர்கள் முதலாளிகளின் கெடுபிடிகள், நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நினைத்த காரியங்கள் சிலவற்றை முடிப்பீர்கள். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் நலன் கருதி சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள். தொழில் ரீதியாண விடயங்களுக்கு பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும்.

### மகரம்

எதிலும் கவனமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும். மறதியால் அவதியுண்டு. எதிர்பாராத தண்டச் செலவுகளுக்கும் ஆள்படலாம். சில பிரச்சினைகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம். கடன் பிரச்சினைகளால் மன உளைச்சல் உண்டாகலாம். தந்தை வழியில் சிரமங்கள், செலவுகளைச் சந்திக்கலாம். மருத்துவ செலவுகளாலும் அவதிகளுக்கு ஆள்படலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம். சுபகாரிய விடயங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குடும்ப விவகாரங்களால் மன உளைச்சல், பதற்றம் அதிகரிக்கலாம். சுபச் செலவுகள் அதிகரிக்கும். . உறவுப் பெண்கள், சகோதரிகள், தாயார் வழியிலும் செலவு கூடும். சகோதரர்கள் நலன் கருதி சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

### கும்பம்

அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பயணங்களிலும், திட்டமிட்ட வேலைகளிலும் தடை, தாமதங் களைச் சந்திக்கலாம்.சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். எந்த வேலையிலும் சிரமங்கள் அதிகரிக்கும். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை குறைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம். மறைமுகப் போட்டிகள், எதிர்ப்புகள் அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள் தன்னம்பிக்கை குறைந்து, அவநம்பிக்கை அதிகரிக்கும். எவ்வளவு தான் சிக்கனமாக இருந்தாலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். பிள்ளைகளின் குதர்க்கமான செயற்பாடுகளால் மனம் வெறுப்படையலாம்.

### மீனம்

எந்த விடயத்திலும் தெளிவாகச் செயற்பட்டு கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். நீண்ட நாள்களாக வராமல் இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். சில வேலைகளுக்காக முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் சந்தோஷம், மகிழ்ச்சி உருவாகும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நாளுக்கு நாள் வேலைப்பளு அதிகரித்துக் கொண்டிருக்குமே அன்றி, அதற்கேற்ற பலன் கிடைக் காது. மற்றவர்களின் வார்த்தைகளை கேட்டு இறங்கிய காரியங்களால் பிரச்சி னைகளை, மன உளைச்சல்களை சந்திக்கலாம். சிலர் ஒரே இடத்தில் இருந்து வேலை களைக் கவனிக்க முடியாமல் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சிலர் உங்களை நம்பி பணப்பொறுப்புகளை ஒப்படைக்கலாம். நீண்ட நாள்களாக வராமல் இழுத் தடித்த கடன் மிகுதிகள் வரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு விருந்து

1. தேசபக்தனின் உடல் சிந்தும் இரத்தத்தைவிட அறிவாளியின் பேனா சிந்தும் மை புனிதமானது.
   -பித்தகோரஸ்
2. அறிவுள்ளவன் தன் வார்த்தைகளை அடக்குகின்றான்
   -ஓர் அறிஞர்
3. அறிவு மிகுந்தவனே நாவைக் காக்கும் ஆற்றலுடையவன்
   -புனித லூக்காஸ்
4. அறிவை அளவிட முடியாது ஏனென்றால் அறிவின் குறையைப் பூர்த்தி செய்ய நமக்குக் காலம் போதாது
   -தாகூர்
5. பிறர் அறிவுடன் தம் அறிவைத் தேய்த்து ஒளி பெறச் செய்தல் நலம்.
   -மாண்டேய்ன்
6. சிறிதுபடித்தல், நிறையச் சிந்தித்தல், சிறிதுபேசுதல், நிறையக் கேட்டல் இதுதான் அறிஞனாகச் சிறந்த வழி.
   -பிரேம்சந்த்
7. அறிவுரை பனியைப் போன்றது. எவ்வளவு மெல்ல அது பெய்கிறதோ அவ்வளவுக்கு அது நீண்ட காலம் வாழும். மனதிலும் ஆழ்ந்து உறைந்துவிடும்.
   -எஸ்.டி.காலரிட்ஜ்

லிபிசண்யா நாகேந்திரன்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# நாற்கொம்பு மான்



நாற்கொம்பு மான் தெற்காசியாவின் திறந்தவெளிக்காடுகளில் வாழும் ஒரு மானினமாகும். இந்த மானுக்கு இந்தியில் சௌசிங்கா என்று பெயர். இது போசிலாபனி என்னும் இனத்தைச் சேர்ந்த விலங்காகும். கொம்புகளில் வளையங்கள் இல்லாமல் இருப்பது இந்த இனத்தின் முக்கிய பண்பாகும். நாற்கொம்புமான் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வாழ்ந்தாலும் எங்கும் அதிகமான தொகையில் வாழ்வதில்லை. இவை உலர் இலையுதிர் காடுகள் மற்றும் உலர் புறநிலத்திலும் அதிகம் காணப்படுகின்றன. ஆண் நாற்கொம்பு மானில் வளர்ந்த விலங்கு 55-60 செ.மீ உயரமும் 20-22 கிலோ எடையும் கொண்டிருக்கும். இவ்விலங்கின் வெளித்தோல் பழுப்பு நிறத்தில் இருக் கும். பெண் விலங்குகளுக்கு கொம்புகள் இராது. ஆண்களுக்கு நான்கு கொம்புகள் இருக்கும். தாய் ஈன்றெடுக்கும். குட்டியானது முயலின் உருவ அளவில் இருக்கும். குட்டியைப் பாதுகாக்க தாய் அடர்ந்த புதர்களுக்கிடையே வாழும். இவற்றின் சராசரி ஆயுட்காலம் சுமார் பத்து வருடங்கள் ஆகும்.

இவை இலை, புல், மற்றும் பழங்களை உணவாக உட்கொள்ளும்.

சி.சாதுரியன்


# நட்பு



மலரைப்போன்ற எம் நட்பு
மாட்சி கண்டது
மிட்டாய் போல் இனிப்பானது நட்பு
மீண்டும் என் வாழ்வில் வசந்தம்
முட்டி மோதியது
மூடிய என்ற இதயம்
மெல்லத் திறந்தது நட்பால்
மேகம் அலைந்தது என் இதயம்
மை தீட்டியது நட்பு என் வாழ்வில்
மொட்டு போலிருந்தேன் பூவாய் மலர்ந்தேன்
மோகம் வந்தது நட்பில்
மௌனமாய் இருந்த இதயம்
மெல்லத் திறந்து பேசியது உன்னோடு...

க.தர்ஷிகா, தரம் 9
யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்.

# அகம்பாவம் கூடாது



கிராமம் ஒன்றில் தலைக்கனம் பிடித்த குடியானவர் ஒருவர் இருந்தார். அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து விளைநிலங்களும் அவருக்கேயுரியது. கிராம மக்கள் அனைவரும் அவருடைய காணியை நம்பியே வாழ்ந்தனர். எனவே அவர்கள் அனைவரும் அவருக்குப் பயந்து சிரம்தாழ்த்தி வணங்குவது வழக்கம்.

ஒரு நாள் ஆற்றில் குளிப்பதற்காக வேகமாகச் சென்று கொண்டிருந்தார். எதிரிலே ஆடு ஒன்று வந்தது. அந்த ஆட்டைக் கண்டதும் ஒதுங்கிச் செல்லாமல் திமிராக நடந்து வந்தார். செல்வந்தரான தன்னைக் கண்டு ஆடு ஒதுங்கிச் செல்லட்டும் என்று நினைத்தார். அப்போது ஆடு வேகமாக ஓடிவந்து அவர் முன்னே குனிந்தது. உண்மையில் ஆடு அவரை முட்டித் தள்ளுவதற்காகக் குறி பார்த்துப் பாய்வதற்காகவே அப்படிச் செய்தது. ஆனால் அவரோ ஆடு தன்னுடைய வல்லமையக் கண்டு பயந்து தன்னைப் பணிந்து வணங்குவதாக நினைத்துக் கொண்டார். உடனே ஆட்டைப் பார்த்து தன்னுடைய கைகளை உயர்த்தி ''உனக்காகும் என்னுடைய பெருமை தெரிந்துள்ளதே பிழைத்துப்போ'' என்று சொன்னார்.

சிறிது நேரத்தில் நிமிர்ந்த ஆடு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவரை முட்டித் தள்ளிவிட்டு ஓடியது. தலைகுப்புற விழுந்த அவருக்கு அப்போதுதான் ஆடு தன்னை முட்டுவதற்காகக் குறி பார்த்த விடயம் புரிந்தது. தன்னைப் பற்றிய மிதமிஞ்சிய பெருமைதான் இந்த உதைக்குக் காரணம் என்பதை அறிந்தார் அவர். அத்துடன் தன்னுடைய தலைக்கனத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

நே.வித்தியாசாகர் கிளி/கிளிநொச்சி ம.வி.

## விடை தெரியுமா? 123

### உங்களுக்கும் பரிசில்கள்

1. முதல் தந்திச்சேவை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
2. எறும்பு தண்ணீருக்கு அடியில் வாழும் நாள்கள் எத்தனை?
3. முச்சுடர்களும் எவை?
4. ஆயிரம் வாவிகள் நாடு எது?
5. வாயுவின் அழுத்தத்தை அளக்கும் கருவி என்ன?

### விடைகள் 121

1. தமஸ்கஸ்
2. சாலமோன்
3. மொஹமட் நஸீட்
4. மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு
5. திரிபோலி

### வெற்றி பெற்றோர் விவரம்

★ இ.நிருத்திகா தரம்-1, யாழ்ப்பாணக் கல்லூரி,வட்டுக்கோட்டை.
★ ச.விதுஷன் தரம்-9,ஈ, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
★ வி.பிரசாத் தரம்-8,ஏ, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
★ வி.லோகினி தரம்-9,ஏ, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
★ இ.சிந்துஜா தரம்-8 யா/மிருசுவில் றோ.க.த.பாடசாலை.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 10.09.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## சிந்தனைத் துளிகள்...



* ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல்போய் விடு கிறது.
* பணம் பேசத் தொடங்கும் போது உண்மை ஊமையாகி விடுகிறது.
* ஆடம்பர வாழ்க்கை அடிமைத் தனமானது. உழைப்பு கௌரவத்துக்குரியது.
* அகக் கண்ணை திறந்துவிடும் ஆசிரியர் இளம் பருவத்திலேயே கிடைக்க வேண்டும்.
* உண்மை, கற்பனையை விட எப்போதும் அதிசயமாகவே இருக்கும்.
* விதி விளையாடத் தொடங்கினால் மதி மயங்கிப் போகும்.

வி.மதுமதி,
யா/[illegible]சிங்கம் ம.வி.

## வயது மூன்று தரம்!

உங்கள் வயது ஒரே எண் வரிசையில் மூன்று தரம் அமைவதைப் பார்க்க விரும்புகிறீர்களா?

உங்கள் வயதை முதலில் 259 ஆல் பெருக்கிவரும் தொகையை மீண்டும் 39 ஆல் பெருக்கும்போதுவரும் தொகையில் உங்கள் வயது மூன்று தரம் அமைவதைப் பாருங்கள்.

உதாரணம் உங்களது வயது 10 எனில்-

10
X 259
2590
X 39
23310
+ 7770
101010



ப.மகேந்திரதாசன்.
நாயன்மார்கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்காய் - சூரிய நங்காய்!

என் தங்காய் வயதே யுனக்கும்
எப்படித்தான் இப்படியொரு
"சூரிய-நங்காய்" அவதாரமுனக்குள்?

பட்டெடுத்த காஞ்சியில் "ஒரிக்கை"யில்
ஓர் பொந்தில், இத்தனை யுகமாய்
ஒளிந்திருந்ததா அக்கினிக் குஞ்சொன்று??
செங்கொடீ! என் சோதரி!
நல்லபடி எல்லாமே உள்ளபடி மீளும் - நம்பிக்கையில்

'உன்னுயிர்' மட்டும் தப்பியதேனடி?
"பப்பாயா ஒரா" இல்லாமல்
கிணற்றடிக்கு போகாத குமரிகளில்,
"பற்றும் தீ"ப்போதும் முற்றும் நனையவென
கொடுதலை ஈந்த விடுதலைக் கீற்றே!

"அற்புதம்மாள்" அழுகைக்கும்,
"அரித்ரா" வின் விம்மலுக்கும்
அதி நடுவில் அதிர்ந் தெழுந்த
"பரிவு"ப் பெரு விசை நீ!
'மத்தி'க்கு இன்றுவரை எழுதிய மடலுக்கெல்லாம்
வெற்றுக் 'கருங்கோடாய்' வீழ்ந்த பதில் நீயோ?
வெறும் இருபதின் வேக வீச்சில்
எண்பது கண்ட 'எழுத்துக் கழுதை'களை
எட்டி வீழ உதைத்தாயோ?
'பெரும்புதூர்' வேப்பிலையால் பேயிறக்கும்
பொய்யர்களின்

கரும் அழுக்கு மனக்குழியில்
செறிவமிலத் துளி நீயோ?
இத்தாலிப் பத்தினியின் செத்த காதில்
இரும்பின் உருக்குழம்பாய் இறங்கி அறைந்தாயோ?

".....காணுமிடமெல்லாம் சக்தியடா!"
'பூனூல்' பாரதி வெட்கி நின்றான்?
"சுற்றும் திசையெல்லாம் செங்கொடி விம்ப"மென்று
ஒற்றை வரியெழுத கை வழங்காக் காரணத்தால்?

மதுரைக்கு மழைப்பதிலாய் தீப்பெய்த
கண்ணகி மறுகினாள்?
"தன்னுடல் தப்பியதே!"
உன்னுடல்.......??
"எமக்காய் உயர் வெடித்த எம்மறவர்" பெரிதென்ற
'எகத்தாள' எம் நினைப்பில்,
"வந்தாரையும் வாழ வைக்க வறள்-மேனியீந்த வரலாறு"
நானென்று சுடுமணல் வீசினையோ?
"ஓர்மம்-உயிர் விடும்" ஆயினும்
பதின்ம வயதே கடந்த பக்குவத்திலா?
பக்கத்தில் யாரும் கூடாத புரட்சியிலா?
பாதைசொல்ல ஆளில்லா தனியுன் தலைமையிலா?

எத்துணை வினாக்குறி எழுப்பிய மரணத்துள்
இத்தனை இலகுவாய் எப்படிக் கருகினாய்?
'இடிக்கவே' முடியாத கல்லாலயம்
இருத்தியெம் நெஞ்சோடு நினைவினில்,
'மழைமாத நாள்' ஒன்றில்
மண்ணோடு மனது கனக்கும் உனக்காயும்!!
நியும் எம் மகளே! 'மா' தீரப் பெருமகவே!!

- அரிதவள்


## தீர்வு இல்லையா?



அதிகரிக்கிறது
மர்ம மனிதர்களின்
அட்டகாசம்!
பொதி சுமக்கும் நிலையில்
தமிழ் பேசும் மக்களது
இன்றைய நிலைமை!
வதிவிடத்தில்
நிம்மதியற்று வாழும்
நிற்கதி நிலையின்று!
பாலூட்டும்
தாய்மை இனத்துக்கே
அதுவும்
தமிழ் முஸ்லிம்
பெண்களிடம்
வாலாட்டப் பாயும்
மர்ம மனிதர்கள்
பாலூட்டவுள்ள மார்பை
பதம் பார்கின்றார்கள்
தீர்வில்லாப் பிரச்சினைபோல்
கிறீஸ் மனிதர்கள் விடயத்தில்
எந்தத் தீர்வுமில்லையா?

சேனையூரான்,
மூதூர் கிழக்கு.

## தாய்மையின் தூய்மை புரியாதவர்களே...



பறவையின் இறகை விட
இலேசானதாம் பெண்ணின் மனது
யார் சொன்னார்கள் இப்படித் தவறாக
.............
தாய்முலை தீண்ட முன்....
குழி தோண்டிப் புதைக்கப்பட்ட
பாலகர்களின் கடைசித் துடிப்பு
சொல்லும்.......
அக்கராயன் அடுப்பங்கரை மூலை

கொழுந்து விட்டெரியும்
கிளிநொச்சி குப்பை மேடு சொல்லும்
தன் மழலையை அக்கினிக்கு
இரையாக்கிய
தாய்மையின் பெருமை

கண்திறக்கும் முன்பே
தண்ணீரில் உயிர் அடங்கிய
சிசுவின் பரிதவிப்பு சொல்லும்
காவலூர் பாழும் கிணற்று நீர்

பெண்மையே எங்கே
செல்லுகின்றது.
உன் தாய்மையின் பெருமை
ஒன்று செய் பெண்மையே!
குழிதோண்டி உன் குழந்தையை
புதைப்பதற்கு பதில்
நீயே! அப்புதை குழிக்குள்
மரணித்தால் என்ன?

பச்சிளம் பாலகனை அக்கினிக்குள்
வீசும் முன்
நீயே அக்கினியில் மாண்டால் என்ன?

நாளை
இன்னொரு அடுப்பங்கரையில்
குழி தோண்டும்
அவசியம் இருக்காது உனக்கு...?

ஆ. வதனா,
கரவெட்டி.

## பிரியாத வரம் பெற வேண்டும்

கனவுகளை மூட்டை கட்டி
சுமையோடு வாழும் என்னைப்
பார்ப்பதற்காய் பதினைந்து நிமிடத்தில்
தோன்றி மறைகிறது ஒரு உறவு

கண்ணீர்ப் பொதியுடன்
நீ அன்று நிலவைக் காட்டி
ஏமாற்றி சோறூட்டினாய்
அதற்குத் தண்டனையா இன்று

என்னைக் காட்டி ஏமாற்று
உன்னை யாரோ
தள்ளிவிடு விடுகிறார்கள்
எது என்னவோ நீயும்

வேண்டிக் கொள் நானும்
வேண்டுகிறேன் மறுபிறப்பிருந்தால்
அந்த நாயாகப் பிறந்தாவது
பிரியாத வரம் பெறுவோம்

உ. தயாபராசா சிவாஜினி,
பூநகரி.

## புகைப்படமாய் என் நிழற்படம்

முற்றத்து நிலவொளியில்
அன்று நீ ஊட்டினாய்
நிலாச்சோறு....
இன்றந்த நிலவொளியில்
தனிமையில் இருக்கையில் நான்
அந்த நிலவும் நட்சத்திரங்களும் - எனை
கேட்கின்றன உன்னை..
என்ன சொல்வேன் நான்...?
இன்று...
சுற்றத்து உறவே என்னை மறந்துவிட்டது
பதில் சொல்வதற்காய்
கோடி வார்த்தைகள் ஓடி வந்த போதிலும்
ஓடி வந்த வார்த்தைகள் ஓசையின்றித் தேய்கிறது
ஓசையின்றி தேய்கையிலே
ஓரமாய் நான் ஓர் நிழற்படமாய்
நிஜம் கொடுத்த உனைப் பிரிந்து
வெறும் புகைப்படம் ஆகின்றேன்

ஆர்.சுரேஸ், பொன்னாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு காரம்

# கருங்காலிகளின் இறுதிப் புகலிடம்

சந்திரசேகர ஆசாத்

**அது** அந்த நகரத்தின் பிரதான தொழிற் சாலைகளில் ஒன்று. அங்கு சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறுகிறது. அந்தத் தொழிலதிபர் தொழிற்சங்கத் தலைவனை விலைக்கு வாங்கிப் போராட்டத்தை முறியடிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. தொழிற்சங்கத் தலைவனை இல்லாமல் செய்தால்தான் போராட்டத்தை முறியடிக்க முடியும் என்ற முடிவில் அவனைக் கொல்ல முதலாளி கருங்காலி ஒருவனை அனுப்புகிறார். அவனும் தனியான ஓர் இடத்தில் வைத்து தொழிற் சங்கத் தலைவனைக் கொன்று விடுகிறான். எப்படியோ தொழிலாளர்கள் அதை அறிந்து அவனை விரட்டிச் செல்கின்றனர். அந்தக் கருங்காலி ஓடிப்போய் முதலாளியின் கதவைத் தட்டுகிறான். முதலாளியோ கதவை திறக்காதது மட்டுமன்றி தனக்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லையெனத் தெரிவித்து விடுகிறார்.

தொழிலாளர்கள் அந்தக் கருங்காலியை அடித்தே கொன்று விடுகின்றனர். தன் இனத்துக்கே துரோகம் செய்த அந்தக் கருங்காலியின் பிணம் தேடுவாரற்று வீதியில் கிடக்கிறது. இது பிரபல ஹிந்தி எழுத்தாளர் கே.ஏ. அப்பாஸ் எழுதிய புகழ்பெற்ற ஒரு சிறுகதையின் சுருக்கம்.

இது தொழிலாளர்கள் சம்பந்தபட்ட கதையாக இருந்த போதிலும் அதிகார பீடங்களின் கையாள்களாக மாறி அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மக்கள் விரோத நட்வடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் கடைசி நிலைமை இதுதான் என்பது யதார்த்தம்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அதிகாரத்தில் இருந்தபோது இன ஒடுக்கு முறைகளில் தீவிரம் காட்டி ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தியவர். அவர் ஓய்வுபெற்ற போது நீதித்துறையில் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஒரு சிறப்புப் பாராட்டும் வழங்கப் பட்டது.

அவர் ஓய்வுபெற்ற பின்பு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகவும் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளமை தொடர்பாகவும் கடும் கண்டனங்களை வெளியிட்டு வந்தார். அதுமட்டுமன்றி இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வலியுறுத்தி வந்தார். தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது வழக்குத் தொடுக்கப்பட வேண்டும் என நான் வழங்கிய தீர்ப்பு அலட்சியம் செய்யப்படுவதாகவும் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

அரசின் நோக்கங்களை சட்டங்களின் பலவீனங்களையும் நுணுக்கங்களையும் பாவித்து நிறைவேற்றி வந்த முன்னாள் நீதியரசர், அரசின் முறைகேடுகளை விமர்சிக்க ஆரம்பித்ததும் இலங்கை ஆட்சியதிகாரத்தின் நெற்றிக் கண் திறந்து விட்டது.

அவர் பதவியிலிருந்த காலத்தில் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் விசாரிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

### வடக்கு, கிழக்கைப் பிரித்தவர் மீது இன்று விசாரணை

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு செல்லுபடியாகாது எனத் தீர்ப்பு வழங்கியது வடக்கு, கிழக்கைச் சட்ட பூர்வமாகப் பிரித்தது போன்ற பல விடயங்களை நிறைவேற்றி அரசின் நோக்கத்துக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்கிய இவருக்கா இந்த நிலை என்ற கேள்வி எழலாம். அந்தக் கேள்விக்கு கே.ஏ. அப்பாஸின் சிறுகதை தான் பதில் சொல்ல வேண்டும்.

அவர் ஏதாவது ஒரு குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாலும் இலங்கையில் அது அப்படி ஒன்றும் ஆச்சரியப்படக் கூடியதல்ல. இப்படியான நிலைமைக்கு உட்படுத்தப் பட்டவர்களில் இன்னொரு மிகச் சிறந்த ஒரு உதாரணம் முன்னாள் முப்படைகளின் தலைமை அதிகாரி சரத் பொன்சேகா.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கு மிடையே பேச்சுகள் சுமுகமாக இடம்பெற்ற போது உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்த ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை விதித்து பேச்சின் போக்கையே திசை திருப்பியவர் இவர். அதுமட்டுமன்றி வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இவர் தமிழர்கள் கொடுப்பதை வேண்ட வேண்டியவர்களேயன்றி அதற்கு மேல் எதுவும் வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக இவர் விடுதலைப் புலிகளுடன் பல தடவைகள் மோதி அனுபவம் பெற்றவர் என்ற வகையில் அவர்களின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கு விளங்கி அதற்கேற்ற வகையில் வியூகங்களை வகுத்துப் போரை வெற்றிக்கு இட்டுச் சென்று போரின் கதாநாயகனாக விளங்கியவர்.

இவர் இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்று அரசியலில் இறங்கி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். அத்துடன் அவரின் கதை தலைகீழாக மாறியது. பலவித குற்றச்சாட்டுகளின் பேரில் சிறைசெய்யப்பட்டு சகல பட்டம் பதவிகளும் பறிக்கப்பட்டுவிட்டன.

சரத் என். சில்வா, சரத் பொன்சேகா மட்டுமல்ல தங்கள் மேலாளர்களுக்கு விசுவாசம் காட்டி மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர் அவர்கள் அந்த வட்டத்தைவிட்டு வெளியே வந்ததும் புறமொதுக் கப்பட்டுத் தண்டிக்கப்படுவது வழமையாக மாறி விட்டது. இதை உணராக பலர் இன்னும் அடிவருடும் நடவடிக்கைகளில் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

அண்மையில் மர்ம மனிதர்கள் மக்கள் மேல் பாலியல் கொடுமைகள் உட்பட பல வன்முறைகள் மேற்கொண்டனர். மக்கள் அவர்களை விரட்டிக் கொண்டு போகும் போது அவர்கள் பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் என்பவற்றுக்குள் புகுந்து விடுகின்றனர். அதன் காரணமாக பொதுமக்களுக்கும் பொலிஸார், ஆயுதப் படையினருக்குமிடையே முறுகல் நிலைமைகள் தோன்றின.

இப்படியான நேரங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக சில பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; பலர் துப்பாக்கிச் சூட்டிலும் அடித்து நொருக்கப்பட்டும் படுகாயப்படுத்தப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் மர்மமனிதர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை; சட்டத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டக்களப்பு தளபதியும் மீள்குடியேற்றப் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் மர்ம மனிதர்கள் என எவரும் இல்லையெனவும் ஆனால் அங்கு நடந்த வன்முறைகளின் பின்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே இருந்தனர் எனவும் தெரிவித்தார்.

பொலிஸார், ஆயுதப் படையினருடன் கிழக்கில் பெரும் மோதல்கள் ஏற்பட்ட இடங்கள் கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை, வாழைச்சேனை, கிண்ணியா ஆகிய இடங்களாகும். அவை அனைத்துமே முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களாகும். அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்படிக் கலவரங்களைத் தூண்டி விட முடியும். பாதுகாப்புச் செயலரினதும் படையினரதும் மனங்களைக் குளிர வைக்க இப்படி எவராலும் நம்ப முடியாத ஒரு பொய்யை அவிழ்த்து விட்டுள்ளார். இது அவரின் அளவு கடந்த விசுவாசத்தின் வெளிப்பாடு.

அதேபோன்று நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவங்களும் அரசியல் பின்னணியில் உருவாக்கப்பட்டவை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஆனால் பொதுமக்கள் சந்தேகத்துக்கிடமான நபர்கள் நடமாடியதாகவும் தாங்கள் அவர்களை நெருங்கிய போது அவர்கள் இராணுவ நிலைக்குள் ஓடி விட்டதாகவும் தாங்கள் அவர்கள் விடுவிக்கும்படி கோரியதாகவும் அப்போது சந்தேக நபர்கள் ரீசேட்டை மாற்றிவிட்டு வந்த போதும் தாம் அடையாளம் காட்டியதையடுத்து அவர்கள் பின்புறமாக ஓடிச் சென்று அங்கு திடீரென வந்த வாகன மொன்றில் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். இதனை யடுத்து முறுகல் நிலை ஏற்பட்டதும் படையினர் வீடு வீடாகப் புகுந்து அடித்து முறித்து 100 பேரைக் கைது செய்து கொண்டு சென்றதும் எல்லோரும் அறிந்த விடயம்.

### மர்மநபர் விவகாரத்தில் அரசியல் பின்னணியா?

இதில் அரசியல்வாதிகளின் தூண்டுதல் எப்போ இருந்தது, எப்படி இருந்தது என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதான் விளக்க வேண்டும்.

> **இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்பட்டால் அரசுக்கு இவர்களின் தேவை இல்லாமற் போய்விடும். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாமல் பார்த்துக் கொள்வதில் மிகத் தீவிரமாகவே இருப்பார்கள்.**

கருணா, டக்ளஸ் தேவானந்தா ஆகிய இருவருமே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய ஆயுத அணிகளில் முக்கிய பாத்திரம் வகித்தவர்கள். பல உயிர்களைப் பலி கொடுத்தவர்கள். இவர்கள் விடுதலை அமைப்புகளை விட்டு வெளியேறிய பின்பு இனம் புரியாதவர்கள் என்ற பேரில் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், கப்பம் கோரி கொலை செய்தல் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இவர்களின் தோழர்களே என்ற பலத்த சந்தேகம் மக்கள் மத்தியில் உண்டு. நிமலராஜன் கொலை; சாவகச்சேரி மாணவன் கபிலநாத் கொலை என்பவற்றில் பிடிப்பட்ட நபர்கள் காரணமாக மேற்படி சந்தேகம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

### அரசுக்கு ஆதரவாக நின்று குழப்புபவர் டக்ளஸே

அதுமட்டுமன்றி அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகள் அனைத்துக்குமே ஆதரவாக நிற்பதையும் அவற்றை நியாயப்படுத்துவதையும் தங்கள் தலையாய கடமைகளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி அரசுக் கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஒரு புறம் பேச்சு நடக்க அதைத் திசை திருப்பும் வகையில் வேறு கோரிக்கைகளை வைத்துக் குழப்பம் விளைவிக்கவும் அமைச்சர் டக்ளஸ் தவறுவதில்லை.

கருணா விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்டத் தளபதி. இவர் எந்நேரமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட முடியும். 1990 இல் மட்டக்களப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸாரைக் கொலை செய்தது முதல் ஏராளமான பயங்கர குற்றங்கள் இவருக்கு எதிராக எப்போதும் தயாராகவே உள்ளன. அதேவேளையில் டக்ளஸ் தேவானந்தாவோ கொலை, கொள்ளை, கப்பம் கோரி சிறுவனைக் கடத்தியது உட்படப் பல பயங்கரக் குற்றங்கள் தொடர்பாக இந்தியாவால் தேடப்படும் ஓர் குற்றவாளி. இப்படியாக அவர்கள் இருவருக்கும் தலைக்கு மேலே சுருக்குக் கயிறுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் என்றுமே அரச விசுவாச அரசியலில் இருந்து வெளிவரமுடியாது. அப்படி வெளியே வந்தால் இவர்கள் சந்திக்க வேண்டிய நெருக்கடிகள் சரத் பொன்சேகா, சரத் என். சில்வா ஆகியோர் சந்திப்பதை விடப் பல மடங்கு அதிகமாக இருக்கும்.

இதில் இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. இவர்களின் தேவை முடிந்து விட்டாலும் கயிறு இவர்கள் கழுத்தில் இறங்கிவிடலாம். எனவே அரசுக்கு இவர்களின் தேவை இருக்கும் வரையில் தக்க வைக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்பட்டால் அரசுக்கு இவர்களின் தேவை இல்லாமற் போய்விடும். எனவே இனப்பிரச்சினைக் குத் தீர்வு எட்டப்படாமல் பார்த்துக் கொள்வதில் மிகத் தீவிரமாகவே இருப்பார்கள்.

எப்படியிருந்த போதிலும் கருங்காலிகளின் கடைசிப் புகலிடம் சிறைச்சாலை அல்லது அகால மரணம் என்பதுதான் இதுவரை நிலவிவரும் வரலாறாகும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BRAVIA தொழில்நுட்பத்துடன் சோனியின் புதிய அறிமுகம்

புதிய BRAVIA தொடர்புடன் சோனி தொலைக்காட்சி துறையை மீளமைப்பு செய்கிறது.

இணையத்தளத்துக்கு இலகுவழி சமைக்கும் வழியில் ஸ்கைப், 3D மற்றும் அசத்தும் corning gorilla தரத்தில் புதியதோர் முயற்சி.

23 ஒகஸ்ட் 2011 ஆம் தினத்தில் புதிய BRAVIA ™ HDTV இணைப்பின் மூலம் தொலைக்காட்சித் துறையில் மகத்தான முன்னேற்றத்தைக் கொண்டுவர முடிந்ததாக சீல்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் டேவிட் மெட்டன்ஸ்புன் தெரிவித்துள்ளார்.

கண்டுபிடிப்புகளுக்கு அப்பால் சோனியின் அற்புதமான தரமும் அசைக்க முடியாத வரலாறும் BRAVIAவை சகல இல்லங்களுக்கும் மிகப் பொருத்தமான வடிவமைப்பாகத் தெரிவு செய்துள்ளது.

சாய்ந்த நிலையில் கண்டு களியுங்கள் உங்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை ஆசுவாசமாகக் கண்டு களிப்பதற்கான அரிய சந்தர்ப்பத்தை BRAVIA ஏற்படுத்தித் தருகிறது.

இல்லங்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ hi - fi (802.11 n) அல்லது எதெர் நெட் தொடர்பு மூலம் 18 இலவச முன்னணி திரைப்படங்களுக்கு வசதி வழங்கப்படுகிறது.

சமூக ஊடகங்களில் ஆர்வமுள்ளவர்கள் இந்த புதிய அறிமுகத்தில் பயனடையலாம். இந்தப் புதிய அறிமுகத்தில் Face book மற்றும் Twitter உள்ளடக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி விசிறிகள் தங்களது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இடையூறு ஏற்படுத்தாமலேயே தத்தமது தேவைகளை இந்த புதிய இணைப்பின் மூலம் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

புதிய BRAVIA வின் பல அம்சங்களில் ஸ்கைப் இடம் பெறுகிறது. சோனி கெமராவையும், மைக்ரோ போனையும் (cmu - BR100 ஆகியவை தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.) பாவித்து வாடிக்கையாளர்கள் உயரிய ஸ்கைப் to ஸ்கைப் பயன்களைப் பெற முடியும். தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே Voice call செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

### 3D விஸ்தரிப்பு

2011 ஆம் ஆண்டின் BRAVIA இணைப்பு எட்டு 3D பரிமாணங்களைக் கொண்டுள்ளது. SONY இன் அசைக்கமுடியாத தொழில்நுட்பங்கள் மூலம் மும்முனைப் பரிணாமங்கள் மிகவும் துல்லியமாகவும், திறமையாகவும் கையாளப்படுகின்றன.

வெளியிடப்படும் படங்களின் தராதரம் HD 1080P Blue ray Disk மூலம் HD ஒளிபரப்பு செய்யப்படவுள்ள படங்கள் சோனி நிறுவனத்தின் துல்லியமானதும் மேம்படுத்தப்பட்டதுமான தொழில் நுட்பத்தின் மூலம் மிகவும் இலாவகமாகவும் சிறந்த முறையிலும் வெளியாகின்றன.

# ரெக்கீட் பென்கீசர் அறிமுகப்படுத்தும் வனிஷ் பாப்ரிக் ஸ்டெய்ன் றிமூவர்

''ட்ரஸ்ட் பிங்க், பொர்கெட் ஸ்டெய்ன்ஸ்'' (இளம் சிவப்பில் நம்பிக்கை வையுங்கள், கறைகளை மறந்திடுங்கள்) எனும் தொனிப்பொருளில் ரெக்கீட் பென்கீசர் நிறுவனம் வனிஷ் பாப்ரிக் ஸ்டெய்ன் றிமூவர் எனும் துணிகளில் காணப்படும் கறைகளை அகற்றும் புதிய ஆச்சரிய மூட்டும் தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது. வீட்டுப் பாவனை, சுகாதார மற்றும் சுய பராமரிப்பு பிரிவுகளில் பிரபல்யமான தயாரிப்புகளை வழங்கும் ரெக்கீட் பென் கீசர் இந்த புதிய தயாரிப்பு அறிமுகத்தின் மூலமாக உலகளாவிய ரீதியில் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் தனது பங்களிப்பை உறுதி செய்துள்ளது.

இந்த புதிய தயாரிப்பின் அறிமுகம் குறித்து ரெக்கீட் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ரெஸ்வான் சயிட் தான்சீம் கருத்து தெரிவிக்கையில், ''நாம் தொடர்ச்சியாக மேற் கொண்ட சந்தை ஆய்வுகளின் மூலம் துரிதமான காலம் நகரும் இந்த கால கட்டத்தில் வேலைப்பளு மிக்க பெண்கள், இல்லத்தரசிகள் மற்றும் தொழில் புரியும் தாய்மார்கள் என அனைவருக்கும் துணிகளில் காணப்படும் மெல்லிய மற்றும் கடுமையான கறைகள் பெரும்பிரச்சினையாக அமைந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக இந்த பிரச்சினைக்கு தீர்வாக ஒரு தயாரிப்பை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டதன் பலனாக உயர்தரமானதும் விலையில் சகாயமானதுமான இந்த வனிஷ் பாப்ரிக் ஸ்டெய்ன் றிமூவர் இனை அறிமுகம் செய்ய முடிந்தது. இந்த தயாரிப்பின் மூலமாக உங்கள் துணிகளை உலர் சுத்தம் செய்வதற்காக ஏற்படும் அநாவசிய செலவீனங்களை தவிர்த்துக்கொள்ள முடியும்'' என்றார்.

கறைகளை அகற்றும் தயாரிப்புகளுக்கு, விசேடமாக நகர் பகுதிகளில் தொடர்ச்சியான கேள்வி காணப்படுகின்றது. இந்தக் கேள்வியை நிவர்த்தி செய்யும்வகையில் ரெக்கீட் பென் கீசர் நிறுவனம் புதிய சேர்மானத்துடன் கூடிய வனிஷ் பாப்ரிக் ஸ்டெய்ன் றிமூவர் இனை அறிமுகம் செய்துள்ளது. இதில் சாதாரண டிடர்ஜன் தயாரிப்புகளை விட 10 மடங்கு அதிகம் கறைகளை அகற்றும் ஒட்சிசன் செயற்றிறன் காணப்படுகின்றது.

# பணவீக்கம் சரிவு கண்டது

கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கான பணவீக்கம் சற்று சரிவு கண்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் ஆண்டுக்கு ஆண்டு மாற்ற விகிதத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் இலங்கையின் பணவீக்கம், கடந்த ஒகஸ்ட் மாதத்தில் ஏழு சதவீமாக வீக்கம் கண்டுள்ளது.

இதுவே முன்னைய மாதத்தில் ஏழு புள்ளி ஐந்து சதவீதம் எனச் சற்று உயர்வாக வீக்கமடைந்து காணப்பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கு, உணவு மற்றும் மென்பான வகைகளில் காணப்படும் (மரக்கறி வகைகள், தேங்காய், தேங்காய் எண்ணெய், அரிசி, சிவப்பு வெங்காயம்) பல பொருள்களின் விலைகள் (0.7%) கடந்த மாதத்தில் சரிவு கண்டமையே காரணம்.

எனினும் பெரிய வெங்காயம், பழங்கள், முட்டை, கோழி இறைச்சி, சீனி, உருளைக் கிழங்கு மற்றும் மீன் போன்றவற்றின் விலைகள் சற்று அதிகரித்துள்ளன.

அத்துடன் ஆடை மற்றும் பாதணிகள் (1.1%), வீடு, நீர், மின்சாரம், எரி வாயு மற்றும் ஏனைய எரி பொருள்கள் (0.1%), தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள், வீட்டு பராமரிப்பு (0.1%) போன்றவற்றின் விலைகளும் கடந்த மாதத்தில் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

# வெங்காயத்தின் விலை உயர்வு

குடாநாட்டு சந்தைகளில் வெங்காயத்தின் விலைகள் சூடு பிடித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி தற்பொழுது இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயம் 90-110 ரூபா வரையிலும் உள்ளூர் பெரிய வெங்காயம் 80-90 ரூபா வரையிலும் விலை அதிகரித்துள்ளன. இதே வேளை ஒரு கிலோ பெரிய வெங்காயம் 60-70 ரூபா வரையில் இம்மாத ஆரம்பத்தில் விற்பனை செய்யப்பட்டதாக திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதே போல் சின்ன வெங்காயத்தின் விலைகளும் அதிரித்துள்ளன. தற்போது இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கு 19 ரூபா வரி விதிக்கப்படுகின்றது. இதனாலேயே வெங்காய விலைகள் சூடு பிடிக்கின்றன.

# PCH நிறுவனம் Karbonn மொபைல் தொலைபேசிகளின் புத்தம்புதிய வரிசைகளை சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது

வெற்றி அலைகளின் மீது சவாரி செய்கின்ற Karbonn மொபைல் தொலைபேசிகளின் புத்தம்புதிய வரிசைகள் PCH நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள K111, K550i மற்றும் K515 ஆகிய மூன்று வகையான இரட்டை சிம் வசதியைக் கொண்டுள்ள தொலைபேசிகள் Karbonn மொபைல் வரிசையின் மிகப் பிந்திய தரமுயர்வு மேம்பாட்டு அம்சங்களுடன் வெளிவருகின்றன.

நியாயமான விலைகளில் கிடைக்கப்பெறுகின்ற இந்த மூன்று தொலைபேசி வகைகளும் பல்வேறு வகைப்பட்ட நவீன பாணியுடனான மற்றும் கவர்ச்சியான அம்சங்களைக் கொண்டுள்ளன. இசைப் பிரியர்களுக்கு ஏற்றதொரு வகையில் இத்தொலைபேசிகள் FM அலைவரிசை மற்றும் MP3 பாடல்களுக்கான hi-fi ஓடியோ வெளிப்பாடுகளுடன் கூடிய உயர் தர இசையையும், தெள்ளத்தெளிவான ஒலிபெருக்கி அம்சங்களையும் கொண்டுள்ளன. இந்தத் தொலைபேசிகள் MP3 மற்றும் MIDI இசை வடிவங்களின் செயற்பாடுகளுக்கும் இசைவாக்கம் உடையவை.

ரூபா 7,850 விலைப்பெறுமதியில் கிடைக்கப்பெறுகின்ற K550i தொலைபேசி விசாலமான முகப்புத் திரையைக் கொண்டுள்ளதுடன், கேட்கும் செருகிகளின் (headset) உதவியின் துணையின்றித் தொழிற்படக்கூடிய ரேடியோவுடன் இரு மெமரி தேக்க அட்டைகளை உட்புகுத்தக்கூடிய ஏற்பாட்டையும் கொண்டுள்ளது. அத்துடன் Facebook, MSN, Yahoo messenger ஆகிய பிரயோகங்களுக்கான உள்ளிணைப்புச் செய்யப்பட்டுள்ள பிரவுசருடன் வியக்கவைக்கும் தரத்திலான தொனியையும் வழங்குகின்றது. K111 தொலைபேசியானது இரட்டை சிம் அட்டைக்கான அம்சங்களுடன் டிஜிட்டல் கமரா, நீட்டிப்புச் செய்யப்படக்கூடிய மெமரி மற்றும் மிகச் சிறந்த ஒலி பெருக்கிகளையும் கொண்டுள்ள அதே சமயத்தில், K515 தொலைபேசியானது Nimbuzz, Snaptu மற்றும் Opera போன்ற சமூக வலையமைப்பு மற்றும் பிரவுசிங் அம்சங்களுக்கான வியக்கவைக்கும் இணைப்புத் திறனையும், நீடித்து உழைக்கின்ற சிறந்த பட்டரி ஆயுட்காலத்தையும் கொண்டுள்ளது. இந்தத் தொலைபேசிகள் முறையே ரூபா 5,300 மற்றும் ரூபா 6,950 ஆகிய விலைகளில் கிடைக்கப்பெறுகின்றன.

PCH நிறுவனத்தின் மொபைல் தொலைபேசி உபகரணங்கள் பிரிவின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரியான பை(f)லான் சலீம் அவர்கள் கூறுகையில், ''புதிய Karbonn மொபைல் தொலைபேசிகள் நவீன பாணியுடன் நியாயமானுன விலைகளில் கிடைக்கப்பெறுவதுடன், உயர் தரத்திலான ஒலிக்கு அனுபவத்தை வழங்கும் hi-fi இசை வெளிப்பாட்டுடன் வலு வூட்டப்பட்டுள்ளன. இசைப் பிரியர்கள் மற்றும் புதிய தலைமுறை கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக வைத்திருக்கவேண்டிய ஒன்றாக இது காணப்படுகின்றது'' என்று குறிப்பிட்டார்.


குறிப்பாகக் கிராமப்புறச் சந்தைகளில் இரட்டை சிம் அட்டைகளைக் கொண்ட தொலைபேசிகள் மக்களின் விருப்பத்துக்குரிய தெரிவாக மாறுவது கடந்த காலங்களில் அதிகரித்துள்ளது. நியாயமான விலைகளில் மிகச் சிறப்பான இணைக்கும் ஆற்றலை வழங்குவதில் இது மொபைல் தொலைபேசித்துறையின் புதிய முன்னிலை வகிக்கும் ஒன்றாகவும் மாறியுள்ளது. இதனால் அத்தகைய பாவனையாளர்கள் மத்தியில் மிகச் சிறந்த தெரிவாக Karbonn தொலைபேசிகள் காணப்படும் என்பது சலீம் அவர்களின் திடமான நம்பிக்கை. ''வெவ்வேறுபட்ட தேவைகளின் நிமித்தம் வேறுபட்ட இலக்கங்களைக் கொண்டிருக்கும் நன்மைக்கு அப்பால் குறிப்பாக உள்நாட்டுப் பாவனைக்கான சிம் அட்டை மூலமாக வெளிச்செல்லும் அழைப்புக்களை மேற்கொள்ளவும், மற்றைய சிம் அட்டை மூலம் ரோமிங் செய்யும் வசதியையும் ஆற்றலையும் உபயோகித்து அழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் முடிவதுடன் இத்தொலைபேசிகளுக்கு முறையான பாவனை உத்தரவாமும் கிடைக்கப்பெறுகின்றது'' என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

இப்புதிய வகை மொபைல் தொலைபேசிகள் PC house நிறுவனத்தின் பரந்த வாடிக்கையாளர் விநியோக முகவர் வலையமைப்புகளினூடாக நாட்டிலுள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கப்பெறவுள்ளன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் தொலைபேசி வகைகள் இலங்கைச் சந்தைக்கு மிகவும் பொருத்தமான ஒரு தெரிவாக அமைவதுடன் ஒவ்வொரு இலங்கையருக்கும் நியாயமான விலைகளில் ஏனைய மொபைல் தொலைபேசி வகைகள் வழங்காத அடிப்படை மற்றும் நவீன தொழில்நுட்ப அம்சங்களை வழங்கி அவர்களை கவரும் இலக்குடன் வெளி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சட் காமாலையை நீக்கவல்லது கீழ்க்காய் நெல்லி



**கீழ்க்காய் நெல்லி**

**வேறுபெயர்-கீழ்வாய் நெல்லி**
**தாவரவியற்பெயர்- Phyllanthus niruri (ஃபைலாந்தஸ் நிரூரி)**
**குடும்பம் -Euphorbiaceae (யூபோபியேசியே)**
**சிங்களப் பெயர்-எலபிட்டவாக்க**
**சமஸ்கிருதப் பெயர்-பூதாத்திரி**

செங்கமாரி எனப்படும் மஞ்சட்காமாலையை நீக்கும் ஓர் அற்புத மூலிகை கீழ்க்காய் நெல்லி என்பது விஞ்ஞானரீதியாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதில் சிவப்புக் கீழ்க்காய் நெல்லி, சாதாரண கீழ்க்காய் நெல்லி என்ற பேதங்களுண்டு. இது ஒரு சிறுபூண்டு.

கூட்டிலைகள், தண்டு, இலைகள் என்பன பச்சை நிறமாக இருக்கும். இலைகளுக்குக் கீழாகக் காய்கள் காணப்படும்.இதன் இலை, தண்டு என்பவற்றை அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணமாக எடுத்து மோர் சேர்த்துத் தினமும் காலையில் கொடுத்துவரச்

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

செங்க மாரி குணமாகும். இலைச்சாறாகவும் பருகக் கொடுக்கலாம். அவ்விதம் கொடுக்கும் போது வயிற்று மந்தம், பசியின்மை என்பனவும் மாறும் இதன் இலைச் சாற்றை நல் லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி அந்த எண் ணெயைத் தலைக்கு வைத்து முழுகிவரக் கண் குளிர்ச்சி உண்டாகும். உடற்சூடு நீங்கும்.

**பொருதலை**

**வேறுபெயர்: பொடுதிலை,பூற்சாதம்**
**தாவரவியற்பெயர்: Lippia nodiflora (லிப்பியா நொடிபுளோரா)**
**குடும்பம்: Verbenaceae (வேபினேசியே)**
**சிங்களப்பெயர்: ஹிரவனாதன்ன**
**சமஸ்கிருதப்பெயர்: ஜலபிப்பலி**
**ஆங்கிலப்பெயர்: Mal- Grass, Cope-weed**

இது சிறு பூண்டு, தனி இலைகள், எதிரான இலை ஒழுங்கு, இலைவிளிம்புகள் பற்கள் போன்று காணப்படும், பூக்கள் கொத்தாக உண்டாகும், காம்பற்றவை, இளநீலநிறம்.

இதன் இலையை நெய்விட்டு வதக்கி உணவுடன்



உண்டுவர மூல நோய் மாறும். இலையை அரைத்து புண்கள், கட்டிகளுக்குப் போட அவைமாறும்.

இலைச் சாற்றை மிளகு, தேங்காய் எண் ணெயுடன் கலந்து காய்ச்சி தலைக்கு வைத்து தலை முழுகிவர தலைப் பொடுகு மாறும். இலையை வதக்கி வறுத்த ஓமத் துடன் சேர்த்து அரைத்து, நீர்விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி 5 மிலீ அளவில் புகட்ட குழந்தைகளின் கழிச்சல் மாறும்.

இலையுடன் சீரகமும் சேர்த்தரைத்து பாக்களவில் கொடுத்துவர வெள்ளை சாய்தல் நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY
UK → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
CANADA → IELTS, Sponsor தேவையில்லை. No age limit, Work Permit Available
POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
GERMANY → பகுதி நேர தொழில் வாய்ப்பு + PR + With / Without IELTS
CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
Next Intake: Oct.2011
UKRAINE - Aerospace ,Aeronautical Eng, MBBS, Nursing, Tele communication, Bio Medical Science at lower cost + 1Year Free Accommodation
No need Sponsor
பஸ்னா - 0778 438403
READ International E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

STUDY MBBS
ENGINEERING - BA -Bsc - Bcom
UKRAINE EAST EUROPE
Recognized By Sri Lanka Medical Council
Highly Trusted Universities
Come with your Documents only Processing within 3 weeks 100% VISA Guarantee
Sep-Oct-Nov Intakes , STARTS NOW
MBBS கிடைக்கவில்லை என்று கவலைப்பட வேண்டாம். இப்போது இலங்கையிலும் உலகளாவிய அளவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மாபெரும் UNIVERSITY இல் நீங்களும் பட்டதாரியாக ஓர் அரியவாய்ப்பு. O/L உடன் pre medical மற்றும் A/L உடன் Medical கற்பதுடன் ஏனைய பட்டப்படிப்பினையும் கற்க ஓர் அரிய சந்தர்ப்பம் இப்போதே அழையுங்கள்
INTERNATIONAL CITY COLLEGE
No-07,2nd floor, W,A,Silva Mawatta,Wellawatha , Colombo-06.
Tel: 0114 594 104 Fax: 0112 582722, 077 12 50 789
E-mail: citycollegelanka@gmail.com Web: citycollegelanka.com

Dutch (Netherlands),German ,French,English
மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகின்றது.
Netherland தூதரகத்தினால் April லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைய புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டவுள்ளன. ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விஷேட வகுப்புகளும் மாதிரி பரீட்சைகளும் தமிழில் உண்டு.
மாணவர்கள் கவனத்திற்கு:- இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும், Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களுடைய ஆசிரியரை தெரிவு செய்ய முன் வெளிநாட்டிலிருந்து உங்களை Sponsor செய்பவர் மூலம் நீங்கள் தெரிவு செய்யும் ஆசிரியருடன் அந்தந்த நாட்டு மொழியில் கதைத்து அவர் உத்தரவாதம் மிக்கவரா? என்பதை உறுதிப்படுத்தியபின்பு உங்கள் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் பணத்தையும் நேரத்தையும் சேமிக்க கூடியாதாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும்!
Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy
"Dutch Lanka Academy" # 69- 2/1, Galle Road, Dehiwala. Tel #: 0777 251 332 / 011 271 8811
வெளிமாவட்டத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.*
* Condition Apply

வீடு விற்பனைக்கு
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் (சாவகச்சேரி சந்தியிலிருந்து 2Km யாழ்.நோக்கி) 3Rooms, 2Halls உடைய வீடு 4½ பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 724469

சிவபார்வதி ஜோதிட நிலையம்
பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044
வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.
Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணி முதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள குறைந்தளவு பாரங்களையே ஏற்றி இறக்கிய 10 சில்லு லொறி (Ten wheelor lorry) விற்பனைக்கு உண்டு. WPLJ XXXX.
தொடர்பு: 0714312750
காலை 7.00 மணிமுதல் பி.பகல் 2.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

வேலையாள்கள் தேவை
கொழும்பில் இயங்கும் விடுதி ஒன்றுக்கு ஆங்கிலம் வாசிக்க எழுதத் தெரிந்த ஒருவரும், அறைகள் சுத்தம் செய்யும் பையனும் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்தொடர்பு:
0112472582, 0112390482

SPONSORSHIP
Tourist-Visit-Students VISAS 65,000/- Only
UK-USA-CANADA-AUSTRALIA-EUROPE
HOLIDAY VISA CENTER
Wellawatte (opposite HNB Bank)
Tel: 0114 594 104 - 0772 953 963

Unregistered(brand new)
Toyota COROLLA AXIO HID LIMITED
AXIO 2011-7 MONTH, MILAGE 42,AUCTION GRADE S.COLOUR PEARL WHITE, JAAI CERTIFICATE, EX STOCK IN COLOMBO Driver Air Bag Passenger Air Bag Anti-Lock Brakes , Fuel type petrol.
Permit Holder க்கு வாகனம் தருவித்து தரப்படும்
Highest price
077 2389584


A/L பரீட்சைகளின் பின்
Your next step...
தகவல் தொழில்நுட்பம் (IT)
கிராபிக்ஸ், அனிமேஷன் பயிற்சி
English Language Training
Mega மெகா COMPUTER
Win 75% SCHOLARSHIP
CSC-ASIAN COMPUTER EDUCATION
பதிவுகள் தற்பொழுது ஆரம்பம்
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399
230-1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267

விண்ணைத் தாண்டி போகலாமா?
யாழ் இளைஞர் யுவதிகளுக்கு இனிய சந்தர்ப்பம்
இளமையை இனிதே கழிக்க... 16875/= +Tax
Entertainment Package 4DAY 3NIGHT
விமானப்பயணச்சீட்டுக்கள் தங்குமிடவசதிகள் பயணஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
Nation Popular Travels & Tours
#82 பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் (நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக)
www.nationtravels.com Tel : 0114375357,0773083820 Hotline:0114 651 199
0214920920

DHL
உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்
London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900
220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது. DHL Online Tracking
TCN Express, 28,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835
குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம்நெற்
இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்பாணம். இல.18,பிரதான வீதி,நெல்லியடி. இல.05,திருநகர் பிரதான வீதி,கிளிநொச்சி. இல.46,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 178



அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1.சிரித்தல்
4. நிலையம்
6.இது உயிரில்லாதது, ஆனால் வளரும் சில சமயம் குட்டியும் போடும்.
7. நிலுவை
8.மடித்ததால் வந்தது
10. சிறிதானாலும் காரம் பெரிது
12. புதிய உடுப்பு
15. கம்பு/கோல்
16. விழி
17. பைத்தியக்காரன்
19. தளை
20. சில்லறைக்காசில் இது இருக்கும்
21. குழந்தை பெறும் பாக்கியம் இல்லாதவள்
22. வணங்கு
23.மாத்திரை

### மேலிருந்து கீழ்

1. ஒன்பது இரத்தினங்கள்.
2. ஆடு, குதிரைகளில் சிறிசு
3. மொத்தமானது
4. சேறு/ கழிவு வாய்க்கால்
5.உச்சி
9. பரிநிர்வாணத்துறவி
11. சுருண்டு போ
13.சிலர் விரும்பி வளர்ப்பார்கள்
14. ஆரவாரம்
16. மஞ்சம்
17. பிழைத்துப் போதல்
18. வயதில் குறைந்த சகோதரன்
19. புணர்ச்சி

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 176 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சுவாசம். (4) சமாதி (7)தகும் (8) சத்துரு (9)பருத்தி (10) திவால் (12)திரவம் (13) ரதி (14) நயம் (15) வாரம் (16) சேவை (17)நேசம் (18) ஏர் (19)கரும்பு (20) வைரி

### மேலிருந்து கீழ்

(1) சுதந்திரம் (2)வாசு. (3)சம்பல். (4) சத்திரம் (5) மாது (6) திருவெம்பாவை (8) சத்தியம் (11) வாதி (14) நரம்பு (15) வாசம் (16) சேர்வை (17) நேரு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 176 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **திருமதி ஜெ. தவராசா,** இல.101, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு — **T. செந்தமிழ்குமரன்,** வன்னியசிங்கம் லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

3 ஆம் பரிசு — **M.T. பசுபதி,** இல.40 மார்டீன் லேன், யாழ்ப்பாணம்.

4 ஆம் பரிசு — **சி.சிவோதன்,** மே/பா. அ.சியாம் சுந்தர், தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.

5 ஆம் பரிசு — **தா.சந்திரசேகரம்,** ஈ.பி.மன்னார் வீதி, வவுனியா.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6 . பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 178**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 14.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.
7. சொற்சிலம்பம் போட்டி இல.178இற்கான விடைகள் 18-09-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

### பாராட்டுப் பெறுவோர்

**வேலுப்பிள்ளை குமாரசாமி,**
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

**ச.கஜேந்திரன்,**
முருகன் கோயிலடி புலோலி, வடமேற்கு புலோலி.

**கணேசநாதன் தேனுகா,**
பெரிய பளை, பளை.

# சிந்தாமணியும்.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*என்ற குறள்பாவை வைத்து,*

*தொழுத தம்கையி னுள்ளும்*
*துறுமுடி யகத்தும் சோர*
*அழுத கண் ணீரினுள்ளும்*
*அணிகலத்து அகத்தும் ஆய்ந்து*
*பழுதுகண் ணரிந்து கொல்லும்*
*படையுடன் ஒடுங்கும்; பற்றாது*
*ஒழிக யார்கண்ணும் தேற்றம்;*
*தெளிகுற்றார் விளிகுற்றாரே.*

என இலக்கியம் செய்து மக்களை இன்புற வைத்தமையும் நோக்கற்பாலது.

இன்னும்,

*''கண்ணொடு கண்இனை நோக்கு ஒக்கின்*
*வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல''* (குறள் 1100)

என்ற குறளை வைத்து,

நிலந் தினக் கிடந்தன நிதியம் நீள்நகர்ப்
புலம்பறப் பொலிவொடு புக்க காலையே
இலங்குபூங் கொடியன ஏழைநோக்கமும்
உலங்கொள் தோள் உறுவலி நோக்கும் ஒத்தவே.

என இலக்கியஞ் செய்தமை சுவைத்து இன்புறலாம்.

*''அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர் கொல் மாலும் என் நெஞ்சு''* (குறள்109)

என்னும் பாடலுக்கு,

*வாக்கு அணங்கு ஆர் மணி வீணைவல் லாற்கு அவள்*
*நோக்கு அணங்கு ஆய் மனம் நோய் செய நொந்தவள்*
*வீக்கு அணங்கு ஆர் முலை வேய் நெடுந் தோளி ஓர்*
*தாக்கு அணங்கோ!மகளோ! எனத்தாழ்ந்தான்*

(சிந்தாமணி)

என இலக்கியஞ் செய்தமை சுவை பயப்பதாகும்.

ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள(குறள் 1099)

என்னும் குறளை வைத்து,

*''காதன்மை கண்ணுளே அடக்கிக் கண்ணெனும்*
*தூதினால் துணிபொருள் உணர்த்தித்தான் தமர்க்கு*
*ஏதின்மை படக்கரந்திட்டவாட் கண்நோக்கு*
*ஓத நீர் அமுதமும் உலகும் விற்குமே''*

என இலக்கியம் படைத்து, கேமசரி சீவகனுடைய அழகினில் மயங்கித் தன் காதற்பெருக்கை பிறர் அறியாதவாறும் சீவகன் மட்டும் அறியுமாறும் எங்ஙனம் வெளிப்படுத்தினாள் என்பதைச் சுவையாக காட்டுகிறார் ஆசிரியர்.

இவ்வாறு திருக்குறளை மிகுதியாகக் கையாண்டு இலக்கியம் படைத்திருக்கிறார் திருத்தக்கதேவர். அவற்றுள்ளும் ஒரு சில பாடல்களையே இங்கு எடுத்துக் காட்டாகத் தந்துள்ளோம். இதனால் சிவகசிந்தாமணியின் முழுப் பகுதியையும் படித்துச் சுவைத்துப் பயன் பெறுவது வாசகர் கையில் உள்ளது!

உலகப் பொதுமறையாகப் பிற நாட்டுப் புலவர்களுக்கெல்லாம் அறிவுரை நூலாகத் திகழும் திருக்குறளை, வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் பாராட்டுப் பெற்ற திருவள்ளுவர் வாழ்ந்து நம் தமிழ் மொழியின் தனிச்சிறப்பாகும்! ✱

# அவனும்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''தனிய இருக்காம ஆரோடையடி இருக்கப் போறா உன்ர விசரைத் தெரிஞ்சுதான் கரன் வேறு திருமணம் செய்திட்டான். இடி விழுந்தது போல் இருந்தது சுபாவுக்கு. மாமியை வெறித்து பார்த்தாள்''.

எத்தனை துன்பங்களை அனுபவித்த போதும் திருமண வாழ்க்கையாவது தனக்கு சந்தோஷம் தரும் என நினைத்துத்தான் பெரியவர்கள் பார்த்து செய்து வைத்த திருமணத்தை மனப்பூர்வமாக ஏற்றாள்.

பெரியவர்களும் வெளிநாட்டில் இருப்பவன். தமது பேத்தியை கண்கலங்காமல் பார்ப்பான் என நம்பித்தான் செய்து வைத்தனர். ஆனால் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு சுபாவுக்கு கணவராகப் பதிவுத் திருமணம் செய்துகொண்ட கரன் எடுத்துக்காட்டாக இருப்பார் என்று சுபா எண்ணவில்லை. ''அம்மா இனி என்னால் எதனையும் தாங்கிக்கொள்ள முடியாது'' என ஏங்கி அழுதாள். கணவனால் கைவிடப்பட்டு உறவுகளால் கைவிடப் பட்ட தெளிவு அவளிடம் பிறந்தது. யோசித்தாள் இனி நாம் வாழ்வதில் பயனில்லை. அங்குமிங்கும் பார்த்தாள். முகட்டில் சேலையை தொங்கப் போட்டாள். கழுத்தில் சுருக்கிட்டவள் கதவு திறந்து கிடப்பதை மறந்து விட்டாள் நாற்காலி தள்ளப்பட்ட போது இரு கைகள் அவளை ஏந்தின. அவன்தான் செந்தில். எங்கிருந்தோ வந்தவன்; அவனை யாரென்றே தெரியாதவன் ஆபத்துக்குப் பாவமில்லை என்று சுபாவைக் காப்பாற்றினான். அவளது கதைகளையெல்லாம் கேட்டு விலகிப் போகாமல் அவளை அணைத்துக் கொண்டான்.

நமது சமுதாயத்தின் வெளிநாட்டு மோகத்தில் சூழ்நிலைக் கைதிகளாகத் தள்ளப்படும் எத்தனையோ சுபாக்கள் இருக்கிறார்கள். துன்பங்களில் எல்லாம் குறைந்தளவு துன்பம் தான் எமக்குக் கிடைத்துள்ளது என நினைத்தால் துன்பம் துன்பமாகத் தெரியாது. மனமுடைந்து போகாமல் நாம் வாழ்ந்து காட்ட வேண்டும் எனச் சுபாவுக்கு அவன் ஆறுதல் கூறியதை இன்றைய நிலையில் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எதிர்பாராமல் இப்படி ஒரு நட்புக்கிடைத்தமை குறித்து அவள் சிந்தித்தாள். ஒவ்வொரு செயலுக்கும் இடையில் இறைவன் நல்ல வழியைக் காட்டுவான் என்பதற்கிணங்க இவ்வளவு துன்பத்துக்கிடையிலும் நல்ல நட்பைத் தந்ததற்காக இறைவனுக்கு சுபா நன்றி கூறினாள் மனப்பூர்வமாக.

அவள் தற்போது தன்னாலும் வாழமுடியும் என்ற மனத்தைரியத்துடன், எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருவதற்குப் பல தியாகங்களின் மத்தியில் தன்னை முழுமையாக்கிய ஒருவனை நண்பனாக ஏற்றது தவறில்லை. அதேவேளை இப்படியும் பல கரன்கள் நம்மிடையே இருக்கிறார்கள் என்பது சுபாவின் வாழ்க்கைப் பாடத்தில் நாம் கற்க வேண்டிய ஒன்றல்லவா? எதையாவது யோசித்து மூளையைக் குழப்ப வேண்டாம்; சுபா வாரும் எங்கட வீட்டை போவம். அம்மா உம்மைப் பற்றி விசாரித்தவர்'' அவர்களின் பயணத்தில் ஒரு வாழ்வின் உறுதி தெரிந்தது. இருவரும் வீடு நோக்கி நடந்தனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 34

# மழை நீரை குடி தண்ணீராக்கிப் பயன்பெறுவோம் 3

பொதுவாக மழைநீர் சேகரிப்பு என்பது மக்களுக்கு பாதுகாப்பாக குடி தண்ணீரை பெரிதாக எந்தவித சுத்திகரிப்புகளும் இன்றி கிடைக்க வழிவகை செய்யும் ஓர் அரிய திட்டமாகும். காரணம் இங்கு நீர் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் மேற்பரப்பு பொதுவாக கூரைகள் முன்னைய வாரங்களில் நாம் பார்த்தது போன்று எம் நீரை மாசாக்கும் பொதுவாக மாசாக்கிகளில் இருந்து தனிமைபடுத்தப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது.

பசுபிக் கடலில் காணப்படும் தீவுகளில் இந்தத் திட்டங்கள் பெரிதாகப் பயன்படுத்தப்பட்டு அந்த நாட்டு மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பெரிதளவில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. எமது நாட்டின் பல பகுதிகளில் இந்தச் சேகரிப்பின் மூலம் மக்கள் மழை நீரைச் சுத்தமான குடிதண்ணீராகப் பெறுகின்றார்கள். அதிலும் பெரிய நீர் சுத்திகரித்த நீர் வழங்கல்கள் இல்லாத பிரதேசங்களிலும் நிலக்கீழ் நீர் இரசாயன காரணிகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் இந்தத் திட்டம் மிகப் பயனுள்ளதாக இருக்கின்றது.

ஆயினும் எம் அனேக மக்களிடம் காணப்படும் சந்தேகம் போல நாம் கூரைகளில் இருந்து மழை நீரைச் சேகரிக்கும் பொழுது கூரையில் காணப்படும் தூசுகள், இலைகுழைகள், பறவைகள், சில மிருகங்களின் எச்சங்கள் போன்றன இல்லாது நாம் சேகரிக்கும் மழை நீரை தொற்றாக்கலுக்குள்ளாக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

எமது சிறிய மனித வலுவையும் குறைந்த நேரத்தையும் செலவிடுவதன் மூலம் நாம் எவ்வாறு இந்த மழை நீரை சுத்தமாக சேகரிக்கும் முறையை தெளிவாக மக்களுக்கு விளக்கவே இந்தக் கட்டுரையானது உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. மழை நீரைத் தொற்றாக்கக்கூடிய காரணிகளையும் அவற்றை எவ்வாறு குறைக்கலாம் என்பதையும் இங்கு கீழே தரப்பட்டுள்ள சிறிய அட்டவணையைப் பயன்படுத்தி பார்க்கலாம்.

| தொற்றாக்கி | தொற்றாக்கி மூலம் | மழைநீரை தொற்றாக்கக் கூடிய சந்தர்ப்பம் |
|---|---|---|
| தூசு, சாம்பல், இலை, குழை | சுற்றாடலிலுள்ள மாசுக்கள், தாவரங்கள் | சந்தர்ப்பம் சராசரியாக உள்ளது. ஆயினும் இலை, குழை மற்றும் நீர் பிடி குழைகளை கூட்டித் துடைத்து சுத்தம் செய்வதன் மூலம் இலகுவாகக் குறைக்கலாம். |
| நோயாக்கும் பக்ரீரியா | பறவைகள், மிருகங்கள் | சந்தர்ப்பம் சராசரியாக உள்ளது. முதல் பெறப்படும் மழைநீரை வெளியேற்றுவதன் மூலம் இது மிக இலகுவாகக் குறைக்கலாம் (இதனை எவ்வாறு செய்வது என்பதை இனிவரும் காலங்களில் தெளிவாகப் பார்க்கலாம்.) |
| உலோக அயன்கள், பார உலோகம் | தூசுக்கள் | சந்தர்ப்பம் குடாநாட்டைப் பொறுத்தவரை மிகக் குறைவு. காரணம் இவை பொதுவாக நெருக்கமான நகரத் தொழிற் சாலைகள் நிறைந்த நகர வழி மண்டலத்தில் காணப்படும் தூசுக்களிலேயே காணப்படும். |
| விவசாய இரசாயனப் பொருள்கள்/ அசேதன இரசாயனப் பொருள்கள் | தொழிற்சாலை நச்சு வாயு/ பொருத்தமற்ற நீர்த்தாங்கிகள் | இந்தச் சந்தர்ப்பம் குடாநாட்டை பொறுத்தவரை மிகக் குறைவு |
| நுளம்பு குடம்பி | நீர் சேகரிக்கும் குழாய், நீர்த்தாங்கிகளில் நுளம்பு முட்டை இடுவதன் மூலம் | நீர்த்தாங்கியானது இறுக்கமாக மூடுவதன் மூலம் நீர்க்குழாய் களில் அடைப்புக்கள் இன்றி பராமரிப்பதன் மூலமும் இலகுவாகப் பாதுகாக்கலாம். |

குடா நாட்டைப் பொறுத்தவரை நாம் பயன்படுத்த இருக்கும், பயன்படுத்தும் கூரை மேற்பரப்பானது பொதுவாக மண் ஓடுகள், Asbestos சிமெந்து கூரைகளகவே உள்ளன. சிமெந்துக் கூரைகள் மண் ஓடுகள் பற்றிய ஐயப்பாடுகள் எதுவும் இராது. ஆயினும் Asbestos கூரைகள் பயன்படுத்தப்படும் போது அதிலிருந்து வெளிவரும் கழிவுகள் புற்று நோயைத் தூண்டக்கூடியதாக இருக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கின்ற போதும் இது பல ஆய்வுகளின் மூலம் மிகமிக் குறைவாகவே உள்ளது என்பது (campbel/1993) தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்கு தமது கூரை மேற்பரப்பை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று தெளிவாக விளக்க வேண்டிய தேவை இராது. மிகச்சாதாரணமாக கூரையைக் கூட்டுவதன் மூலமும் கூரையின் மேல் தொங்கிக் காணப்படும் மரக்கிளைகளை அகற்றுவதன் மூலமும் சுத்தமாகப் பராமரிக்க முடியும். மழை அறிகுறி காணப்படும் சந்தர்ப்பத்தில் இந்த சுத்திகரிப்பு மிக அவசியமாகும்.

கூரை மேற்பரப்பில் பெறப்படும் மழையை ஒரு சேரப் பெறுவதற்கு நாம் கூரை விளிம்பை சுற்றி நீர்தாரைகள் (Gutter) அமைத்து அதன் மூலமே நீர் சேகரிக்கும் தொட்டிகளுக்கு கொண்டு செல்லல் வேண்டும். குடா நாட்டைப் பொறுத்த வரை தற்போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் Gutter pvc இனால் அமைக்கப்படுவதால் அதில் இருந்து எந்த விதமான ஆபத்தான மாசுக்களும் வர வாய்ப்புக்கள் இல்லை. ஆயினும் இந்த Gutter களும் முறையாக கூட்டி சுத்தம் செய்து இலகுவாக தூசுக்களில் இருந்து சுத்தம் செய்யப்படல் வேண்டும். நீரானது அடைப்பின்றி ஓடக் கூடிய வகையில் பராமரிக்கப்படவும் வேண்டும். அடுத்து வரும் வாரங்களில் நாம் எவ்வாறு மேற்பரப்பில் சேகரிக்கும் நீரை சேமித்து உதவக் கூடிய கொள்கலன்கள் பற்றியும், இவ்வாறு சேகரிக்க முன் எவ்வாறான நடவடிக்கைகளைப் பின் பற்ற வேண்டும் என்பது பற்றியும் பார்ப்போம்.

( தொடரும்)

[illegible]
இரசாயனவியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பகாலத்தில் குங்குமப்பூ பாவனை ஆபத்தானது

கர்ப்பகாலத்தில் குங்குமப்பூ சாப்பிட்டால் வெள்ளைக்குழந்தை பிறக்குமென்ற நம்பிக்கை நெடுநாளாக எம்மிடையே நிலவிவருகிறது. ஆனால் குங்குமப்பூ கருச்சிதைவை ஏற்படுத்தும் என்று கூறும் அண்மைய ஆய்வு குங்குமப்பூ பாவனையை கட்டுப்படுத்தும் தேவையை உண்டாக்கியுள்ளது.

Safron Crocus என்ற தாவர பெயரால் அழைக்கப்படும் குங்குமப்பூ கடந்த 3000 ஆண்டுகளுக்கு மேலாக பாவனையிலுள்ளது. ஆரம்பத்தில் பெர்சியாவில் பயிரிடப்பட்ட இந்த பூண்டு பர்சியர்கள் இந்தியாவுக்கு வாசனைப் பொருளாக கொண்டு வந்தனர். முற்காலத்தில் குங்குமப்பூ வாசனைப் பொருளாகவும், மருத்துவ பொருளாகவும், உடைச்சாயமாகவும் பாவிக்கப்பட்டது. வட அமெரிக்க நாடுகளில் கர்ப்பத்தின் பின் குருதிப் போக்கைத் தவிர்ப்பதற்காக இது மிகவும் பயன்பட்டதாக வரலாறு கூறுகிறது. இந்தப் பாவனை பின் மருவி வெள்ளைக் குழந்தைகளை தருமென நம்பப்பட்டது. இதைவிட குங்குமப்பூ பாலிலும், சோற்றிலும் கலந்து பாவிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் குங்குமப்பூவின் பாவனை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்ததாக பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன.

சங்ககாலத்தில் சேர மன்னன் தன் விருந்தாளிகளுக்கு குங்குமப்பூ கலந்த கள் கொடுத்து உபசரித்ததாக பொருனாறுப்படை என்னும் தமிழிலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. இப்பொழுதும் குங்குமப்பூ கலந்த உணவுகள் (குங்குமப்பூபோண்டா உட்பட) தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் பாவனையிலுள்ளன. நம் நாட்டிலும் கர்ப்பிணித் தாய்மார் வெள்ளைக் குழந்தைகளை வேண்டி குங்குமப்பூவை பெட்டி பெட்டியாக வாங்கித் தள்ளுவார்கள். நம் நாட்டிலும் தமிழ் நாட்டிலும் பாவிக்கப்படும் குங்குமப்பூவின் அளவைக் கருத்தில் கொண்டு, உண்மையிலேயே அது வேலை செய்யுமென்றால் இங்கு எல்லோருமே தற்போதைக்கு வெள்ளைக்காரராக மாறியிருப்போம்.

குங்குமப்பூ பூண்டானது சுமார் 16 அங்குல உயரம் வளரும் ஒரு சிறிய தாவரம். இது மணமற்ற ஒரு ஊதா நிறப்பூவை அசாதாரணமாக இலையுதிர்காலங்களில் பூக்கும். பூவினருகே செந்நிறமான 3 காம்புகள் வளரும். இந்தக் காம்பே (Stigma)பின்னர் காயவைக்கப்பட்டு குங்குமப்பூ என பாவிக்கப்படுகிறது.

( தொடரும்)

டாக்டர்.சி.நவநீதன்
மகப்பேற்றுத்துறைத் தலைவர்,
றிபீர் ஆதார வைத்தியசாலை, ஆஸ்திரேலியா.

# தயமின் - உயிர்ச்சத்து B1


- தயமின் ஒரு நீரில் கரையக்கூடிய விற்றமின் ஆகும்.
- இது உடலில் சக்தியை வெளிவிடும் அனுசேப தாக்கங்களின் துணைநொதியமாக தொழிற்படுகின்றது.
- முக்கியமாக காபோபைதரேற்று அனுசேப தாக்கப்படிகள்.
- தயமின் நரம்பு செலுத்தி (அசற்றைல் கோலின்), கலமென்சவ்வு இலிப்பிட்டு தொகுப்புக்கு இன்றியமையாததாகும்.
- தயமின் உடலில் குறைவதால் பெரிபெரி என்னும் நோய் உண்டாகின்றது.
- இந்த நோய் காபோபைதரேற்றுக் கூடிய, தயமின் குறைந்த உணவை உட்கொள்பவர்களுக்கு ஏற்படலாம்.

  *உ+ம்: நன்றாகத் தீட்டிய அரிசி*
- தயமின் அகத்துறிஞ்சும் திறன் குறைந்தவர்களுக்கும் பெரிபெரி உண்டாகலாம்.

  *உ+ம்: மிகை மதுபானம் அருந்துபவர்கள்.*
- இந்த நோயால் உடலில் நீர் தேங்குதல், இரத்த அமுக்கம் குறைதல், இதயக் கோளாறுகள் ஏற்படலாம்.
- இது நரம்புக் கலங்களின் தொகுப்பை பாதிப்பதால் தொடர்பற்ற அசைவு, உணர்ச்சிக் குழப்பம் என்பன ஏற்படும்.
- தொடர்ச்சியான தயமின் குறைபாட்டால் மறதி, புதிய விடயங்களை கிரகிக்க முடியாமை, மாரடைப்பு என்பன ஏற்படலாம்.
- தயமின் கொண்ட உணவுகள்.

  *உ+ம்: புழுங்கல் அரிசி, உலர்த்தப்பட்ட அவரை, தானியங்கள், ஓட்ஸ் (Oats), ஆட்டாமா, இறைச்சி (பன்றி), முட்டை, பால், பழங்கள் (குறைந்த அளவில்)*
- வளர்ந்த ஒருவர் நாளாந்த உணவில் 1-1.5 மி.கி. தயமினை உட்கொள்ள வேண்டும்.
- உயர் சக்தி தேவை உடையவர்கள் (குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள்) உயர் அனுசேப தொழிற்பாடு உடையவர்கள் (காய்ச்சல், மிகை தையிரொயிட் சுரப்பு) நாளாந்த உணவில் அதிகளவு தயமினை உட்கொள்ள வேண்டும்.
- வாயால் உட்கொள்ளப்படும் அதிகமான தயமின் உடலுக்குப் பயன்படுவதில்லை. அவை பெருங்குடலாலும், சிறுநீருடனும் கழிகிறது.

N.கஜானி, மருத்துவப்பீட மாணவி.




# வெங்காயம்

## விமர்சனம்

தமிழ்சினிமாவில்பெரும்பாலும்கடவுள்பக்திப் படங்கள் சம்பந்தமான கதைகளைக் கொண்ட படங்கள்நிறைய வெளிவருகின்றன. தமிழ் சினிமாவில் பெரும் பாலும் நாஸ்திக வாதங் களை வைத்துப் படமெடுப்பவர்கள் மிக மிகக் குறைவு. அதிலும் அப்படிப் பட்ட கதைகளை தைரியமாகச் சொல்பவர்கள் குறைவு எனலாம். இம் மாதிரியான படங்களுக்கு புதியவர்கள் நடிகர்களை நடிக்க வைத்துப் படம் எடுத் திருந்தால் ஊடகங்களும், பகுத்தறிவு கொண்ட மனிதர்கள் கூட அவர்களுக்கு கொடுக்கும் ஆதரவு மிகக் குறைவு எனலாம். இதையெல்லாம் மீறி சாட்டையடியாய் ஒரு படம் எடுத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார். சேலம் மாவட்டத்தில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வெங்காயம் படத்தின் கதை நகர்கிறது. இந்தியாவில் சாமியார்களின் தொல்லை அதிகம். சாமியார்களைப் பற்றி நாளுக்குநாள் ஊடகங்களில் வராத செய்தியே கிடையாது. அந்தளவுக்கு அங்குள்ள பல சாமியார்கள் எல்லாக் கெட்ட பழக்கங்களையும் கொண்டவர்கள். மக்களை ஏமாற்றி நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்பதால் பலர் சாமியார்கள் வேடம் தரிக்கின்றனர். கடவுளின் பெயரைச் சொல்லி இவர்கள் பணம் சம்பாதிக்கின்றார்கள்.

அடுத்தபடியாக பொய் ஜோசியம் சொல்வது, நரபலி கொடுப்பது எனப் பல சாமியார்கள் கடவுளின் பெயரைச்சொல்லி பணம் சம்பாதிக்கின்றார்கள். மக்களை கடவுள் குற்றம் எனப் பேக்காட்டி பல பூசைகளை செய்து அதிலும் பணம் சம்பாதிக் கின்றார்கள். இதனால் பாதிக்கப்படும் குடும்பங்கள் தற்கொலை முடிவுக்குப்போகும் நிலைமை ஏற்படுவதால் பல குழந்தைகள் அநாதையாகி விடுகின்றார்கள். இந்தப் படத்தின் கதையும் இதே காட்சிகளைக் கொண்டு நகர்கின்றது. இதைப் பார்த்துக் கொண்டு பொறுக்க முடியாமல் இருக்கும் ஒரு கும்பல் கள்ளச் சாமியார்களையும், ஜோசியர்களையும் கடத்துகிறது. இந்தக் கடத்தல்களைக் கண்டுபிடிக்கப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் அலெக்ஸாண்டரை நியமிக்கிறார்கள். இவர் கடத்தல்காரர்களைக் கண்டு பிடித்தாரா?, கடத்தியது யார்? என்பதே படத்தின் முடிவு.

இந்த விறுவிறுப்பான திரைக்கதையில் ஒரு காதல் ஜோடியின் கதையை இணைந்துள்ளமை படத்துக்கு சுவாரஸ்சியத்தை கூட்டியிருக்கிறது. சத்தியராஜ் இந்தப் படத்தில் கௌரவ வேடத்தில் சிறிது நேரம் வந்தாலும் படத்தின் திருப்புமுனைக்கு வழி வகுக்கிறது. சேலத்து தமிழ் உச்சரிப்பில் இயக்குநர் ராஜ்குமார் இந்தப் படத்தில் யதார்த்தமாக நடித்திருப்பது சிறப்பாக உள்ளது. இளம் காதல் ஜோடியாக அலெக்சாண்டர், பவீனா ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். பவீனாவின் கிராமத்துப் பேச்சும் குறும்பும் பார்வையாளர் மனதை கொள்ளை கொள்கிறது. பூ விற்கும் சிறுமி,சைக்கிள் கடைச் சிறுவன், டீ கடை சிறுவன், மனநலம் பாதித்த மூதாட்டி என படத்தில் வரும் துணைக் கதாபாத்திரங்களும் தங்களது பாத்திரங்கள் பேசும் படி நடித்திருக்கிறார்கள். கிடைத்த வசதிகளை வைத்து முற்றிலும் புதுமுகங்களோடு இந்தப் படத்தை எடுத்திருப்பது இயக்குநரின் திறமையை வெளிக்காட் டுகிறது. கூத்துக்காரன் ஒருவன் தனது மகளின் சிகிச்சைக்காகத் தன் உடலை வருத்தி நடுறோட்டில் வலிதாங்காமல் அழுது ஆடி பணம் சம்பாதிப்பது பார்ப்பவர்கள் மனதை வேதனை அடையச் செய்கிறது. இறுதிக் காட்சியில் சாமியார்களைப் பார்த்து சிறுமி திட்டும்போது தியேட்டரே பார்வையாளர்களின் கைதட்டல்களில் அதிர்கிறது. இந்தப் படத்தின் காட்சிகளில் சில குறைகள் இருந்தாலும் சமூகத்துக்கு வேண்டப்பட்ட நல்ல கருத்துக்களைச் சொல்லி பார்வையாளர்களை சிந்திக்க வைப்பதற்கு இந்தப் படத்தின் கதையைப் பாராட்டலாம். இந்தப் படத்தின் இசையமைப்பாளர் பரணியின் இசைத் தாலாட்டில் ''அச்சமென்ன அச்சமென்ன ஆசைத் தமிழே..'' பாடல் மனதில் தாளம் போடவைக்கிறது. பகுத்தறிவு வசனங் களுக்கேற்ப பின்னணி இசையும் படத்துக்கு உயிரூட்டுகின்றது. இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் சபாரத்தினம் செதுக்கிய காட்சிகளை செந்தில்குமாரின் படத் தொகுப்பு சிற்பமாக்கிக் காட்டியிருக்கின்றது. கவிஞர் அறிவுமதி, சுப.வீரபாண்டிய னின் பாடல்கள் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. பாதிக்கப்பட்ட மனதின் வேதனை அதனை உணர்ந்தவனுக்குத்தான் தெரியும். பாதிக்கப்பட்டவனுக்குப் பணத்தைக் கொடுத்து ஆறுதல் படுத்த முடியாது. அவனது பாதிக்கப்பட்ட மனம் பணத்தால் ஒருபோதும் சாந்தியடையாது. என்பதையும், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான தெளிவான கருத்துக்களையும் உள்ளடக்கி இந்தப் படத்தின். கதையின் காட்சிகள் நகர்த்தப்பட்டிருப்பது நல்ல ஒரு சமுதாயத்தை எதிர்பார்த்து காத்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது. வர்த்தக அடிப்படையாக பணம்சம்பாதிக்கும் நோக்கில் சமூகத்துக்கு உதவாத காட்சிகளை கதையாக்கி படம் எடுக்கும் தயாரிப்பாளர்கள், இப்படிப்பட்ட பல படங்களை எடுத்து பணம் சம்பாதிப்பதும் சமூகத்தின் பால் எந்தவிதமான அக்கறை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் சமூகத்தைப் பாழாக்கும் படங்களை எடுக்கும் இயக்குநர்கள் மத்தியில் தனது முதல் படத்தையே நல்ல கருத்துள்ள படமாக எடுத்துரைக்கும் இயக்குநர் சங்கரி ராஜ்குமார் நல்ல சினிமாவுக்கு கிடைத்த முத்து எனலாம்.

சமூகத்தைச் சீரழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைத் தோலுரித்துக்காட்ட வெங்காயத்தைப் பயன்படுத்தி இருப்பது பாராட்டப்பட வேண்டும். இந்த மாதிரியான திரைப்படங்கள் தமிழ் சினிமாவின் தூண்கள். வெங்காயம் நல்லா உறைக்கிறது. பார்வையாளரின் கண்களையும் கலங்கவைக்கிறது. சத்யராஜ், அலெக்ஸாண்டர், பவீனா,கல்கி, ஈழவேந்தன் தங்கராஜ், இந்திராணி, அழகப்பன், வாலி, வெள்ளையம்மாள், வாசு போன்றவர்கள் நடித்திருக்கிறார்கள்.

- குமார்.

# டெங்கு நோய் தொடர்பில் அவதானம் தேவை

**யாழ்.** குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த வருடத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவியதையும் பலர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டதையும் 27 பேர் இதனால் பலியானதையும் நாம் மறந்திருக்க மாட்டோம். டெங்கு நோய் பரவிய வேளையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக் கள் மற்றும் மக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது மீண்டும் டெங்கு நோய் பரவக்கூடியதொரு சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது.

பருவப் பெயர்ச்சி மழையின் ஆரம்பம், தென்னிலங்கை சுற்றுலாப் பயணி களின் அதிகரித்த வருகை, டெங்கு நோய் குறைவடைந்ததால் மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர் வின்மை, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் சூழலுக்கான இசைவாக்கம், டெங்கு நோயின் தனித்துவமான பரவுகின்ற மற்றும் ஆபத்தை விளைவிக்கும் தன்மை, முன்னேற்றமடைய வேண்டியுள்ள நகர்ப்புறங் களிலுள்ள கழிவுப் பொருள் மற்றும் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் இறுதியகற்றல் முகாமைத்துவம் போன்ற காரணங்களால் டெங்குப் பரம்பல் அதிகரித்துள்ளது.

தற்பொழுது குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பருவ மழையின் தூறல்கள் ஆரம்பித்துள்ளன. எமது சுற்றாடலில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான நீர் தேங்கக் கூடிய இடங்கள் கவனிக்கப்படாமல் உள்ளன. அத்துடன் எமது வீட்டுப் பீலிகளில் சருகுகள் சேர்ந்து அடைபட்டுள்ளதால் மழை நீர் தேங்கி நிற்கக் கூடியதாக வுமுள்ளது.

இடையிட்டுப் பெய்யும் மழையின் போது இவ்வாறான இடங்களில் சிறிதளவில் நீர் தேங்கி நிற்கும் போது ஏற்கனவே இடப்பட்டிருக்கும் அல்லது புதிய முட்டைகள் இடப்பட்டு டெங்கு நுளம்புகள் அதிகளவில் பெருகக்கூடிய ஆபத்து ஏற்படும். இந்த நுளம்புகளுக்கு ஒரு தேக்கரண்டியளவு நீரே முட்டையிட்டுப் பெருக்கமடையப் போதுமானது.

பாடசாலைகளின் விடுமுறைக் காலம் மற்றும் எமது பிரதேச ஆலயங்களின் திருவிழாக் காலத்துடன் டெங்கு நோய் அதிகமாகவுள்ள தென்பகுதியிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்ததும் எமது பகுதியில் டெங்கு நோய் பரப்பக்கூடிய நுளம்புகளின் செறிவு அதிகரித்துக் காணப் படுவதும் டெங்கு நோய் பரவ அதிகம் காரணமாகின்றன.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து டெங்கு நோயின் தாக்கம் குறைவ டைந்து காணப்பட்டதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிலை குறைவடைந்துள்ளது. அத்துடன் டெங்கு நோய் அதிகளவில் பரவிய காலப்பகுதியில் பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் இடம்பெற்று வந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட பின்னடைவுகளும், மக்கள் உடனடிச் சிகிச்சை பெறுவதில் காட்டுகின்ற கரிசனையற்ற தன்மையும் மீண்டும் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையிலிருந்து மீண்டும் கட்டுப்படுத்துவதற்குக் கடினமான அதிக உயிரிழப்பு களை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான நிலைமைக்கு அடித்தளமிட்டுள்ளது.

டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்புகள் முன்னர் பெருக்கமடைந்த சிறிய நீர் தேங்கக் கூடிய இடங்கள் சுற்றாடலில் இல்லாதவிடத்து எமது கண்காணிப் புக்குட்படாத அடைபட்டுள்ள பீலிகள், குளியல் தொட்டிகள், நீர்த் தொட்டிகள், பாவனை குறைந்த ஆழம் குறைவான கிணறுகள், நீர்த் தாங்கிகள் போன்றவற்றில் பெருக்கமடைவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே எமது சூழலில் இவ்வாறான இடங்களையும் எமது கண்காணிப்புக்குட்படுத்தாவிடின் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக்க மடைவதைக் கட்டுப்படுத்துவது கடினமாகும். அத்துடன் இந்த நுளம்பின் முட்டைகள் ஆறு மாதகாலம் வரை நீரின்றி குறிப்பிட்ட நீர் தேங்கக் கூடிய இடங்களில் ஒட்டியவாறு உயிரோடிருந்து மீண்டும் நீர் வரும் வேளையில் பொரிக்கக் கூடியவை. எனவே நீரை அதிகளவில் சேமித்து வைத்திருக்கும் இடங்களை நீரை வெளியேற்றி வாரத்துக்கொரு தடவை யாவது நன்றாக உரஞ்சிக் கழுவுதல் வேண்டும். அத்துடன் இந்த நுளம்புகள் எமது சுற்றாடலி லுள்ள சிறிய புதர்கள் போன்ற குளிர்ச்சியான பகுதிகளிலேயே அதிக மாகத் தங்குகின்றன. எனவே வீட்டுச் சுற்றாடலில் உள்ள இவ்வாறான பகுதிகள் அகற்றப்பட வேண்டும்.

டெங்கு நோயைப் பொறுத்தவரை அதனை இலகுவில் உறுதி செய்து கொள்வது கடினம். பெரும்பாலும் திடீரென ஏற்படுகின்ற கடுமையான காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, வாந்தி மற்றும் கண்களில் வலி போன்றவை பொதுவான அறிகுறிகளாகவுள்ளன. இவ்வாறான அறிகுறிகள் ஏனைய நோய்கள் பலவற்றுக்கும் பொதுவானவை. இந்த அறிகுறிகளைத் தொடர்ந்து நோய் இயல்பாகவே குணமடைந்ததைப் போல் உணரப்பட்டாலும் அது ஒருவரைத் திடீரென உயிராபத்தை விளைவிக்கக்கூடிய டெங்கு அதிர்ச்சி நிலைக்கு இட்டுச் செல்ல முடியும். எனவே டெங்கு நோய் பரவுகின்ற காலப்பகுதியில் ஏற்படுகின்ற காய்ச்சல் தொடர்பில் மிகுந்த அவதானத்தோடு இருப்பதும் தகுதியான வைத்தியர் ஒருவரிடம் ஆலோசனை பெறுவதும் முக்கியமானதாகும். இந்தக் காலப்பகுதியில் பரசிற்றமோல் வகை தவிர்ந்த அஸ்பிரின், புருபன், டைக்குளோபெனக் சோடியம் போன்ற மாத்திரைகள் பாவிப்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இந்தவகை மாத்திரைகள் குருதிப் பெருக்கு நிலையை ஊக்குவிக்கக்கூடியவை. டெங்குக் காய்ச்சல் அல்லது டெங்கு பரவும் காலப்பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டுக் குணமடைந்தவர்கள் ஒரு வார காலப்பகுதிக்காவது பாடசாலை, வேலைக்குச் செல்லாது பூரணமான ஓய்வெடுத்துக் கொள்வது அவசியமானது.

டெங்கு நோயானது நான்கு வகையான கிருமிகளால் ஏற்படுத்தப்படுகிறது. இவற்றில் ஒரு வகையான கிருமியால் நோய்க்குள்ளான ஒருவருக்கு மீண்டும் வேறு வகையான கிருமி தொற்றுமானால் மிக மோசமான பாதிப்பை அல்லது மரணத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அவருக்கு டெங்கு நோய் ஏற்படலாம். ஏற்கனவே டெங்கு நோய் அறிகுறிகள் எதுவுமின்றி ஏற்பட்ட ஒருவருக்கும் இந்த நிலை ஏற்படமுடியும். யாழ்.குடாநாட்டில் கடந்த வருடத்தைப் போல் மீண்டும் ஒரு டெங்குப் பரம்பல் ஏற்படுமானால் அதிக தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சமூகத்தின் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களும் டெங்கு நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் தத்தமது பங்கை உணர்ந்து டெங்குக் கட்டுப்பாட்டு ஜனாதிபதி செயலணிக் குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக செயற்பட்டு யாழ். குடாநாட்டில் ஏற்படக்கூடிய டெங்கு நோய்ப்பரம்பலைத் தவிர்க்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புன்னகையே பெண்ணுக்கு நிரந்தரம்

இன்றைய சமூகம் போலிக் கௌரவத்துக்கும் ஆடம்பர வாழ்க்கைக்கும் அடிமையாகிவிட்டது. எனவே கீழ் மட்டம் முதல் மேல்மட்டம் வரை பெண்கள் நகைகளை அணிந்து செல்லவேண்டும் என்ற மோகத்துக்கு உள்ளாகிவிட்டனர். புன்னகை உள்ளத்தின் உள்ளே இருந்து முகத்தில் வெளிப்படும் அன்பு என்பதை மறந்து விடுகிறார்கள்.

சிரிக்கத் தெரிந்தவள் தன்னைச் சுற்றிலும் இன்பத்தையும் இனிய உறவையும் ஏற்படுத்திக் கொள்கிறாள். சிரிக்கத் தெரியாதவள் இருள்போன்ற துன்பத்தை உண்டாக்கிக் கொள்கிறாள். காசு, பணம் செலவின்றிப் பெண்களுக்கு கடவுள் அளித்த பரிசு புன்னகையே.

ஆனால் இன்று ஒவ்வொரு பெண்ணும் தான் அழகாக இருக்கவேண்டும் என்பதற்காகப் பொது நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போதும் புன்னகையற்ற பொன்னகைகளால் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள். இதனால் ஏற்படப் போகின்ற ஆபத்துக்களைப் பற்றி உணர்ந்து கொள்ள அவள் மறந்து விடுகிறாள். இதில்தான் மதிப்பும் மரியாதையும் உள்ளது எனத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளாள். அவள் அவ்வாறு பொன் ஆபரணம் அணியவில்லையென்றால் அவளிடத்திலே பணமி ல்லை என்றே சமூகத்தவர்களும் கருதுவார்கள். பொன் நகையில் சென்றால்தான் அவ ளுக்குரிய மரியாதையையும் எதிர்பார்க்க முடிகிறது.



-கு.நிஸாந்தி,
நீர்வேலி.

சமுதாயத்துக்காக திருட்டு, கொள்ளை முதலியன நிறைந்த இன்றைய சூழ்நிலையில் பெண்கள் பொன் நகை களை அணிந்துகொண்டு செல்வது எப்படி? இதைக் கருத் திற்கொண்டுதான் காந்தியடிகளும் ''பொன் நகைகள் பெண்ணுக்கு அழகைக் கொடுத்தாலும் ஆபத்தானவையே. அதைவிட அவள் முகத்தில் தோன்றுகின்ற அன்போடு கூடிய புன்னகையே பொன் நகையை விட அவளுக்கு மேலும் அழகு சேர்க்கிறது'' என்று கூறியுள்ளார்.

எனவே அன்போடு கூடிய, அகத்தில் இருந்து வெளிப்படுகின்ற புன்னகையே பெண்களுக்கு அழகு சேர்க்கின்றது. பொன்னகைகள் வெளிச்சமூகத்துக்கு அழகையும், அந்தஸ்தையும் வெளிப்படுத்தும் குறிகாட்டிகளாக இருக் கின்றனவே தவிர புன்னகையே பெண்ணுக்கு நிரந்தரமானது.

# வானம் வசப்படும்



புதுமைப் பெண்ணே உன்னை
உலகம் அறிய புதுமைகள் படைத்திடு
போட்டியில் வென்றுவிட
வெளி உலகம் அறிந்திடு
விடாமுயற்சியையும், உழைப்பையும்
இரு சிறகுகளாக மாற்றிவிடு
மழைநீர் வடிந்து பூமி குளிர்வது
போல வாழும் வழியை வசப்படுத்திவிடு
வையத்தைத் தலைமை கொள்ள
வானம் தாண்டி யோசி
யோகம் என்பது ஜாதகத்திலில்லை
முன்னேற அது பாதகம் என்றிடு
எடுத்த செயல் முடியும் போது
அடுத்த செயலுக்குத் தொடக்கம் தேடு
தேடுதல் என்பதற்கு முடிவில்லை
முடிவிற்காகத் தேடுவதை நிறுத்தாதே
நீ உன்னை நம்பு
வானம் ஒருநாள் வசப்படும்

-ரதினி.

# பெண்களின் விருப்பங்களை நிறைவேற்றினால் குடும்பத்தில் என்றும் மகிழ்ச்சி நிலைக்கும்



பெண்கள் இயல்பாகச் சில செயற்பாடுகளை விரும்புகிறார்கள். அத்தகைய செயல்களைத் தமது விருப்பப்படி நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் போது விரக்தி என்ற மனநிலைக்குத் தள்ளப் படுகிறார்கள். இந்த மனநிலை சிலவேளைகளில் தற்கொலை முயற்சிக்குக் கூட அவர்களை இட்டுச் செல்கிறது. எனவே அவர்களது சின்னச்சின்ன ஆசைகளை, விருப்பங்களை நிறைவேற்றத் தயங்கக் கூடாது.

தன்னால் விரும்பப்படுபவன் சிறந்த ஆண்மகனாக, எல்லோராலும் பாராட்டப்படக் கூடியவனாக இருக்க வேண்டும் என்றே எல்லாப் பெண்களும் பேராசைப்படுவார்கள். அதிலும் தனித்திறன் பெற்ற ஆண்களைப் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும். இவ்வாறு எதிர்பார்க்கும் பெண்களுக்கு எதிர்மாறான குணங்கள் பொருந்திய கணவன் அமையும்போது அவளது வாழ்வே சூனியமாகி விடுகிறது.

குடும்பத்தில் தன்னுடைய பங்களிப்பும் குறிப்பிடத்தக்களவு இருக்கவேண்டும் எனப் பெண் எதிர்பார்க்கிறாள். ஆகையால் எந்தவொரு முடிவை எடுத்தாலும் அதில் மனைவியின் பங்களிப்பு இருக்கவேண்டும். மனைவியைப் புறந்தள்ளிவிட்டு முடிவெடுக்கக்கூடாது.

குடும்பத்தில் கணவனிடத்தில் மட்டும் வருமானம் தங்கியிருக்கவேண்டும் என்றில்லை. கைநிறையப் பணம் சேர்க்கவேண்டும் என்று பெண்களும் விரும்புகிறார்கள். அப்போதுதான் மற்றவர்கள் தன்னை மதிப்பார்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். எனவே அவர்களது தகுதிக்கேற்ற வேலையைக் கணவன் தேடிக் கொடுத்தால் மகிழ்வார்கள்.

எப்போதும் வீட்டிலே அடைந்து இருக்க எந்த வொரு பெண்ணும் ஆர்வம் காட்டமாட்டாள். வாரத்துக்கு ஒரு முறையேனும் வெளியிடங்களுக்கு அழைத்துச்சென்று அவர்களை மகிழ்ச்சிப்படுத்தவேண்டும். அதுமட்டு மன்றி அதிகம் பேசுவதில் பெண்களுக்கு எப்போதும் ஆர்வமுண்டு. ஆனால் அவர்கள் கொஞ்சம் நீண்டநேரம் பேசினால் அதைக் கட்டுப்படுத்த ஆண்கள் முயற்சிக்கக் கூடாது. அவர்களை மனம்போல் பேச விட்டுவிடவேண்டும். இவ்வாறு குடும் பத்தில் பெண்களின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றினாலே போதும் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி எப்போதும் நிறைந்திருக்கும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# கங்காவின் கடிதங்கள்

அன்புள்ள கண்மணிக்கு,

ஒரு சிறிய இடைவெளியின் பின் உன் கடிதம் கண்டேன். இந்தச் சிறிய இடைவெளிக்குள் உன் வாழ்வைத் தலைகீழாகப் புரட்டிப்போட்ட சம்பவம் நடந்திருக்குமென நான் கனவிலும் நினைக்கவில்லை. உன் கணவராலும் அவன் உறவுகளாலும் மிகவும் மோசமாக வஞ்சிக்கப்பட்டு இருக்கிறாய். தினமும் குடித்துவிட்டு வீடு வரும் கணவனாக இருந்தாலும் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம். ஆனால் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதென்பது மன்னிக்க முடியாத ஒன்றுதான். அன்பான மனைவி, அழகான இருபிள்ளைகள், கௌரவமாக வாழ்வதற்கு ஏற்ற வீடு, வேலை இதைத் தவிர வேறு என்ன வேண்டுமாம் உன் கணவருக்கு. அவ னை விட்டுப் பிள்ளைகளுடன் நீ உன் வீட்டை விட்டு வெளியேறிவிட்டாய். இது எனக்கு நல்ல முடிவாகத் தெரியவில்லை கண்மணி.

தப்புச் செய்தது உன் கணவன். நீ ஏன் அவனுக்குப் பயந்து வீட்டை விட்டு வந்தாய்? தாலி கட்டிய மனைவி நீ உயிருடன் இருக்க இன்னொரு பெண்ணுடன் வாழ்பவனை சும்மாவிடலாமா? அவன் மீது வழக்குப் போடு; அவனை நீதிமன்றில் நிறுத்து. அவனையே நம்பியிருந்த உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் வாழ்க்கைப்படி கட்டும்படி செய். அப்போது தான் அவனுக்குப் புத்தி வரும். உன் கணவனைப் போல் எம் நாட்டில் நிறையப் பேர் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் மனதில் ஒரு பயம் வரும். கண்மணி என்றும் உனக்குப் பக்கபலமாக நான் இருப்பேன். ''வாழ்க்கை என்பது ஒரு போராட்டம்; அதனைப் போராடித்தான் முடிக்க வேண்டும்.''

மீண்டும் மறுமடலில் சந்திக்கின்றேன்.

அன்புடன்....
கங்கா.

# பெண்ணே புரிந்துகொள்...

★நாக்குத்தான் பெண்களுக்கு வாள்
அது ஒருபோதும் துருப்பிடிப்பதில்லை.
★ஆண்கள் யாரும் இல்லையென்றால்
பெண்கள் அனைவரும் கற்புக்கரசிகள் தான்.
★பெண்களுக்கு இரண்டு முறை பைத்தியம் பிடிக்கும்
அவள் காதல் கொண்ட சமயம்
தலை நரைக்கத் தொடங்கும் சமயம்
★பெண்ணே! வாழ்க்கை என்பது நீ சாகும் வரையில் அல்ல;
மற்றவர் மனதில் நீ வாழும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காமாண்டு நினைவலைகள்



பிறப்பு: 12.05.1939

இறப்பு: 17.09.2007

திருமதி
**கமலாம்பிகை தர்மலிங்கம்**

திதி: வளர்பிறை ஸப்தமி
(04.09.2011)

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்

சுன்னாகம். (7519) குடும்பத்தினர்.

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு காசாளர் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை. 07.09.2011 முதல் ஒருவாரகாலத்துக்குள் மு.ப. 11 மணிமுதல் 2 மணிக்குள் இல 4. மேதர்ஸ ஒழுங்கை, கனக சபை வீதி, மானிப்பாய் என்னும் முகவரிக்கு வரவும். நிர்வாகி

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பம் 1977 இல் பிறந்த நட்சத்திரம் உத்திரட்டாதி 1ஆம் பாதம் - பாவம் 15, உயரம் 5'10'' யாழ்.நகரில் இயங்கும் பிரபல விநியோக ஸ்தாபனத்தின் இயக்குநர் (Director) ஆறு இலக்கத்துக்கு மேல் மாத வருமானம் பெறும் Degree in Computer Science - (Bangalore)படித்த எந்தவித கெட்ட பழக்கமும், குடும்பப் பொறுப்பும் இல்லாத மணமகனுக்குப் படித்த அழகான குடும்பப் பாங்கான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்பு: 0726995010

## கோழிக்குஞ்சு விநியோகம்

02.09.2011 இல் விநியோகிக்க இருந்த பைரகா புறொயிலர் குஞ்சுகள் 06.09.2011 இலும், NEEL FARM சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் 07.09.2011 இலும் விநியோகிக்கப்படும்.
விவரங்களுக்கு: எஸ்.கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். 0772338084

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி வீதியில் வீடு, காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776619675

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுமாரான அழகுடைய மணமகளுக்கு அரச உத்தியோகம் அல்லது சுய தொழில் செய்யும் மணமகனை எதிர்பார்க்கிறோம். தகுதிக்கேற்ப சீதனம், வீடு கொடுக்கப்படும்.
தொடர்பு: 0774728010

## பெண் ஊழியர்கள் தேவை

கே.கே.எஸ். வீதி,கோண்டாவில் மேற்கில் இருக்கும் பிரபல உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் (KRS Food Products) பணிபுரிவதற்கு ஏற்ற பெண் ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். கீழ்க் காணும் விலாசத்துக்கு நேரில் வரவும்.

**கே.ஆர்.எஸ். நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு.
[உபதபாலகத்துக்கு அருகில்]

## வாடகைக்கு அறை தேவை

யாழ்.நகரில் பிரத்தியேக சிங்கள, ஆங்கில வகுப்புகள் நடத்தும் 50 வயதுக்கு மேற்பட்ட தமிழ் ஆசிரியருக்கு யாழ். நகரில் அல்லது அண்மித்த பகுதியில் வீடொன்றில் அறை வாடகைக்குத் தேவை. பிள்ளைகளுக்கு படிப்பிக்க உதவ முடியும். தொடர்பு: 0770856291

## விற்பனைக்கு

முதிரைப் பலகையால் செய்யப்பட்ட 6 அடி உயரம் 4 அடி அகலம் கொண்ட வீட்டுப் பாவனைக்குரிய அலுமாரி ஒன்று விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 0776456981 அல்லது 0212240685

## விண்ணக வாழ்வின் மூன்று ஆண்டுகள்

உயிர்த்தெழுதலும்
வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை
கொள்பவர்
இறப்பினும் வாழ்வார்
*யோவான் 11: 25*



*மண்ணில் : 22.12.1919*
*விண்ணில்: 05.09.2008*

**அருட்சகோதரி மேரி லுசிலா HFB**

*இவரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலிகள் நாளை [05.09.2011] திங்கட்கிழமை காலை 6 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் யாழ்.மரியன்னை பேராலயத்திலும் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும்.*

வேம்படி வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

## வாணியின் கல்விச்சேவை (VIMB)

ஜேர்மனி, கொலன்ட், சுவிஸ், டொச் ஆகிய மொழிகளில் புதிய பிரிவுகள் எதிர்வரும் 10.09.2011 இல் ஆரம்பமாகின்றன. முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள். 15 வருடங்களுக்கு மேலாக டொச் மொழியில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.
குறிப்பு: எமது நிறுவனத்தில் டொச் மொழி இன்று அகில இலங்கையில் அதிகூடிய புள்ளிகள் பெற்று சித்தி பெறும் ஒவ்வொருவருக்கும் சிங்கப்பூர் சுற்றுலாவுக்கான இரு வழி விமான ரிக்கட்டுக்கள் வழங்கப்படும். இரு கிழமை அங்கு தங்குவதற்கான சகல செலவுகளையும் எம் நிறுவனம் பொறுப்பேற்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

Government Register (International)

மட்டக்களப்பு கிளை 0772848495
திருகோணமலை 0771307185

தொடர்புகளுக்கு

தலைமை முகவரி
S.Ponnampalam
# 211, Liverpool road,
London, U.K.

யாழ் கிளை
இல, 181,
2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
விஜய்: 0771307185
வாணி: 0778501013

வவுனியா கிளை
S. சிந்து,
C/O சோ.மங்கையர்க்கரசி
இல.103/52,
சூசைப்பிள்ளையார் குளம்.
வவுனியா. 0771307185

எமது இணையத்தள முகவரி: www.keethan net.com
உடனடித் தொடர்புகளுக்கு: 0771307185 தயவுசெய்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரம் குறித்து வரவும். எமது இணையத்தள முகவரியை ஒரு முறை பார்வையிடவும்.

# BBS பாடசாலைகளின் ஆங்கிலமொழி பாடநெறிகள்

## O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.

**Certificate in English,**
**Diploma in English,**
**Advanced Diploma in English**

தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
வசதிக்கேற்ப நேர அட்டவணை
பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்
பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
இலக்கண வகுப்புக்கள்

## ENGLISH CLASSES FOR CHILDREN

**Pre-Foundation, Foundation- Level 1,2,3,4**

**School Syllabus Covered**

சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்
வாரத்தின் எல்லா நாட்களிலும் BBSஇன்
அனைத்து வளாகங்களிலும் நடாத்தப்படும்

## BRITISH COUNCIL IELTS

அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

**Academic, General**

IELTS பரீட்சைக்கு தோற்ற விரும்பும் யாழ்குடாநாட்டு மாணவர்கள்,
BBS நல்லூர் வளாகத்திற்கு நேரில் வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி பதிவு செய்யலாம்.
பிரிட்டிஸ் ஹைகொமிஷனால் அங்கீகிரிக்கப்பட்ட பாடநெறிக்கான கைநூல்கள் வழங்கப்படும்

## BBS இன் சர்வதேச பாலர் பாடசாலைகள்

Dr.Maria Montessori &
Canadian Early Learning Method
ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்

+2 முதல் 5 வயதுவரையுள்ள சிறார்களுக்கு

- Play Group (2+சிறார்களுக்கு)
- Montessori (3+சிறார்களுக்கு)
- Pre-School (4+சிறார்களுக்கு)

## September இல் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**SPECIAL ENGLISH CLASSES**

**For Professionals Including Doctors, Engineers, Nurses & Government Officials**

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | - 140. கோவில் வீதி. நல்லூர் |
| கோப்பாய் | - பருத்தித்துறை வீதி. கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | - 1ம் கட்டை. இராசவீதி. நீர்வேலி. |
| சாவகச்சேரி | - சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை அருகாமை |
| மானிப்பாய் 1 | - 252. ஆலடிசந்தி. யாழ்வீதி. மானிப்பாய். |
| மானிப்பாய் 2 | - சங்கரப்பிள்ளை வீதி. மானிப்பாய். |
| சுண்ணாகம் | - Lakshmi (புதியநீதிமன்றம் அருகாமை) K.K.S.வீதி மல்லாகம் |
| புலொலி | - ஸ்ரீ பத்மநாதன் இல்லம். மந்திகை. |
| அச்சுவேலி | - அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை |
| சங்கானை | - நிகர வைரவர் கோவிலடி. AGA Office அருகாமை |



The Peninsula's Premiere English Acadamy

British Business School
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி நல்லூர். Contact : 021 2225796, 0777 009653, 0776646357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசைவர்களின் சடங்குகள்

இந்து மதத்தின் ஒரு பிரிவான வீரசைவர்களின் சடங்குகள் ஏனைய இந்துக்களின் சடங்குகளிலிருந்து வேறுபட்டவை. இறந்தவர்களின் உடலை சமாதி வைக்கும் வழக்கம் வீரசைவர்களிடையே இருந்தது; இருந்து வருகிறது.

நவீன உலகில் சமாதி வைக்கும் வழக்கம் கைவிடப்பட்டு இறந்தவர்களின் உடல்களைப் புதைத்து வருகின்றனர். இன்றைய விஞ்ஞான யுகத்தில் பெரும்பாலானவர்கள் சிவபூசை செய்ய முடியாதிருப்பதும் சமாதிக்கிரியை கைவிடப்பட்டதற்கு ஒரு காரணம். வலி.வடக்கு இடப்பெயர்வு காரணமாக இடம்பெயர்ந்த வீரசைவர்கள் தமது உறவினர்களின் சடலங்களைப் புதைப்பதற்கு இந்துமயானங்கள் சில மறுப்புத் தெரிவிப்பது கவலைக்குரிய விடயம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாமியப் படையெடுப்பு நிகழ்ந்த போது இஸ்லாமியர்கள் ஒரு கையில் குர் ஆனும் மறுகையில் வாளுமாக வந்தபோது கழுத்தில் சிவலிங்கத்தை அணிந்து கொண்டு இந்துமதத்தைக் காப்பாற்றப் போராடியவர்களே வீரசைவர்கள் எனப் பொன்னியின் செல்வன் நாவலில் கல்கி குறிப்பிட்டுள்ளார்.

இந்துமதத்துக்காகப் போராடியவர்களின் பரம்பரையில் வந்தவர்களைப் புதைப்பதற்கு அனுமதி மறுக்கப்படுவது வேதனைக்குரிய விடயம். முப்பது ஆண்டுகளுக்கு முன் கீரிமலையில் காலமான ஒரு வீரசைவரின் மரணச் சடங்கை விமர்சிக்கிறது இந்த நடைச் சித்திரம்.

நடைச்சித்திரம்

சின்னையா, வீட்டுத் தட்டியுடன் இருந்த சிமெந்தால் கட்டப்பட்ட சாய்மனைக் குந்தில் படுத்திருந்தார். உறவினர்களெல்லோரும் சுற்றிவர நின்றார்கள். சண்முகநாதன் சின்னம்மாவை வந்து பாலைப் பருக்குமாறு கூறினார்.

சின்னையாவுக்குப் பெயர் செல்லையா. சின்னம்மாவின் பெயர் சந்தனம். அம்மாவுக்குச் சின்னையா முறை. நாங்களும் சின்னையா சின்னம்மா என்றுதான் கூப்பிடுவோம். சித்தப்பா, சித்தி போன்ற உறவு முறையை முன்பு சின்னையா, சின்னம்மா என்றுதான் அழைப்பார்கள். சின்னம்மா மெதுவாக எழுந்து வந்து பாலை முலைப்பால் கிண்ணியினுள் விட்டுப் பருக்கினார். (முன்பு தமிழ்ப் பரிகாரிமார் முலைப்பாலில் அரைத்துக் கொடுக்குமாறு மாத்திரைகளை வழங்குவர். நடுவே சதுரக்கிண்ணம் போன்ற அமைப்பில் வாய் அல்லது விளிம்பு மூக்குப் போன்ற அமைப்பில் செய்யப்பட்ட முலைப்பால் கரண்டிகள் எல்லா வீடுகளிலுமிருக்கும்.)

இரண்டாவது தடவை பருக்கும்போது அரைவாசிப்பால் வெளியே வந்து கடைவாயில் வழிந்தது. சண்முகநாதன் என்னைக் கூப்பிட்டு ஒரு தேவாரமும் புராணமும் படிக்குமாறு கூறினார்.

நான் போய் இருகரங்களையும் குவித்தவாறு தேவாரம் பாடத் தொடங்கினேன். சின்னையாவின் உடல் ஒருமுறை ஆடியது. யாரையோ தள்ளி விடுவது போன்ற அல்லது பறிப்பது போன்ற அசைவு உடலில் தெரிந்தது.

''ஆள் முடிஞ்சுது போல் கிடக்கு'' என்றார் ராசாத்தம்பி. கையைத்தூக்கிப் பார்த்தார் சண்முகநாதன். ''எணை அப்பா போட்டார்'' என்றார் சின்னம்மாவிடம். சின்னம்மா ஐயோ என்று குளறினார். சண்முகநாதனும் ராசாத்தம்பியுமாக கால்களிரண்டையும் மடித்து பத்மாசனம் போட்டு கைகளை கால்களின் மேல் வைத்துக் கட்டி கண்களையும் மூடினர். சண்முகநாதன் இடுப்பில் கட்டியிருந்த சிவலிங்கத்தை எடுத்து வாய்க்குள் போட்டு வாயை மூடினார். சின்னையாவைத் தூக்கி சாய்மனைக் கதிரையில் வைத்தனர்.

அப்பா, சண்முகநாதனிடம் சொன்னார் ''நீ ஒருக்கா போய் இளையாம்பியிட்டைச் சொல்லிப் போட்டு வாவன் செல்லையா அப்பா மோசம் போட்டார் எண்டு. இப்ப போனால் பட பஸ்ஸிலை வந்திடலாம்'' என்றார். சண்முகநாதன் புறப்பட்டுவிட்டார். சின்னையாவுக்கு பிள்ளை குட்டி ஒன்றுமில்லை; வேலையும் ஒன்றுமில்லை. திருநெல்வேலியில் இளையதம்பி என்பவர் நிதிக் கம்பனியொன்று நடத்துகிறார். அவரிடம்தான் சின்னையா தனது மரணச் செலவுக்கெனப் பணம் கொடுத்து வைத்திருந்தார். மறுநாள் காலையிலேயே இளையதம்பி வந்துவிட்டார். இளையதம்பி இரண்டாயிரம் ரூபா கொடுத்தார். இது ஒன்றுக்கும் போதாது. செத்தவீடு, அந்தியேட்டி எல்லாவற்றுக்கும், மிகுதியைப் போட்டு சமாளிப்போம் என்றனர் அப்பாவும் ராசாத்தம்பியும். கமுகு தறிக்க வேண்டும். அப்பா ''சாணையர் வீட்டில் போய் செல்லையா ஐயா செத்துப் போனார் கமுகு ஒண்டு தரட்டா மெண்டு கேட்டுப்பார்'' என்றார் என்னிடம். நான், ராசாத்தம்பி, சந்திரன் மூவரும் புறப்பட்டோம். சாணையரின் வீட்டையடைந்ததும் சாணையர் ஐயா ''என்ன விசயம்'' என்றார். '' செல்லையா ஐயா மோசம் போட்டார் அதுதான் கமுகு ஒண்டு வேணும்'' என்றனர் ராசாத்தம்பியும் சந்திரனும். சாணையரும் அதுக்கென்ன இப்படியான காரியத்துக்குத் தரத்தான் வேணும். அங்கை அந்த கிணத்தடியிலை நாலாவதாக நிக்கிற கமுகை வேணுமென்டா தறிச்சுக் கொண்டு போங்கோ. ஆனா தறிக்கிறதுக்குத்தான் ஆளில்லை என்றார்.

'' அது நாங்கள் தறிக்கிறோம்'' என்றனர் ராசாத்தம்பியும் சந்திரனும். சாணையர் கோடரியை எடுத்து வந்து கொடுத்தார். சந்திரனும் ராசாத்தம்பியுமாக கமுகைத் தறித்து விட்டனர். தோளில் சுமந்து வந்து போட்டோம்.

ராசாத்தம்பி கமுகைப் பிளந்து கீழே இரண்டு துண்டுகளையும் வைத்து விட்டு மற்றைய துண்டை சலாகைகளாக வெட்டி தேர்கட்டினார். முதுகை சாய்த்து வைப்பதற்காக முதுகுப் புறத்தில் இரு சலாகைத் துண்டு களை வைத்து புள்ளடி போல் குறுக்காகக் கட்டினார். கேசவன் ருசுபேப்பரை எடுத்து தேரை மூடி ஒட்டிவிட்டு வார்னிஷ் பேப்பரில் வெட்டி வைத்திருந்த சிவலிங்கத்தை எடுத்து நான்கு புறமும் ஒட்டி குஞ்சங்களையும் ஒட்டினார். சந்திரன் தென்னம் பாளை ஒன்றை வெட்டி வந்து தேரின் உச்சியில் செருகினார்.

''நீ போய் இந்திரனைக் கொண்டு கோயிலைத் திறந்து சங்கையும் சேமக்கலத்தையும் எடுத்துக்கொண்டு வா'' என்றார் அப்பா. நானும் இந்திரனும் போய் சங்கு, சேமக்கலம் என்பவற்றை எடுத்து வந்தோம். நாங்கள் செத்த வீட்டுக்கு மேளம் பிடிப்பதில்லை. சங்கு சேமக் கலத்துடன் தான் உடலைக் கொண்டு போறது. கிரியை முடிந்துவிட்டது. சின்னையாவைத் தூக்கிவந்து தேரின் நடுவே இருத்திக் கட்டி தேரைத் தூக்கினார்கள். நான் சேமக்கலத்தை அடித்துக் கொண்டு முன்னே சென்றேன். நந்தன் சங்கை ஊதிக்கொண்டு வந்தான்.

சுடலையில் சற்சதுரமாகக் கிடங்கு வெட்டப்பட்டு தலையை வைப்பதற்காகத் தெற்குப் பக்கமாக நடுவே ஒரு சதுரம் வெட்டப்பட்டிருந்தது. சின்னையாவை இறக்கி வைத்து தலையை சதுரக் கோறையினுள் வைத்து உப்பையும் விபூதியையும் அள்ளிக் கொட்டினர். ''உரிமைக்காரர் மண் போடுங்கோ'' என்றார் ராசாத்தம்பி. ஆளுக்காள் ஒவ்வொரு பிடி மண்ணை அள்ளிப் போட்டோம்.

தலைக்கு நேரே தடி ஒன்றை வைத்துக் கொண்டு மண்ணைப் போட்டு மூடிய பின் மூன்று பாத்தியாகப் புதைக்கப்பட்ட இடம் பிரிக்கப்பட்டது. கடமை செய்தவர் கொண்டு வந்த கும்பத்தைத் தடி வழியாக சிரசில் ஊற்றி விட்டு நூலைக் கழற்றிப் போட்டு, தேங்காயை நிலத்தில் வைத்து சரி பாதியாக வெட்டிய பின் கத்தியால் சூலம் கீறி வீழ்ந்து வணங்கினர்.

கீரிமலையிலிருந்து கிழக்குப் புறமாக அரை மைல் தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது கீரிமலைச் சுடலை. தற்போது கடற்படையினரின் பாதுகாப்பு வலயமாக உள்ள இடத்தில் ஏற்கனவே இறந்தவர்களின் சமாதிகள் வரிசையாக உள்ளன. இது நாகலிங்கத்தினுடையது - கதிரைமலையின் தகப்பன் அடுத்தது பொன்னையாவினுடையது - கனகராசாவின் தகப்பன். ஏனையவற்றில் பெயர்களைக் காணவில்லை. திவசத்தன்று இறந்தவர்களின் உறவினர்கள் வந்து தமது உறவினரின் சமாதிக்கு பால், பழம் அபிஷேகம் செய்து சோறுகறி படைத்து வழிபடுவர். அருகில் கடல் உள்ள படியால் கடல் நீரால்தான் அபிஷேம் நடைபெறும். கடமை செய்தவர் வீடு நோக்கிப் புறப்பட்டார். சிலர் தோய்வதற்காக கேணிக்குள் இறங்கினர். நான் கடலுக்குள் இறங்கி நீச்சலடிக்கத் தொடங்கினேன்.

ந. பரமேஸ்வரன்

# மனித குலத்தின் மாணிக்கம்

ஈழத்தமிழ் பேசும் மக்களின் இதயத்தில் உழைப்பாலும் தியாகத்தாலும் கொள்கைப் பிடிப்பாலும் தனியிடம் பெற்ற தலைவர் அமரர் தர்மலிங்கம். ''இலங்கையர்'' என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட இவர் ஒரு சிறந்த பண்பாளன். நேர்மையின் உறைவிடம். மக்களுக்குச் சேவையாற்றி ஏழைகளின் நல்வாழ்வில் இன்பத்தைக் காணவும் தமிழ் பேசும் மக்கள் உரிமையுடன் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் அரசியலில் பிரவேசித்தார். இளம் வயதில் இடதுசாரிக் கொள்கையில் கவரப்பட்டு சாதிக் கொடுமைகளைத் துடைத்தெறியவேண்டும் எனத் துணிவுடன் செயற்பட்டார்.

அமரர் தர்மலிங்கத்தின் பொதுவாழ்வு உடுவில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகவும் பின் அதன் தலைவராகவும் இருந்ததுடன் ஆரம்பமானது.

1952 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி முதன்முதல் தேர்தலில் பங்குபற்றிய போது காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தை செல்வநாயகத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்தினார். அன்று தொடக்கம் தமிழரசுக் கட்சியுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து உழைத்தார். 1958 ஆம் ஆண்டு சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டார்.

1960 ஆம் ஆண்டு ''உடுவில்'' என்ற பெயரில் புதிய தொகுதி உருவாக்கப்பட்டது. இந்தத் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்குப் பலர் முன்வந்தார்கள். அவர்களுள் தர்மலிங்கமும் ஒருவர். கட்சியின் உயர்பீடமும் தந்தை செல்வாவும், தர்மலிங்கம்தான் பொருத்தான வேட்பாளர் என ஏகமனதாக முடிவுசெய்து அவரையே நிறுத்தினர். இவருடன் அத்தேர்தலில் மூத்த கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம்; கூட்டுறவாளர் வீரசிங்கம், சட்டத்தரணி ஆசீர்வாதம் போன்றவர்கள் போட்டியிட்டனர். ஆனால் அமரர் பல ஆயிரங்கள் வித்தியாசத்தில் அமோக வெற்றியீட்டினார். பின்பு தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் உடுவில், மானிப்பாய் தொகுதிகளில் போட்டியிட்டு பெருவெற்றியீட்டி மக்கள் தலைவராக விளங்கினார். தொடர்ந்து 23 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து 1983 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டமூலத்துக்கு அமைவாகச் சத்தியம் செய்ய மறுத்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

05.02.1918 இல் இவர் பிறந்த தனது ஆரம்பக் கல்வியை கந்தரோடை சைவ வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய வற்றிலும், உயர்கல்வியை சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றார். தர்மர் சிறுபராயத்தில் இருந்தபோதே அவரின் தாயாரும் தந்தையாரும் இறந்து விட்டனர். ஆகவே அவரின் பெரிய தந்தையாரான வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் தர்மரின் தாயாகவும் தந்தையாகவும் இருந்து கண்ணை இமை காப்பதுபோல் வளர்ந்து நல்வழிப்படுத்தினார். 1945 ஆம் ஆண்டு உறவு முறையான சுன்னாகம் வேலும்மயிலும் தம்பதியரின் புதல்வி கமலாம்பிகையைத் திருமணம் செய்து சித்திரலேகா, சித்தார்த்தன் என இரு செல்வங்களைப் பெற்றெடுத்தார். அவரின் புதல்வன் சித்தார்த்தன் முன்னாள் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினரும் இன்றைய புளொட் அமைப்பின் தலைவருமாவார். தர்மரின் மனைவி கமலாம்பிகை 1949 ஆம் ஆண்டு காலமானதால் தனது இரு செல்வங்களின் நன்மை கருதி மனைவியின் சகோதரியான சரஸ்வதியைத் திருமணம் செய்து கடைசிவரை தனது கந்தரோடை இல்லத்தில் வாழ்ந்து வந்தார்.

1948 ஆம் ஆண்டு தர்மர் இலங்கைச் சட்டக் கல்லூரியில் படிக்கும்போது தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கமும் கல்வி கற்றார். அன்றிலிருந்து இருவரும் நண்பர்களாகி சட்டக்கல்லூரியில் தமிழ் மன்றத்தை உருவாக்கித் தமது தமிழ் உணர்வை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ்பேசும் மக்களிடம் வைத்த அன்பும் நம்பிக்கையும் கிராம மட்டத்தில் அவரைக் காட்சிக்கு எளியவராகவும் மக்கள் அவருடன் மனந்திறந்து உரையாடக் கூடியவராகவும் சர்வதேச மட்டத்தில் அவரைச் சமதர்ம நாடுகளின் நண்பனாகவும் சோஷலிச போராட்டங்களின் ஆதரவாளனாகவும் வைத்துள்ளது. 1972 ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா தலைமையில் இயங்கிய அரசியல் நிர்ணய சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த சமஷ்டி அரசியல் அமைப்பு யாப்பை வரைவதில் ஈடுபட்டுத் தகுந்த ஆதாரங்களுடனும் புள்ளி விவரங்களு டனும் நாடாளுமன்றத்தில் சொற்பொழிவாற்றியதை எம்மால் மறக்க முடியாது. 1985 ஆம் ஆண்டுக்குப் பின் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்ட போது அந்த இளைஞர்களின் பெற்றோரிடம் வீடு வீடாகச் சென்று ஆறுதல்கூறி உதவிபுரிந்ததை நன்கு அறிவோம்.

இக்கட்டான காலகட்டத்தில்கூட வெளிநாடு செல்லாமல் மக்களோடு மக்களாகத் தனது குடும்பத்துடன் வாழ்ந்து முழுநேர அரசியல்வாதியாக மிளிர்ந்த அருந்தலைவர் தர்மலிங்கம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு 02.09.1985 அன்று சுட்டுக்கொல்லப்பட்ட போது இந்துசாதனம் பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் ''தர்மரை அழித்ததும் அரசியல் தருமமும் அழிந்துவிட்டது'' எனக் கூறியதை நாம் நினைவு கூருகிறோம். மனித குலத்தின் மாணிக்கமான தர்மலிங்கம் அழிக்கப்பட்டாலும் மக்களின் இதயங்களில் என்றென்றும் வாழ்வார். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த அந்தப் பெருமகன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்.

ஆ.சி.கனேசவேல், கந்தரோடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்: 29.10.1994
ஆண்டவன் அரவணைப்பில்: 26.08.2009
திதி: 04.09.20ll

### கருணாகரன் மாதுளன்

(சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

அன்பு நிறை மாதுளா
ஆனதுவே ஈராண்டு
ஆறவில்லை எம்துயரம்
எம்மோடு வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உந்தன் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
அன்பு மகனாக பாசமிகு சகோதரனாக
வாழவைப்பாய் என்றிருந்தோம்
பாராண்ட புலவர்கள் ஆய்வுசெய்த தமிழ்போல்
ஊராண்ட தலைவர்கள் உளம் அறிந்த விதிபோல்
நூறாண்டு வாழ்வதற்காய் நொந்துபெற்ற தலைமகனே
பாராண்டு வாழ்வதற்காய் உன் இடத்தை நீ திறந்தாய்

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
மாமாமார், மாமிமார், அன்ரிமார்,
சித்தப்பா, பெரியம்மாமார், பெரியப்பாமார்.

54/12, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் புகையிரதக் கடவைக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774116222

## வீடு/ அறைகள் வாடகைக்கு

யாழ். மருத்துவபீட பல்கலைக்கழகத்திற்கு மிக அருகில் சகல வசதிகளுடன் நான்கு அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0718565662

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பியானோ விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0773995716

## காணி விற்பனைக்கு

மீசாலை மடத்தடி வீதியில் ஐயா கடையிலிருந் து ஏறத்தாழ 200m தூரத்தில் நிலப்பரப்பு 10 விஸ் தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776090931, 0773238033

## கோழிக்குஞ்சு விநியோகம்

*No-1* பகிரா புறொயிலர் குஞ்சுகள் *07.09.2011* விநியோகிக்கப்படும்.

றாஜீவ்.
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (7516)

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 3½ பரப்பில் அமைந்த வீடு விற்பனைக் குண்டு. வாகனத்தரிப்பிட வசதியும், கடைகட்டுவதற்கான இடவசதிகளும் உண்டு.

தொடர்பு: 0773526044, 0779725860

## காணி விற்பனைக்கு

அச்செழு வடக்கில் இராஜவீதிக்குச் செல்லும் ஒழுங்கையில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 0773489073
0771021063 (7509)

## மணமகள் தேவை

இலண்டன் P.R உள்ள எக்கவுண்டன் மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை. மணமகள் பட்டதாரியாகவும் 1984 ஆம் ஆண்டிற்கு பிறகு பிறந்தவராகவும் இருத்தல் வேண்டும். மணமகன் இந்து கௌரவ குடும்பம் 1979 திருவோணம் 3 ஆம் பாதம் 20½ கிரக பாவம்.

தொடர்பு:
மே.பா உதயன், விளம்பர இல.4167,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அமெரிக்க வீஸா லொத்தர்

(இன்ரநெற்/ ஆங்கிலம் தெரியாதவர்களுக்கான சேவை) எம் மூலம் விண்ணப்பிக்க ரூ.15/- முத்திரை ஒன்று, பெயர், விலாசம், மணமானவரா இல்லையா விவரத்துடன் எழுதவும்.

**BBS Netting,**
**3/14, Pinwatta Road, Dehiwala.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணரசில்
06.05.1926

விண்ணரசில்
01.08.2011

01.08.2011 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்

### வல்லிபுரநாதன் அன்னலட்சுமி

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள்இன்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.11, 6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.
(7551)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் சிவபாக்கியம்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் இடைப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம் 01.09.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி.முருகேசு தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் அம்பலவாணரின் அன்பு மனைவியும் கந்தசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி (கனடா), சுப்பிரமணியம் (இலங்கை), விமலாதேவி (கனடா), அம்பலவாணர் (கனடா), தியாகராஜா (கனடா), நடராஜா (கனடா), தங்கமலர் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயும் கந்தையா (கனடா), நாகரத்தினம் (இ.எஸ்.பி. நாகரத்தினம் அன்கோ, கஜமுகன் காட்வெயர்- இலங்கை), தவராணி (கனடா), தனட்சுமி (இலங்கை), இராஜேஸ்வரி (கனடா), சுபத்திரா (கனடா), இராஜேஸ்வரி (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியும் ஸ்ரீகரன், ஸ்ரீதாரணி, ஸ்ரீகோகுலன், ஸ்ரீமைதிலி, நந்தினி, சுகந்தினி, சுகந்தராசா, மனோகரதாஸ், மனோரதி, மனோகௌரி, மனோதர்சினி, மனோபாலன், குருபரன், ஜீவிதா, வைகுந்தன், யுகேந்திரன், கவிதா, சயனுதா, பிரசாந்தி, பார்த்தீபன், கஜேந்திரன், கஜமுகன், கமலநேசன், கமலநாதன், கமலரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைப்பிட்டி,
காரைநகர்.

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (3542)

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/Job seekers.
- The Course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 12th Sept 2011

Lessons on Weekdays from 3.30 - 5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

*English Language Teaching Unit*
*St. John's College, Jaffna*

## நீங்கா நினைவலைகள்

நான்காம் ஆண்டு
பதினைந்தாம் ஆண்டு



ஆண்டுகள்
பல சென்றாலும்
ஆறவில்லை உங்கள்
பிரிவின் துயர்



அமரர் தம்பு
சுவாமிநாதன்

திருமதி சுவாமிநாதன்
சோதிப்பிள்ளை

தரம் ஸ்ரோர்ஸ், அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

ஸ்வர நாத ஸங்கீரணி

## அமரர் நல்லரசு இராஜேஸ்வரன்

(நாதஸ்வர வித்துவான்)



பிறப்பு:
30.03.1956

இறப்பு:
14.09.2010

ஆண்டொன்று கடந்தும் ஆறவில்லை எம் துயரம்
எண்ணாத நேரமதில் எமைவிட்டு எங்கு சென்றீர்
பூமியின் பொறுமையே! புண்ணியத்தின் பெருமகனே!
அன்புடன் அறன் இணைந்த நல்லதோர் கணவனாய்
பண்புடன் எமை வளர்த்த பாசமிகு தந்தையாய்
எல்லோர்க்கும் ஏற்புடைய அருமைச் சகோதரனாய்
நல்லதொரு மைத்துனனாய் நாம் விரும்பும் மாமனாய்
அன்புடன் எமையெல்லாம் அரவணைத்த அயலவனாய்
உறவுகளை உபசரித்து உளம் மகிழ வரவேற்ற
உம் சிரித்த முகமும் கனிவுடைய வரவேற்பும்
காணாது ஏங்குகிறோம் கவலையினால் வாடுகின்றோம்
உமதாத்மா சாந்தியடைய அனுதினமும் வேண்டுகின்றோம்

திதி: 04.09.2011

259, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.



Limited Seats Only

NIBM
BUILDING COMPETENCIES

## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பிரிவுகள் ஆரம்பம் 11-09-2011

| | |
|---|---|
| Certificate in computer science | - 4 Months |
| Certificate in Business Management | - 4 Months |
| Foundation course in Human Resourse Management | - 2 Months |
| Certificate in English Language | - 4 Months |
| Advanced certificate in English Language | - 4 Months |

பதிவுகளுக்கு - 077 071 6974, 021 222 0360

இல 40 கல்லூரி வீதி,
(யாழ் இந்துக்கல்லூரி முன்பாக)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை ரீதியில் தடகளப் போட்டிகள்

## வடக்கு வீரர்களும் பங்கேற்பு

வலி.வடக்கு, செப்.4

இலங்கை விளையாட்டு அமைச்சால் அகில இலங்கை ரீதியிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகி 10 ஆம் திகதி வரை மூன்று நாள்களுக்கு கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வடக்கு மாகாண அணி எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படவுள்ளது. வடமாகாண விளையாட் டுத் திணைக்களம் போக்கு வரத்துக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

வடமாகாணத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

வடமாகாண அணிக்குப் பொறுப்பாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, சி.கனகராசா ஆகியோருடன் மாவட்ட விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும் செல்லவுள்ளார்கள். (ம-86-23)

# அலெக்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண சுற்று

## இன்று மோதவுள்ள அணிகள்

யாழ்ப்பாணம், செப்.4

கைதடி வடக்கு நவ சன சமூக நிலையமும் நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து அமரர் அலெக்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

தென்மராட்சி ரீதியிலான கழங்கங்களுக்கிடையிலான போட்டியில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்ட ரீதியிலான கழங்கங்களுக்கு இடையிலான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவநீதன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-23-288)

# நவோதயா பாடசாலைகளிடையே விளையாட்டு விழா ஒக்ரோபரில்

யாழ்ப்பாணம், செப்.04

நவோதயா பாடசாலைகளுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக வடமாகாணத்தில் உள்ள 23 நவோதயா பாடசாலைகளுக்கு இடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஒக்டோபர் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் யாழ்.துரையாப்பா விளையாட்டு அரங்கில் விளையாட்டு விழா இடம் பெறவுள்ளது.

மேற்படி விளையாட்டு விழா தொடர்பாக நவோதயா பாடசாலைகளின் விளையாட்டுத் துறைப் பெறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணியளவில் மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் நவோதயா பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களைத் தவறாது சமுகம் தருமாறு வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியனவும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட் ஆகியனவும் அஞ்சல் ஓட்டப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (ம-23)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 37 ஆவது தேசியமட்ட தடகளப் போட்டியில் பங்குகொள்ள விருக்கும் வடமாகாண அஞ்சல் ஓட்ட வீர, வீராங்கனைகளுக்கான இருநாள் பயிற்சி முகாம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. பயிற்சி முகாமில் பங்குகொண்ட வீர, வீராங்கனைகள் வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி. அண்ணாத்துரை மற்றும் பயிற்றுநர்களுடன். (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.4

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் காலை 7.30 மணிக்கு லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சந்திரோதயா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-23)

# ஹொக்கிப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.04

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஹொக்கி சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் நாளை திங்கட் கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் கிறாஸ்ஹொப்பஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# கரபந்தாட்ட சுற்றின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப்.4

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எவ்.றஜீவன் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது.

ஜே/261 பிரிவு கிராம சேவையாளர் எஸ்.பாலசுந்தரம் பிரதம விருந்திராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் எ.ஆர்.இராசசேகரம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் கே.ஏகாம்பரம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக லயன் வி.சுப்பிரமணியமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# மக்கள் வங்கி ஊழியரிடையே ஒக்ரோபரில் தடகளப் போட்டிகள்

வலி.வடக்கு, செப்.4

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி ஊழியர்களுக்கு இடையே அகில இலங்கை ரீதியிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் மற்றும் தடகளப் போட்டிகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி மாத்தறை தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வலயம், பிராந்தியம் என்ற அடிப்படையில் விளையாடி வெற்றி பெற்ற பெருவிளையாட்டுகளில் வீர, வீராங்கனைகளுடன் மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மட்டத்தில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளும் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதற்காக யாழ்.மாவட்ட மக்கள் வங்கி ரீதியாக வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகள் தமது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மேலதிக பயிற்சிகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# நாளைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் வில்கல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை திங்கட்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*மாலை 3.45. மணி- குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் 'பி' அணி.

* மாலை 5மணி- பொற்பதி விளையாட்டுக்கழகம் எதிர் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு. (ம-23)

# வன்னிப் பிராந்திய அணி வெற்றி

வலி.வடக்கு செப்.4

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ள கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கான அணிகளை தெரிவு செய்யும் முகமாக வட பிராந்திய அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வன்னிப் பிராந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. பொலனறுவை தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வன்னிப் பிராந்திய அணியும் யாழ்.பிராந்திய அணியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை வன்னிப் பிராந்திய அணி வெற்றிபெற்று வடபிராந்திய சம்பியனாக தெரிவு செய்யப் பட்டுள்ளது.

வன்னிப் பிராந்திய அணி முதல் இரண்டு நேர் சுற்றுக்களை முறையே 25:17, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.பிராந்திய அணியை வெற்றி பெற்றது. (ம-86)

# பாடும்மீன், விக்னேஸ்வரா வெற்றி

யாழ்ப்பாணம், செப்.4

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் குருநகர் பாடும் மீன் (நீலம்) விளையாட்டுக்கழகம் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'சி' பிரிவு அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் விக்னேஸ்வரா வி.க. அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் வி.க. 'பி' பிரிவு அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் (நீலம்) அணிமோதிக் கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் வி.க (நீலம்) அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் மீண்டும் எழுந்து விட்டோம்....



ஆஸ்திரேலிய அணியின் தலைவர் கிளார்க் மற்றும் வீரர்கள்

# சொந்த மண்ணில் தொடரும் தோல்விகள்

இலங்கைக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 125 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. மஹேல ஜெயவர்தன - மத்தியூஸின் மிகச் சிறப்பான இணைப்பாட்டமும் வீணானது.

இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் கடந்த மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி தனது முதலாவது இன்னிங்ஸுக்காக 273 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் மைக்கல் ஹஸி 95 ஓட்டங்களையும், பொன்டிங் 44 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத் 54 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், லக்மல் 55 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ரன்டீவ் 2 விக்கெட்டுக்களையும், வெலகெதர, டில்ஷான் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆஸி.யின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் 105 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கை சார்பாக பரணவிதாரன 29 ஓட்டங்களையும், சமரவீர 26 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஆஸியின் பந்து வீச்சில், முதலாவது அறிமுக டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடும் சுழல் பந்து வீச்சாளர் நதன் லயோன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். வொட்ஸன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

168 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸி.அணி 210 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணித் தலைவர் கிளார்க் அதிகபட்சமாக 60 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இலங்கை சார்பில் ஹேரத் 79 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், வெலகெதர, டில்ஷான் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இலங்கை அணிக்கு 379 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்திலிருந்தே தடுமாறியது. ஹரிஸின் சிறப்பான பந்து வீச்சினால் 68 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்தது. அதன் பின்னர் ஜோடி சேர்ந்த மஹேல மற்றும் மத்தியூஸ் இருவரது சிறப்பான ஆட்டத்தின் மூலம் மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 120 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மஹேல 57 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே மழை காரணமாக ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது. மழையால் சிறிது நேரம் ஆட்டம் தடைப்பட்டது. பின்னர் மஹேல - மத்தியூஸ் ஆட்டத்தால் இலங்கை அணி கௌரவமான இலக்கை நோக்கி முன்னேறியது. மதியபோசன இடைவேளைவரை 187 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இலங்கை அணி இழந்திருந்தது.

அதன் பின்பு ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் மஹேல ஜெயவர்த்தன தனது 29 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். 6 ஆவது விக்கெட்டுக்காக 142 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் மஹேல ஜெயவர்த்தன 105 ஓட்டங்களுடன் ஹரிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன் பின்னர் இலங்கையின் ஆட்டம் முடிவை நோக்கிச் சென்றது. அதன் பின்னர் களமிறங்கிய ரன்டீவ் ஓட்டமெதனையும் பெறாமலும், ஹேரத் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். இறுதியில் மத்தியூஸ் 95 ஓட்டங்களுடன் 9 ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்து வெளியேறினார். இலங்கை அணி 95.5 ஓவர்களில் 253 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் ஹரிஸ் 62 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸன், வொட்ஸன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஆஸி.யின் மைக்கல் ஹஸி தெரிவு செய்யப்பட்டார்.

ஆஸி. அணி 125 ஓட்டங்களால் இலங்கை அணியை முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி கொண்டது. இதன் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (15)

போராடித்தான் பார்த்தேன் முடியல....



மஹேல சதம் அடித்த போது..

# சிறப்பான அடித்தளம் அமைத்தது பாகிஸ்தான்

ஹராரே, செப். 4

நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸுக்காக 357 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்துள்ளது. யுனிஸ்கான் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளார்.

பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் முதலாம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 432 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக மயோ ஆட்டமிழக்காமல் 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் அஜ்மல், ஷீமா தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 116 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது. நேற்றைய தினம் தனது ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் அணி ஹபீஸின் சதத்தின் உதவியுடன் பலமான இலக்கை அடைந்தது.

ஹபீஸ் 119 ஓட்டங்களையும், அஷார் அலி 75, மிஷ்பா உல் ஹக் 66 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். யுனிஸ்கான் 61 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டுள்ளார். நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 120.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 357 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. பந்து வீச்சில் லம்ப் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (15)

# எனது துடுப்பாட்டத்தை மாற்ற மாட்டேன்

எனது துடுப்பாட்ட முறையை நான் மாற்றமாட்டேன். கடந்த மூன்று, நான்கு வருடங்களாக சராசரியாகத் துடுப்பெடுத்தாடி வருகின்றேன். நான் எனது பாணியிலேயே தொடர்ந்தும் விளையாட விரும்புகின்றேன். இவ்வாறு இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் தெரிவித்தார். ஆஸ்திரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு.

நாங்கள் முதலாவது இன்னிங்ஸில் 105 ஓட்டங்களுக்குள் எவ்வாறு ஆட்டமிழந்தோம் என்று தெரியவில்லை. அத்துடன் மிக இலகுவான வெற்றியை இழந்து விட்டோம். 220 ஓட்டங்கள் முதல் 230 ஓட்டங்கள் வரையாவது முதலாவது இன்னிங்ஸில் பெற்றுக்கொள்வோம் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அது நடக்கவில்லை.

முரளி ஓய்வு பெற்ற பின்னர் எங்களால் டெஸ்ட் ஆட்டங்களில் வெற்றி பெறுவது கஷ்டமாக உள்ளது. நாங்கள் புதிய சுழற்பந்து வீச்சாளர்கள் பெற்றுக் கொண்டுள்ளோம். இனிவருகின்ற ஆட்டங்களில் வெற்றி பெறுவதற்கு முயற்சிப்போம். ஹேரத், ரன்டீவ் இருவரும் எங்களுக்கு மிகச் சிறந்த தருணங்களில் கைகொடுத்துள்ளனர்.

மஹேல மற்றும் மத்தியூஸின் ஆட்டம் பாராட்டத்தக்கது. மிகவும் இக்கட்டான நிலையிலிருந்த அணியை இருவரும் மீட்கப் போராடினர். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் தோற்று விட்டோம் - என்றார்.

**பொன்டிங் 'அவுட்'**

இலங்கை, ஆஸ்திரேலிய இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பொன்டிங் விளையாடமாட்டார் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பொன்டிங்குக்கு இரண்டாவது பிள்ளை பிறந்துள்ளதால் அவர் உடனடியாக நாடு திரும்புகின்றார். இதனால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பதிலாக டேவிட் வோர்னர் விளையாடவுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்துக்கு மீண்டும் பொன்டிங் இணைந்து கொள்ளவுள்ளார். (15)

# மழையால் குழம்பியது ஆட்டம்

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் பார்த்திவ் பட்டேல் 107 பந்துகளில் 12 பவுண்டரிகள் அடங்கலாக 95 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ஒரு நாள் ஆட்டத்தில் அறிமுக வீரராகக் களமிறங்கிய ரஹானே 40 ஓட்டங்களையும், ஹோக்லி 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். டிராவிட் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா களமிறங்கிய முதலாவது பந்திலேயே காயமடைந்து வெளியேறினார். மத்தியவரிசையில் ரெய்னா 38, டோனி 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க இந்திய அணி 274 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் பிறஸ்னன், ஸ்ரூவட் புரோட் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 275 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது. 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டையும், 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 2 ஆவது விக்கெட்டையும் இழந்தது. 7.2 பந்து வீச்சுக்களில் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. மழை விடாமல் தொடர்ந்து பெய்தமையால் ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ரொரட் 14, பெல் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தனர். பந்து வீச்சில் இந்தியா சார்பில் பிரவீன் குமார் 4 ஓவர்கள் வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் கோவில்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

**கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

கணக்காளர் இல : 104:10
சம்பள அளவுத் திட்டம் : 10700-13200 (கூ.வே.ஆணைக்குழு சுற்றுநிருபம் 120X10-130X10 இல. 66/2006 இன் படி)

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப் பப்படிவத்தினையும் மேற்படி பதவிக்கான தகைமைகள் அடங்கிய விவரமும் சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 25.00 ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 14.09.2011 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

*அனுப்பவேண்டிய முகவரி*
பொது முகாமையாளர்,
மானிப்பாய் பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.
பொன்னாலை வீதி, மானிப்பாய். (C/3560)

## V-talk
## Spoken English

**வார வகுப்புகள் - 3 மாதம்**
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி

ஆரம்பம் 05.09.2011

பதிவு இலவசம் | கட்டணம் Rs.3000/=

Batch A:காலை 06.00 am - 07.00 am
Batch B:காலை 07.00 am - 08.00 am
Batch C:மாலை 04.00 pm - 05.00 pm
Batch D:மாலை 05.00 pm - 06.00 pm

**சனி, ஞாயிறு வகுப்புகள் - 5 மாதம்**

Batch A:காலை 06.00 am - 07.00 am
Batch B:காலை 07.00 am - 08.00 am
Batch C:காலை 08.00 am - 09.00 am
Batch D:காலை 09.00 am - 10.00 am

V-talk
0777363797
பழைய தபால் கந்தோர், கொக்குவில் சந்தி, கொக்குவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி அம்மா அப்பாக்குட்டி
(அப்பாக்குட்டி மாமி- சரசு அக்கா)



திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் பூதர்மடத்தை வசிப்பிடமாகவும், தற்போது 28/4, மணல்தறை லேனில் வசித்தவருமான திருமதி சரஸ்வதி அம்மா அப்பாக்குட்டி கடந்த (02.09.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தில்லைப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான காசிலிங்கம்- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், கோப்பாய் பூதர்மடத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி காசிலிங்கம் அப்பாக்குட்டியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி,வைத்திலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், மல்லிகைபுஸ்பம், குணநாயகி, காலஞ்சென்ற காசிலிங்கம் மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற சொர்ணலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன், முருகவேள் மற்றும் கனகாம்பிகை, இராசமணி ஆகியோரின் அன்பு மாமியும், அருணாச்சலம், புஸ்பம், இராமகிருஸ்ணன், செல்வகுமாரி, நரேஸ், சுரேஸ், மகேஸ் , திருகரன், குமணன், கீர்த்தனா, திரிபுரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜீவராஜ், குணவதி, ரேஸ்னா, அலிலியா, விக்னேஷ், சுஷான்,மானிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2011) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/4, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ENGLISH, SINHALA CLASSES

IELTS, Spoken English வகுப்புக்கள்
வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

**சிங்கள வகுப்புக்கள்**
பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
**அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்**

NORTH LEAD
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## COMPUTER CLASSES

CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)

NORTH LEAD EDUCATIONAL CENTER
No.328,Stanly Raod, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## சிங்களம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

நாட்டின் தற்போதைய தேவையும் உங்கள் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றும் சிங்கள அறிவு.
அரச, தனியார் உத்தியோகத்தர்கள் உட்பட ஆர்வமுள்ள அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
சரளமாக சிங்களம் பேச, எழுத, வாசிக்க இலக்கணத்துடன் கற்பிக்கப்படும்.

Duration: 6 Months
Start on: 06.09.2011
Students can arrange suitable time

lecturer :S.K.Nathan B.Sc
(Experience tutor from Colombo)

London Metropolitan College
NO: 197, Arasady Road, Jaffna
(Between Kantharmadam Junction & Hindu Ladies)
Contact No:021 753 8395, 021 222 7230
LONDON METROPOLITAN COLLEGE

## கார் விற்பனைக்கு

Nissan TIIDA, Doctor Used, Brand New. 2007/12 Model wp/TF.... Auto, Full Option பருத்தித்துறையில் உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு-0777315473/0714447764

## வீடு, காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை ஆனைக்குட்டி வீதியில் 5¾ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு
தொடர்பு - 0777712927

## வீடு வாடகைக்கு உண்டு

இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலைக் கருகில் மீள்புனரமைக்கப்பட்ட 7 அறைகள், 2குளியலறைகள், 1சமையலறை, விசாலமான வரவேற்புக் கூடம் என்பன அமைந்த 4 பக்கமும் சுற்றுமதில் கொண்ட நவீன வடிவிலமைந்த வீடு வாடகைக்குண்டு.
(அரச, அரசசார்பற்ற நிறவனங்களுக்கு மட்டும்)
தொடர்பு:
0777207260,0750406396 (7557)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி புறொயிலர், கல்பேட் மற்றும் முட்டை விற்பனைக்கு உண்டு.
எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:
கோல்டன் பாம் சென்ரர்
இல.77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## 50% விலைக்கழிவு




USB, SD, FM ரேடியோ - 4200/=
CD, கசட், FM ரேடியோ - 2800/=
DVD றெக்கோட் பிளேயர் - 4500/=
மேலும் பல பொருள்கள் குறைந்த விலையில்

NEW SONY ELECTRONICS
இல. 220, 2 ஆம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Hot Line: 0774531955

## றோயல் குளுக்கோஸ்

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## வெளிநாட்டுக் கல்வி தொழில்வாய்ப்புக்கு திறக்கிறது... புதிய பாதை



UK, Australia
New Zealand
USA, Canada
பட்டப்படிப்பை
மிகக் குறைந்த செலவில்
மலேசியாவில் தொடங்கி
ஒரு வருடத்தில்
விரும்பிய நாட்டுக்குச் செல்லுங்கள்

- யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெறலாம்
- உணவு, தங்குமிட வசதி ஏற்பாடுகள்
- பெருந்தொகைப் பணம் காட்டத் தேவையில்லை
- நம்பகமான, உத்தரவாதமான வழிமுறைகள்

10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள்
தொழில் உத்தரவாதத்துடனான கற்கைநெறிகள்

உரிய கல்விச் சான்றிதழ்கள், ஆவணங்களைச் சமர்ப்பித்து ஒரு மாதத்தில் பயண ஏற்பாடு




கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
MEDIA தொ.பே.: 021 300 80 60

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

உ
சிவமயம்

07.08.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
**சுப்பையா மாரியாயி**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [04.09.2011] ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் [06.09.2011] செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.41, பிரப்பங்குளம்வீதி,
யாழ்ப்பாணம்.

சண்முகம் குடும்பத்தினர்
(சண்முகம் சைவ உணவகம்)

## REPAIRING

சகலவிதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor(LCD, CRT) UPS மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

NORTH LEAD
COMPUTER SALES AND SERVICE CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0774192275, Fax : 222 4460

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்தினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்றுமுன்தினம் இரவு படையினரால் தாக்கிக் காயப்படுத்தப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டுப் பேசிய பின்னர் அவர் விடுத்த அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் இராணுவத்தினரை முகாம்களுக்கு முடக்க அரசு தவறியதே தற்போது இந்தப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் காரணம்.

சிவில் சமூகத்துக்குள் இராணுவம் தேவையில்லை. வடக்கு - கிழக்கில் இராணுவம் குடிமனைகளுக்கு நடுவில் ஆங்காங்கே சிறிய கொட்டகைகளிலும் மினி முகாம்களிலும் சிறிய சிறிய முகாம்களிலும் இருப்பதுதான் இப்போதைய குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் காரணம்.

இவ்வாறு இருக்கும் இராணுவத்தினர்தான் கிறீஸ் பூதமாக அல்லது மர்ம மனிதர்களாக தமது வீடுகளுக்குள் நடமாடுகிறார்கள் என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள். சந்தேகத்துக்கு இடமாக நடமாடுபவர்களைத் துரத்திச் செல்லும் ஒவ்வொரு தடவையும், எங்கே இருந்தாலும் இராணுவத்தினர் அந்த இடங்களுக்கு வந்துவிடுகிறார்களே? அது எப்படி? என்று மக்கள் எழுப்பும் கேள்வி நியாயமானதே.

இராணுவத்தினரும் சும்மா வருவதில்லை. கொட்டன்கள், பொல்லுகளுடனேயே வருகிறார்கள். அவர்கள் மக்களைத் தாக்குவதிலேயே குறியாக இருக்கிறார்கள். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட நிலையில் பொதுமக்களைச் சோதனையிடுவதற்கும் அவர்களைத் தாக்குவதற்கும் இராணுவத்தினருக்கு யார் அதிகாரம் கொடுத்தது?

தமிழர்களுக்கு எதிராக இனவாதம் ஊட்டி வளர்க்கப்பட்ட சிங்கள இராணுவம், இப்போது போர் இல்லாத நிலையில் தனது வெறியைத் தீர்த்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டே இதுபோன்ற மர்ம மனிதர்கள் விவகாரத்தை உருவாக்கி, மக்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று குற்றஞ் சாட்டுவதற்கு எல்லா நியாயங்களும் இருக்கின்றன.

பொலிஸார் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்யத் தவறுவதாலேயே இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையே இவ்வாறான மோதல்கள் இடம்பெறுகின்றன என்பது கவனத்துக்கு உரியது. சிவில் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொலிஸாருக்கே உரியது. ஆனால் தமது கடமையைச் சரிவரச் செய்யத் தவறுகிறார்கள்.

இந்த நிலைமை இப்படியே நீடித்துச் செல்வது இன நல்லிணக்கத்தை ஒருபோதும் வளர்க்காது. தமிழர்களைப் பழிவாங்குவதுதான் சிங்கள இராணுவத்தினரும் சிங்களவர்களையே பெரும்பான்மையாகக் கொண்ட பொலிஸாரினதும் செயலாக இருந்தால், இன்றைய இளைஞர்களின் நிலைமை 80களின் இளைஞர்களின் நிலையை ஒத்ததே.

ஜனாதிபதியும் இந்த அரசும் இந்த நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று உண்மையில் விரும்பினால் இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுக்க முடியாது. நீங்கள் விரைந்து செயற்படவில்லை எனில், அவர்கள் விரைந்து முடிவெடுப்பார்கள்.

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது என்று கொழும்பில் உள்ள மேற்குலக ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

போரின் பின்னர் அரசு மேற்கொண்ட நல்லிணக்க முயற்சிகள் மற்றும் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை முன்னிறுத்தியே ஜெனீவாவில் அரச தரப்பு தன்னை நியாயப்படுத்தும் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்கமைவாக, வடக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களின் முழுமையான விவரம் மற்றும் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் விவரங்கள் என்பவற்றை வடக்கில் உள்ள அரச செயலகங்களில் இருந்து அரசு பெற்றுக்கொண்டுள்ளது.

''மெனிக் பாமில் ஆரம்பத்தில் எத்தனை பேர் இருந்தனர், இப்போது எத்தனைபேர் இருக்கின்றனர் மற்றும் மீள்குடியமர்வுப் பணிகளின் விவரங்கள் என்பவற்றை அரசு என்னிடம் கேட்டிருந்தது. நான் ஜெனீவாவுக்கு அழைக்கப்படவில்லை. யார் செல்கிறார்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது'' என்று கூறினார் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.சாள்ஸ்.

(உ-15)

## உடுவிலில் இராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ அறிக்கையுடன் அவர்களை மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துள் அடங்கும் மயிலிட்டிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து உடுவில் ஆலடியில் வசித்த மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனிடம் அந்த மக்கள் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினர் எமது பகுதிக்கு வந்த சற்றுநேரத்திலேயே சந்தேகநபர்களின் நடமாட்டத்தை நாம் வீடுகளில் உணர்ந்தோம். நாம் முதலில் பார்த்த போது 5 இராணுவத்தினர் நின்றனர். சற்று நேரத்தில் அவர்களில் ஒருவரைக் காணக் கிடைக்கவில்லை. பின்னர் யாரோ அடையாளம் தெரியாத நபர் நடமாடுவதாக எழுந்த கூச்சலை அடுத்து அந்த நபரைத் தேடி ஊர் ஆண்கள் அங்குமிங்குமாக அல்லோலகல்லோலப்பட்டு ஓடிக் கொண்டு இருக்கும்போது எதிரே அந்த 5 இராணுவத்தினரும் வந்தனர்.

அவர்கள் கைகளில் கொட்டன்களை வைத்திருந்தனர். எம்மீது கொட்டன்கள், துப்பாக்கிப் பிடிகளால் அடித்தனர். கர்ப்பிணிப் பெண் என்றுகூடப் பார்க்காமல் ஒருவரைத் தாக்கினர்.

இப்படி இராணுவத்தினர் மக்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குவதை நிறுத்த வேண்டும். அவர்களின் அடக்குமுறைக்குள் நாம் தொடர்ந்தும் வாழ முடியாது- என்றனர் மக்கள்.

(உ-14)


### வீடு வாடகைக்கு

புலோலி கிழக்கு, பருத்தித்துறையில்
4 அறைகள் கொண்ட வீடு
தென்னந்தோட்டக் காணியுடன்
அமைதியான சூழலில் வாடகைக்கு/
குத்தகைக்கு உண்டு.
தொடர்பு தொ.பே- 0777315473

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, அரச சேவையிலுள்ள "இலங்கை தொழில்நுட்ப சேவை (விசேட வகுப்பு)" மணமகனுக்கு 1970ம்-1974ம் ஆண்டுக் ...யில் பிறந்த A/L படித்த மணமகள் தேவை.
W.Sutharsan, 521/3, Galle Road, Wellawatte, Colombo-06. Tel: 0726987811

### மகத்தான ஒரு வேலை வாய்ப்பு!

நிறுவனங்களின் தன்னியக்கக்களத்தில் புதிய அறிமுகம்

பொறியியலாளர், தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற பணி நியமனங்களுக்கு பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

தேவைப்படுகின்ற இடங்கள்: யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை

நவீன முறையிலான தொழில் பயிற்சியும் அது தொடர்பான விளக்க புத்தகங்களும் இலவசமாக எம்மால் வழங்கப்படும்.

விரும்பப்படும் தகமைகள் - B.Sc, NDT, HNDE, NDES அல்லது இதற்கு சமாந்தரமான தகமைகள் (Electrical/Electronics)

Email - rumeya@dataad.co.uk Tel: (011) 7394190, 2 734744

### சேவை

கனடா, இத்தாலி போன்ற நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலாருக்கும் Work Permit கைவசம் உண்டு. நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் செய்து தரப்படும்.
011-2363880
0772-484403

### A GENERAL ENGLISH COURSE

ஆங்கிலம் கற்க ஆர்வமுடையவர்கட்கு:
பூரணமான கற்கை நெறி
சகலருக்குமுரியது
சகல பொதுப் பரீட்சைக்குமுரியது
Total immersion course
உச்சரிப்புடன் பேச, வாசிக்க, எழுத, இலக்கண, இலக்கியமயமானது.
ஆரம்பம்: 10.09.2011 காலை 10.00 மணி
ஆறுமாத கற்கைநெறி
வாரத்தில் இரு நாட்கள்; 04 மணித்தியாலம்
தொடர்பு: நிர்வாகி
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி தபால்பெட்டிச் சந்திக்கு அருகில் மெயின் வீதியில் 3¼ பரப்புடைய காணி (1¾ + 1½ துண்டங்களாகவோ) உடன் விற்பனைக்குண்டு. T.P: 0778449687

### வீட்டுடன் காணி தேவை

வீட்டுடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை.
(இடம்)
திருநெல்வேலி, பலாலி வீதிக்கு அண்மையில் அமைந்திருந்தல் நல்லது.
தொடர்பு: Ms. V. Thanishka
இல. 125, சென் மைக்கல் வீதி, கொழும்பு - 03.
011 2441084, 011 2323105 பக்ஸ் : 4611081
email : trade@biopowerlanka.com

### மணமகன் தேவை

1977 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ Divorced திருவாதிரை நட்சத்திரம், Masters படித்த தனியார் கம்பனியில் IT துறையில் வேலை பார்க்கும், கொழும்பில் வசிக்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை.
email: 20krish11@gmail.com அல்லது வி.இல. 4168, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### அறைகள் வாடகைக்கு உண்டு

அமைதியான சூழலில் அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவிகள், வேலை பார்க்கும் பெண்கள் விரும்பத்தக்கது. தேவையாயின் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 0772269804

### காணி விற்பனைக்குண்டு

நல்லூர், செட்டித்தெரு லேனில் 11 அடி பாதை, சுற்று மதில், நன்னீர் பங்குக் கிணற்றுடன் 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772007836

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கலைவாணி வீதியில் 6.3 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பு 10 இலட்சம்.
தொடர்பு: 0773-658485

### வீடு வாடகைக்கு

யாழ் இல 17/3, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. மேல் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

### கடைகள் வாடகைக்கு

யாழ். நகருக்கு மிகவும் அருகில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அண்மித்ததாக இரண்டு கடைகள் கொண்ட இடம் (551A, 551B) வாடகைக்கு விடப்படும். வியாபார ஸ்தாபனங்களின் பாவனைக்கு மிகவும் ஏற்றது.
தொடர்பு: 021 5105100/ 0777323156


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இராஜகோபால் (நவாலி)

புலவர் வீதி, நவாலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னம்பலம் - இலட்சுமியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் பொன்னம்பலம் இராஜகோபால் நேற்றுமுன்தினம் (02.09.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் மகளாகிய கமலாதேவியின் அன்புக் கணவரும் கிரிஜா, தயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சதானந்தன், கிருபானந்தன், சிவானந்தன் (London), நகுலேஸ்வரி, தவமணி, விஜயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது நவாலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு.* (சி/3579)

தகவல்:
பொ.கிருபானந்தன் (சகோதரன்).

## மரண அறிவித்தல்கள்



### சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

மூளாயைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும், தற்போது மானிப்பாயில் வசித்தவருமான திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (02.09.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - மாரிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகமணி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ராதா (கனடா), ஈசன் (கனடா), பாமா (கனடா), சசி (சுவிஸ்), காலஞ்சென்ற மங்கை மற்றும் ஆனந்தி, வாசுகி (நன்னடத்தை, அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம், கைதடி), தாஸ் (கனடா), மயூரன் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராசா, பாமினி (கனடா), கருணா (கனடா), சிவா (மின் இணைப்பாளர்), சித்திராங்கி (கனடா) ஆகியோரின் மாமியும், யதுர்ஷன் (கனடா), விதுர்ஷன் (கனடா), யனுஷா (கனடா), ரஜீன் (கனடா), கரீஸ் (கனடா), கபின், அரிஸ் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அதிகார செல்லமுத்து வீதி,*
*மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### திரவியம் பிலிப் தங்கம்மா



வசாவிளான் தோலகட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 12/9, மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் பிலிப் தங்கம்மா 02.09.2011 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - சூசானம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சூசை - மரியம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரவியம் பிலிப்பின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சகாயம், அனந்தாசி, அக்கினேஸ், ஞானம்மா, சந்தியாப்பிள்ளை மற்றும் வெலிச்சோர், இருதயம் (பிறதர்), மாகிறேட் ஆகியோரின் சகோதரியும், இமெல்டா (பபா), காலஞ்சென்ற ஜீவரெட்ணம் மற்றும் றாஜன் (கனடா), ஸ்ரான்லி (பிரான்ஸ்), வசந்தி (கனடா), எட்மன் (பிரான்ஸ்), யோண்சன் (பிரான்ஸ்), ஜன்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சூசைராஜா மற்றும் பபி (கனடா), ராஜினி (பிரான்ஸ்), சேகர் (கனடா), ஜெயராணி (பிரான்ஸ்), ஜெனா (பிரான்ஸ்), மரீனா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/9, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
S.சுதாஸ் (பேரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனை

உடுப்பிட்டி சந்தியில் 8 பரப்புக் காணியில் 1500 சதுர அடி புதிய அழகான வீடு - வெட்டுக்கிணறு, சுற்று மதிலுடன் அனைத்து பயன்தரு மரங்கள் உட்பட உடனடி விற்பனைக் குண்டு.

**தொடர்பு: 0777286006**

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

## மாபெரும் விலைத் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | ~~6660~~ | 4250 |
| மரக் கட்டில் | ~~7250~~ | 6000 |
| ஸ்ரீல் அலுமாரி | ~~13500~~ | 11250 |
| செற்றி செற் | ~~27000~~ | 22000 |

(மெத்தை(Arpico), கணினி மேசை, கணினி கதிரை, றெசின்ரேபிள், சோக்கேஸ், அபன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V. ஸ்ராண்ட், அலுவலக மேசை, பஞ்சு மெத்தை)



தொடர்புகளுக்கு- 0773583879, 0212227892

## PHYSICS : N.Edison

| A/L 2012 | A/L 2013 |
|---|---|
| மின்புலம் | நீர்நிலையியல் |
| Tue, Thur 8.30-4.30pm | Mon, Tue 5.00-6.00pm |

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## Physics A/L 2013

Basic & Mechanics Paper classes
மாதத்தில் குறைந்தது 8 பரீட்சைகளும் அதற்குரிய விளக்கங்களும்.
காலம்
சனி, ஞாயிறு: 2pm - 3pm ★ இடம்
Telephone: 0777158667
பட்டப்படிப்புக் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கி முன்பாக யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 10.09.2011
By: S.Uiroviyam B.Sc. spl,Dip in Edu.

V-talk
English பக்கம் 30 பார்க்கவும்

## அறை வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு குளியலறை, Toilet வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்குத் தேவை. நல்லூர், வைமன் வீதி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, இலுப்பையடிச் சந்தி, பிரதான வீதி, திருநெல்வேலி, நாச்சிமார் கோயிலடி, கந்தர்மடம், கல்வியங்காடு, இருபாலை, மானிப்பாய் ஆகிய பகுதிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0776110802, ஜெயன்

## ரூபா 50,000/- க்கு

மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

### ஐஸ் கிறீம் இயந்திரம்



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW
Price Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 077 391 8870, 077 1066902

## After A/L?

CIMA-UK Per Level Rs.14,400 | Engineering-USA 80% off | BIT University of Colombo Per year Rs.20,000 | Multimedia USA 80% off

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Government Schol.

Diploma Courses.. Free Course fee* MsOffice, AutoCAD, Web Designing *Hardware *Accounting *DTP *English,

MCS 324, Palaly Road, Campus Junction, Jaffna.
Supported By UNDP/JRRP

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses கணினி,சதுரங்கம், ஆங்கில Games
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,

## ENGLISH

SPOKEN AND GRAMMAR
G.A.Q,B.A-I PAPER CLASSES
புதிய பிரிவு:- ஆரம்பம் 07.09.2011
காலை 9.30
இடம்:-JAFFNA COLLEGE UNDER GRADUATE DEPT.
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக
நேரம்: திங்கள்/புதன் 09.30 காலை

## e.com After A/L Next What ?

Computer Training Centre
Join with us to get best computer education.
80% Discount

ISO 9001-2008 சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணினிக் கற்கைநெறியினை குறைந்த கட்டணத்தில் நீங்களும் பயின்றுகொள்ள இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்......



- Diploma in Hard ware/Software Engineering
- Diploma in Business Management
- GVET (Australian English Course)
- Certificate in Internet & E-Mail
- Diploma in Computing

Call... 021-7429005, 021-7200902
Head Office: No.95A Temple Road, Nallur, Jaffna
Branch: K.K.S Road, Kondavil, Jaffna.

முதல் தடவையாக **யாழ். மண்ணில்** ஆங்கிலக் கல்வியின் புதிய பரிமாணம்!

# NALRAVI SPOKEN ENGLISH



தலைநகரில் 20 வருடங்களுக்கு மேலாக தலைசிறந்து விளங்கும் பிரபல ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவி அவர்களால் நடாத்தப்படும் மாபெரும் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை.



A/L நிறைவு செய்த மாணவர்களுக்காக
குறிப்பு:- எங்கள் கல்வி நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு முதல் நாளன்று மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து கொள்ளலாம்.

முதல் நாள் பயிற்சி
(செப்டெம்பர் 5ஆம் திகதி அன்று)

## இலவசம்

செப்டெம்பர் 5ஆம் திகதியன்றிலிருந்தே (1ஆம் நாள்) ஆங்கிலம் பேச ஆரம்பித்து பயிற்சிப் பட்டறை இறுதியில் சரளமாக ஆங்கிலம் பேசுவீர்கள் என்ற தன்னம்பிக்கையை முதல் நாளிலேயே பெறுங்கள்.

இது நடக்குமா? இல்லாவிட்டால்

**விளம்பர ஆசை வார்த்தைகளா?**

உண்மையை கண்டறிய வாரீர்.

மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வெளிநாடு செல்ல இருப்போர், KET மற்றும் IELTS பரீட்சைக்கு தோற்றுவோர், அலுவலகம் செல்வோர், இல்லத்தரசிகள் போன்றவர்களுக்காகவும்

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | :- யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| பயிற்சிக் காலம் | :- 1 மாதம் / 100 மணி நேரம் |
| நடைபெறும் காலம் | :- செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதி வரை |
| நேரம் | :- குழு 1 - காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை; குழு 2 - நண்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை |
| பயிற்சிக் கட்டணம் | :- Rs.6,500/= (NSE பயிற்சி Handouts, Audio CD க்கள் உட்பட) முதல் நாள் பயிற்சி இலவசம். |

NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond
527, Galle Road, Colombo 6. Tel 2363656 Fax 2360004
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

எங்கள் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை இறுதியில் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு அவர்களின் பெறுபேறுகளிற்கேற்ப தரங்கள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் கொடுக்கப்படும்.

(சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALRAVI ENGLISH LANGUAGE CENTRE NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org